REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஒக்டோபர் 10 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 240 | Tuesday 10, October, 2023 | 16 பக்கங்கள் | 50/-




பம்பலப்பிட்டி ரயில் நிலைய பழுதடைந்த மேம்பாலம்

## பத்து நாட்களுக்குள் அகற்றி புதிய தற்காலிக ஏற்பாட்டை செய்யவும்



கொழும்பு, பம்பலப்பிட்டி ரயில் நிலையத்திலுள்ள பழுதடைந்த பயணிகள் மேம்பாலத்திற்கு பதிலாக, புதிய பாலம் அமைக்கும் பணியை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னவுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இதுகுறித்து அறிவித்துள்ளார். பயணிகளின் வசதி கருதி, பத்து நாட்களுக்குள் தற்காலிக

06

## ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு

### தொழிற் கல்விக்காக 25,000 ரூபா நிதியுதவி

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகள் தொழிற்பயிற்சிகளை மேற்கொள்வதற்காக நிதியுதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை ஊழியர் நம்பிக்கை நிதியம் எடுத்துள்ளது. ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடநெறியொன்றை மேற்கொள்வதற்காக ஆகக் குறைந்தது 25,000 ரூபா நிதி ஒத்துழைப்பொன்று அந்த சபை மூலம் வழங்கப்படவுள்ளது.

பாடத்திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும்போது, மேற்படி சபையின் இணையத்தில்

06

## இலங்கை, இஸ்ரேலியர்களின் பாதுகாப்பில் முக்கிய கவனம்

### ஜனாதிபதி அமைச்சரவைக்கு விளக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை மற்றும் இஸ்ரேலிய மக்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் இடம்பெற்று வரும் தாக்குதல்கள் மற்றும் இலங்கை, இஸ்ரேலிய மக்களின் பாதுகாப்பு தொடர்பில் அமைச்சரவைக்குத் தெளிவு படுத்திய போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள ஜனாதிபதி, "இஸ்ரேலில்

06

### 30 வருடங்களின் பின்னர் மீண்டும்

# இலங்கை - இந்திய பயணிகள் கப்பல் சேவை இன்று முதல்

### பிரதமர் மோடி காணொளி மூலம் தொடக்கி வைக்கின்றார்



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

இந்தியா, இலங்கைக்கிடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று 10 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக துறைமுக அபிவிருத்தி, கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

30 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் இன்று காலை தமிழ் நாட்டின் நாகப்பட்டினத்திலிருந்து இக்கப்பல் சேவை ஆரம்பமாகவுள்ளது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி காணொளி மூலம் இந்தக் கப்பல் சேவையை உத்தியோகபூர்வமாக தொடக்கி வைக்கவுள்ளார்.

'செரியாபாணி' என்ற மேற்படி இக்கப்பல் இன்றைய தினம் தமிழகத்தின் நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறை வரை முதலாவது கப்பல் சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

மேற்படி கப்பல் நேற்றும் நேற்று முன்தினமும் பரீட்சார்த்த சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இப்பரீட்சார்த்த சேவை வெற்றிகரமாக அமைந்ததாக

06

## தடை விதிக்கப்பட்டிருந்த 299 பொருட்களுக்கு இறக்குமதி தளர்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வாகனங்கள் அல்லாத, தற்காலிகமாக இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ள 299 பொருட்களுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், இறக்குமதிக்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். இது தொடர்பில் புதிய சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், பொருளாதாரத்தை மேலும் விரிவு படுத்துவதற்காக இந்த இறக்குமதி கட்டுப்பாட்டை தளர்த்தியதாக தெரிவித்தார்.

அதனைத் தவிர இறக்குமதிக்கான தடை தளர்த்தப்படும் போது மீன் ஏற்றுமதி மற்றும் கைத்தொழில்ஏற்றுமதிப்பொருட்களில்அளவு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## விமானத் துறையால் கடந்த எட்டு மாதங்களில் ரூ. 22 பில்லியன் இலாபம்



சேவை வழங்கலூடாக நாட்டின் விமானத்துறை ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை 22 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டியுள்ளதாக துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். இதில் சுமார் 10 பில்லியன் ரூபா திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்டபோதே, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகள் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையம், இதுவரை 200 விமானப் போக்குவரத்து சேவைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இஸ்ரேலிலுள்ள இலங்கையர்களை பாதுகாக்கவும், தகவலறியவும் ஏற்பாடுகள்

### வட்ஸ்அப், ஹொட்லைனூடாக தொடர்புகள்



இஸ்ரேலிலுள்ள இலங்கை ஊழியர்களின் பாதுகாப்புத் தொடர்பிலான விடயங்களை கண்டறிய, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுபற்றித் தெரிவித்த அமைச்சர்: இலங்கை தொழிலாளர்களை பாதுகாப்பதற்காக இஸ்ரேலின் தற்போதைய

06

## அலங்கார மீன் ஏற்றுமதியில் மீண்டும் பாரிய வளர்ச்சி

### கண்காட்சி நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கொரோனா தொற்று பரவிய காலப்பகுதியில் பின்னடைவு கண்டிருந்த அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் ஏற்றுமதித் தொழிற்றுறையானது தற்போது மீண்டும் வளர்ச்சியடைந்து வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இம்முயற்சிகளுக்கு கடற்றொழில் அமைச்சும், நெக்டா நிறுவனமும் கூடுதல் கவனமெடுத்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். தப்பிரபோன் நிறுவனத்தினரால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "அக்கியுவாபியஸ்டா" எனும் அலங்கார மீன்கள் கண்காட்சி நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு

06

## வனத்துறையின் 3,32000 ஏக்கர் காணிகளை கோடீஸ்வரர்களுக்கு கைமாறி மோசடி

### சுற்றாடல்துறை பாராளுமன்ற மேற்பார்வை குழு தகவல்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



நாடளாவிய ரீதியில் வன பாதுகாப்புத் துறைக்கு சொந்தமான 3,32,000 ஏக்கர் காணிகள் கோடீஸ்வர வர்த்தகர்கள் மற்றும் பிரபுக்கள் உள்ளிட்டோர்களுக்கு விவசாயம் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வைக்குழு தெரிவித்துள்ளது. இவ்வாறு, வன துறைக்கான காணிகள் தன்னிச்சையாக பலருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதால், நாட்டின் சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படலாம் என்றும் அந்த குழுவின்

06

## சிங்கள திரைத்துறையின் பிரபல நடிகர் ஜக்சன் அன்டனி காலமானார்!



சிங்கள திரைத்துறையின் பிரபல நடிகர் ஜக்சன் அன்டனி தனது 65 ஆவது வயதில் காலமானார். வாகன விபத்தொன்றில் காயமடைந்த நிலையில், கடந்த 14 மாதங்களாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை

06

## க.பொ.த சாதாரண பரீட்சை அடுத்த வருட மே மாதத்தில்

### அமைச்சர் சுசில் அறிவிப்பு !



டிசம்பரில் நடத்தப்படவிருந்த கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை அடுத்த வருடம் (2024) மே மாதம் ஆரம்பத்தில் நடத்தப்படும் என, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். சரியான திகதியை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பார் எனவும் அமைச்சர்

06

## ஏழுமலையான் கோயிலில் பக்தர்கள் அதிகரிப்பு:உண்டியல் வருமானம் நூறு கோடி

**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

**11 ஆயிரம் கிலோ தங்கம், ரூ.7,000 கோடி டெபாசிட்**



திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பக்தர்களின் வருகை தொடர்ந்து அதிகரிப்பதால் மாதந்தோறும் உண்டியல் வருமானம் ரூபா நூறு கோடியை தாண்டுகிறது. கலியுக கண்கண்ட தெய்வம் எனப்போற்றப்படும் திருப்பதி ஏழுமலையானில்,

06

## தங்கத்தின் விலை அதிகரிப்பு



நாட்டில் தங்கத்தின் விலையில் சிறு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக, தங்க சந்தை நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய நேற்று திங்கட்கிழமை (09) கொழும்பு செட்டியார் தெருவில் ஒரு பவுண் 22 கரட் தங்கத்தின் விலை 2,000 ரூபாவால் அதிகரித்துள்ளது. இதன் புதிய விலை 155,400 வாக உயர்ந்துள்ளது. இந்நிலையில், தங்கத்தின் விலை கடந்த

06

## பணிப் பெண்களை கொலை செய்து நகைகள் கொள்ளை

### கழிவறையிலிருந்து சடலங்கள் மீட்பு

மாத்தறை பிரதேசத்தின் ப்ரீத்தி பிரவுன்சில் பகுதியிலுள்ள வீடொன்றில் பணிபுரிந்து வந்த 67 மற்றும் 70 வயதான பெண்களை கொலை செய்த சிலர், அங்கிருந்த பொருட்களை கொள்ளையிட்டுள்ளதாக, மாத்தறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். வெளியே சென்றிருந்து வீட்டுரிமையாளர், வீட்டுக்கு வந்தபோது, வேலையாட்களை காணாது திகைத்துள்ளார். அயலவர்களுடன் இணைந்து தேடிய வேளையில், அவ்விருவரும் கொலை செய்யப்பட்ட நிலையில், கழிவறைக்குள்

06

## தெஹிவளையில் சுற்றிவளைப்பு ஆறு வாள்களுடன் நால்வர் கைது



தெஹிவளை தர்மபாலராம வீதியிலுள்ள வீடு ஒன்றை சுற்றிவளைத்து சோதனையிட்ட விஷேட அதிரடிப்படையினர், கூரிய ஆயுதங்களுடன் நால்வரை கைது செய்ததாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் களுபோவில முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவினர், இச்சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன்போது, 20 மில்லிகிராம் ஹெரோயின் ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

06

## வர்த்தகரின் கண்களில் மிளகாய்த் தூள் தூவி ரூ. 45 இலட்சம் கொள்ளை

### மீகொடை பகுதியில் சம்பவம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



மீகொடை பொருளாதார மத்திய நிலையத்தில் வர்த்தகர் ஒருவரின் கண்களில் மிளகாய்த் தூளை தூவி, 45 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளதாக மீகொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீகொடை பொருளாதார மத்திய நிலையத்தில் இரவு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதிகாலையில்,

06

## கொழும்பில் அதிகரிக்கும் டெங்கு



கொழும்பின் நான்கு பிரதேசங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகரித்து வருவதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

நாரஹேன்பிட்டி, கிருலப்பனை, மோதர மற்றும் மட்டக்குளிய பிரதேசங்களிலேயே, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக பிரதம வைத்திய அதிகாரி டொக்டர் ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் இந்தப் பிரதேசங்களில் நாளாந்தம் சுமார் இரண்டு டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்த நிலையில், தற்போது

06

### மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை

## மூவர் மரணம் 25 பேர் காயம் 75 ஆயிரத்து 734 பேர் பாதிப்பு

### 1138 வீடுகள் சேதம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



நாட்டில் நிலவும் கடும் மழை, காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலையால், மூவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 25 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இதில், 13 மாவட்டங்களில் 75,734 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

06

# நகர்வலம்



## இந்து சமயம் தொடர்பில் தெளிவுபெற

# அரச நிறுவன அதிகாரிகள் மயூராபதி ஆலயத்துக்கு நல்லெண்ண விஜயம்







ஏ.எஸ்.எம். ஜாவித்

## இனங்களிடையே சமய நல்லிணக்கத்தை உருவாக்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க திட்டம்

புத்தசாசன அமைச்சு 'சமயங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில்' சமயங்களின் வழிபாட்டு முறைகளை அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் அலுவலர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்றை வெகுசிறப்பாக முன்னெடுத்து வருகிறது.

அதனடிப்படையில், இந்து சமய கலாசார திணைக்களம் மேற்படி நிகழ்வை கடந்த சனிக்கிழமை (07) வெள்ளவத்தை மயூரா பிளேசிலுள்ள மயூராபதி இந்து ஆலயத்தில் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தது. மேற்படி நிகழ்வில் பௌத்த, கத்தோலிக்க, முஸ்லிம் மற்றும் இந்து கலாசாரத் திணைக்களங்களைச் சேர்ந்த சுமார் 70க்கும் மேற்பட்ட திணைக்கள அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, இந்து மக்களின் சமய அனுஷ்டானங்கள் எவ்வாறு இடம் பெறுகின்றன, அவர்களின் சமய முறைகளை எவ்வாறு செய்கின்றனர், இந்துக் கோவில்களில் வைக்கப்பட்டுள்ள விக்கிரகங்களின் வகைகள், அவற்றின் வரலாறுகள், இந்து திருமண நிகழ்வுகள், மரண சமயக் கிரியைகள் எவ்வாறு மேற்கொள்வது, அவர்களின் ஆடை அலங்காரங்கள் எவ்வாறு கடைப்பிடிக்கப்படுகின்றன, கோவில்களில் பக்தர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பன தொடர்பான விளக்கங்கள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தெளிவுபடுத்தப்பட்டன.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக புத்தசாசன மத விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரண, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் நிஹ்மதுல்லா நிலோபர் உள்ளிட்ட ஏனைய சமயத் திணைக்களங்களின் உதவிப் பணிப்பாளர்கள், நிருவாக உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களங்களின் அலுவலர்கள், ஆலயங்களின் குருக்கள், சிவஸ்ரீ கேசக்குருக்கள், சிவஸ்ரீ லக்சிமிகாந்தஜெகதீசக் குருக்கள், சிவஸ்ரீ சுப்ரமணியக் குருக்கள், மயூராபதி ஆலய அறநெறிப்பாடசாலையின் மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் அமைச்சருக்கு இந்து சமய கலாசார திணைக்களப் பணிப்பாளரினால் பகவத் கீதை நூலும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## "SAEEDA" நிறுவன நிதி உதவியில்

# கம்பஹா மற்றும் மினுவாங்கொடை பிரதேச பாடசாலைகள் அபிவிருத்தி







### நௌஸர் பௌஸிக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராட்டு

கம்பஹா மற்றும் மினுவாங்கொடை கல்விப்பிரிவிலுள்ள வளப்பற்றாக் குறையுள்ள பாடசாலைகளை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்து கல்விக்கு ஊக்கமளிக்கும் நோக்கில் "SAEEDA" நிறுவனம் முன்வந்துள்ளது. நிறுவனத்தின் ஸ்தாபகரும் முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸியின் எண்ணக்கருவில் இந்நிறுவனம் தனது சேவையினை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வருகிறது.

மேற்படி கல்விப்பிரிவிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் மினுவாங்கொடை கல்வி வலய காரியாலயத்தில் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் நௌஸர் பௌஸியின் பங்கு பற்றலுடன் சிறப்பாக நடைபெற்றது. இதன் கீழ் மினுவாங்கொடைவலயகல்விப் பிரிவில் உள்ள 8 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன், இப்பாடசாலைகளுக்கு 100 இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தில் மினுவாங்கொட நில்பனாகொட மகா வித்தியாலயம், ஹொரம்பெல்ல சீலவிமல மகா வித்தியாலயம், மினுவாங்கொட கோரசரணசிங்க மகா வித்தியாலயம், நெதகமுவ கனிஷ்டப் பாடசாலை, ஓபாத ஸ்ரீ குணானந்தா ஆரம்பப் பாடசாலை, உடுகம்பல றோமன் கத்தோலிக்க ஆரம்பப் பாடசாலை, உடுகம்பல ஆரம்பப் பாடசாலை மினுவான்கொட மற்றும் அல் அமான் முஸ்லிம் பாடசாலை என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன் கீழ் இப்பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனுக்கோரல் (IFB)**

| இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01 | வீதிக்காப்பு பாதுகாப்பு பொருட்கள் (Guardrail Materials) மற்றும் பாகங்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிவேக பாதை நடத்துதல், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தல் பிரிவிற்கு வழங்கல் மற்றும் விநியோகித்தல். RDA/EOM&M/GDRL-SUP/2023/02 |

மேற்கூறிய பணிகளுக்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2023.10.10 ஆம் திகதி முதல் 2023.10.31 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரச்சபை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளத்தை www.rda.gov.lk பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழு,
வீதி அபிவிருத்தி அதிகார சபை.



**பெறுகை அறிவித்தல்**

**இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு -10**

**இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு லொன்டறி இரசாயனப் பொருட்களை வழங்குதல்**

இலங்கை தேசிய வைத்தியசாலையின் தேவைப்பாட்டிற்காக கீழ்க்காணும் உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| | விபரம் | தொடர்பு இலக்கம் |
|---|---|---|
| 1. | Bacteriostatic Agent | SI/08/2023 |
| 2 | Heavy Duty Detergent | |
| 3. | Fabric Emulsifier | |
| 4. | Oxy Bleach | |
| 5. | Liquid Bleach | |
| 6. | Chlorine Bleach | |
| 7. | Fabric Softener | |
| 8. | Sour Neutralization | |

மேற்படி வழங்கலுக்காக தகைமையுள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் அத்துடன் லொன்டரி இரசாயனப் பொருட்களுக்காக மீளளிக்கப்படாத ரூ. 3.000.00 வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின் 2023.10.11 முதல் 2023.10.31 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவில் குறித்த கேள்வி நிபந்தனைகளுடன் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2023.11.01 மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்திய நிபுணர் டபிள்யூ.கே. விக்கிரமசிங்ஹ**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**


## மாத்தறை மாவட்டத்தில் கடும் வெள்ளம்;

# 11,692 பேர் இடம்பெயர்வு

(வெலிகம தினகரன் நிருபர்)

மாத்தறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் 6,301 குடும்பங்களைச் சேர்ந்த 11,692 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் மாத்தறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 11 பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



இவர்களுல், மாத்தறை திஹகொட, கம்புறுப்பிட்டிய, மாலிம்பட, அதுரெலிய, தெவிநுவர, திக்வெல்ல ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்டவர்களே அதிகம் பாதிக்கப்பட்டவர்களாவர். தொடர்ந்து 12 தினங்களாக இவர்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு முடங்கப்பட்டுள்ளனர். மேலும் மாத்தறையிலிருந்து அகுரஸ்ஸ, கம்புறுப்பிட்டிய, ஹக்மன, கத்துவ, தெய்யந்தர, ஊருபொக்க மற்றும் அகுரஸ்ஸ கம்புறுப்பிட்டிய பகுதிகளுக்கு செல்லும் வீதிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் வீடுகளும், வியாபார நிலையங்களும் சேதமாகியுள்ளன.

# அண்ணாமலைப் பல்கலைக்கழக 89 ஆவது நிறுவுனர் தின விழா

## மருத்துவ நூலும் வெளியீடு



உலகப் புகழ்பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 89ஆவது நிறுவுனர் தின விழா கொண்டாட்டங்கள் அண்மையில் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. துணைவேந்தர் டாக்டர் கதிரேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்கலைக் கழக முன்னாள் மாணவரான பிரபல முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை நிபுணர் பேராசிரியர் எஸ்.எம். பாலாஜி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு நிறுவுனர் தின உரையை வழங்கினார்.

அவர் தனது உரையில், தற்போதைய துணைவேந்தரின் திறமையான தலைமையின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நினைவுகூர்ந்தார். இவ்விழாவில் பேராசிரியர் டாக்டர் எஸ்.எம்.பாலாஜி எழுதிய 'Text book of Maxillofacial Surgery' புத்தகத்தின் 04ஆவது பதிப்பு துணைவேந்தரால் வெளியிடப்பட்டது. இதன் முந்தைய பிரதிகள் இந்தியா மற்றும் உலகின் பல நாடுகளிலும் பல் மருத்துவ மாணவர்களால் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு, மருத்துவ உலகில் முக்கியத்துவம் வாய்ந்த நூலாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

# உதவிச் சங்கம் திறந்து வைப்பு



கொழும்பு 15, மிஹிஜய செவன அடுக்குமாடி வீடமைப்புத் திட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இலவச (MJSA) மரண உதவிச் சங்கம் திறப்பு விழா சங்கத்தின் தலைவர் மௌலவி ஹஸ்வான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மிஹிஜய செவன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திஸ்ஸ மல்தெனிய 'Mjsa Janaza Foundation' அலுவலகத்தை வைபவரீதியாக திறந்து வைத்தார். இந் நிகழ்வில் தவலசிங்ஹாராம விஹாராதிபதி வஸ்கடுவே சிரிரத்தன, ஹேனமுல்ல மஸ்ஜிதுல் பதுரியா பள்ளிவாசல் இமாம் மௌலவி ஹாரிஸ்,செயலாளர் திருமதி ஜெஸ்மின், பொருளாளர் ஏ.ஆர்.எம். முஸம்மில் மற்றும் சங்க உறுப்பினர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஒட்சிசன் குறைந்ததால் மீன்கள் உயிரிழப்பு



திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரத்தின் புறநகர் பகுதியான கும்பிச்சங்குளம் ஏரியில் மீன்கள் செத்து மடிவதற்கு பாசிகள் வளர்ந்து தேவையான அளவு ஒட்சிசன் குறைந்ததே காரணம் என கண்டறியப்பட்டுள்ளது. ஏரியில் நீர்மட்டம் குறைந்ததாலும், பாசிகள் பெருகியதாலும், ஏரியில் மீன்கள் அதிகமாக இருப்பதால், தேவையான அளவு ஒட்சிசன் குறைவதால் மீன்கள் இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் ருவன் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த நாட்களாக குறிப்பிட்ட இக்குளத்தில் உள்ள அதிகமான மீன்கள் செத்து கரை ஒதுங்கும் நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் கடந்த காலங்களில் இக்குளத்தில் இலட்சக்கணக்கான மீன் குஞ்சுகள் விடப்பட்டு அவை நன்றாக வளர்ச்சிகண்ட நிலையில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஒக்டோபர் 10 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
லுஹர் - 11.59
அஸர் - 03.16
மஃரிப் - 05.58
இஷா - 07.08

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் புரட்டாதி 24
ராகுகாலம் : பகல் : 2.58 - 4.28வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# விவசாயத்துறை அதிகாரிகளுக்கு கொரியாவில் பயிற்சியளிக்க பேச்சு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையின் விவசாயத்துறை அதிகாரிகள் மற்றும் துறைசாரந்த நிபுணர்களுக்கு கொரியாவில் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இவ்வேலைத்திட்டம் தொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, கொரிய தூதுவர் மியோன்லியுடன் விசேட பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதையடுத்தே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொரியாவின் சர்வதேச ஒத்துழைப்புக்கான முகவர் நிலையமான KOICA இப்பயிற்சிகளை வழங்க முன்வந்துள்ளது.

சிறந்த அறுவடை, இரசாயன மற்றும் இயற்கைப் பசளையை உபயோகித்தல், தொழினுட்பங்களைப் பயன்படுத்தி சிறந்த விதைகளை உற்பத்திசெய்தல், விவசாயத்துறையில் நவீன தொழினுட்பத்தை பிரயோகித்தல் என்பவற்றுக்கான பயிற்சிகள் இலங்கையர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

கொரிய சர்வதேச ஒத்துழைப்புக்கான முகவர் நிறுவனம் கடந்த சில வருடங்களுக்கு முன்னர், இலங்கை விவசாய அதிகாரிகளுக்கு உயர்தொழினுட்ப ரீதியான பயிற்சிகளை வழங்கியுள்ளது. இடைப்பட்ட காலத்தில் இந்த வேலைத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் மீண்டும் இதனை ஆரம்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உரப் பாவனை தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள கொரிய தூதுவர், தென்கொரியாவில் விவசாயிகள் சிறந்த அறுவடையைப் பெற்றுவருகின்றனர். இவர்கள் இரசாயன உரம் மற்றும் இயற்கைப் பசளையை முறையாக உபயோகப்படுத்துகின்றனர்.

இந்த வகையில் இலங்கை விவசாயத்துறை உத்தியோகத்தர்களுக்கு இதற்கான பயிற்சிகளை பெற்றுக்கொடுக்க முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் வேண்டுகோளை கொரிய அரசாங்கத்திடம் சமர்ப்பித்து, சிறந்த பிரதிபலனை பபெற்றுத்தர முடியுமென்றும் இதன்போது கொரியத் தூதுவர் அமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

# இஸ்ரேலில் உள்ள உறவினர்களின் தகவல்களைப் பெற 1989 இலக்கம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவிப்பு

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனுக்கிடையில் இடம்பெறும் மோதல்களால், நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இலங்கையரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.இது தொடர்பில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொதுமுகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி செனரத் அறிவித்துள்ளார்.

இஸ்ரேலில், இலங்கையர்கள் தொழில் செய்யும் இடங்களில் ஏதேனும் பிரச்சினை இருக்குமானால் 0094716640560 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு தகவல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்களுக்கு தேவைப்படும் உதவிகள் தொடர்பில் தகவல் தெரிவிப்பின், தூதுவராலயம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான உதவிகள் மற்றும் தகவல்களை வழங்குவதற்கு இரண்டு அதிகாரிகள் முழு நேரக் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். அதேநேரம், இஸ்ரேலில் உள்ள உறவினர்கள் தொடர்பில், தகவல்கள் கிடைக்காதிருப்பின், 1989 என்ற துரித இலக்கத்துக்கு தகவல் வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாடு மொரோகோவில் நேற்று ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாடு நேற்று மொரோக்கோவில் ஆரம்பமானதாகவும், பல்வேறு நாடுகளின் நிதியமைச்சர்கள் மத்திய வங்கியின் ஆளுநர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த உயரதிகாரிகள் இம்மாநாட்டில் கலந்துகொள்வதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சிம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இலங்கையானது சர்வதேசத்தில் ஏற்படுத்தியுள்ள நம்பிக்கை யை மேலும் பலப்படுத்துவதற்கு, இம்மாநாடு சிறந்த சந்தர்ப்பமாக அமையுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி மாநாட்டில் இலங்கையின் சார்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உள்ளிட்ட குழுவினர் இதில். கலந்துகொள்கின்றனர். அந்தவகையில் இலங்கையானது சர்வதேச ரீதியில் மேற்கொண்டுவரும் நம்பிக்கைக்கான நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் இம்மாநாட்டை பயன்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார ஸ்திரத்தன்மை 2024 ஆம் ஆண்டு முன்னேற்றத்தை நோக்கிப் பயணிக்கும். இதற்குத் தேவையான அனைத்து பின்புலங்களும் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை நியமனம்

நாட்டில் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அதிகார சபைக்கு, தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.மாலைதீவுகளில் உள்ள ஏர்னஸ்ட் என்ட் யங் (Ernst & Young ) நிறுவனத்தின் சிரேஷ்ட பட்டயக்கணக்காளரும், முன்னாள் ஆலோசகருமான அர்ஜுன ஹேரத் இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அரச தரப்புச் சட்டத்தரணி நிசித் அபேசூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி சௌமியா அமரசேகர, டிஜிட்டல் சட்ட நிபுணரும் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்ட வரைவு குழுவின் தலைவருமான ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்தன, சர்வதேச தர நிர்ணய அமைப்பின் சான்றளிக்கப்பட்ட கணக்காய்வாளரும் தொழினுட்ப முகாமைத்துவ நிபுணருமான பிம்சர செனவிரத்ன, பொறியியல் மற்றும் டிஜிட்டல் மூலோபாய நிபுணர் ஷெஹான் விஜேதிலக ஆகியோர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இலங்கையின் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம். 19 மார்ச் 2022 ஆம் திகதி சபாநாயகரால் சான்றளிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. இதன் மூலம் தெற்காசியப் பிராந்தியத்தில் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்காக சட்டம் இயற்றிய முதல் நாடாக இலங்கை மாறியுள்ளது.

# பெரும்போகத்திற்கான யூரியா இன்று முதல் விநியோகம்

## 50 கிலோ மூடை 9,000 ரூபா

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பெரும்போகத்திற்கான யூரியா உரம் இன்று முதல் (10) விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பெரும்போகத்திற்கு தேவையான 21 ஆயிரம் மெட்ரிக்தொன் யூரியா உரமே, இன்று முதல் விநியோகிக்கப்பட வுள்ளது. லங்கா உர நிறுவனமும் கொழும்பு வர்த்தக உர நிறுவனமும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 50கிலோ யூரியா மூடையொன்று ஒன்பதாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நெல் பயிர் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஹெக்டேயருக்கு 15,000 ரூபாவை உரம் கொள்வனவுக்காக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பதவி உயர்வு

**தெஹிவளை கல்கிஸை விஷேட நிருபர்**



விசேட அதிரடிப்படையின் படைத்தளபதியாக கடமையாற்றிய சட்டத்தரணி வருண ஜயசுந்தர தற்போது சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், பாதாள உலகச் செயற்பாடுகள் மற்றும் சர்வதேச போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்த கச்சிதமாக பணிகளை கையாண்டவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தோணி கவிழ்ந்து இருவர் பலி நால்வர் பொதுமக்களால் மீட்பு

**புதிய காத்தான்குடி தினகரன், பெரிய போரை தீவு தினகரன் நிருபரள்**

மட்டக்களப்பு நாவலடி வாவிப் பகுதியில் ரிக் டொக் செய்வதற்காக தோணியில் சென்றவர்களில் இருவர் சடலமாக மீட்கப்பட்டனர்.படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் நீரில் மூழ்கியே இவர்கள் உயிரிழந்தனர். இதில்,நால்வர் பிரதேச மக்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இத்துயரச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட நாவலடி பகுதியின் சீலாமுனைப்பகுதியிலிருந்து ஆறு இளைஞர்கள் தோணியில் வந்துள்ளனர். அப்பகுதியில் டிக்டொக் வீடியோ செய்துவிட்டு மீண்டும் இவர்கள் தோணியில் சீலாமுனைக்கு திரும்பிய போதே தோணி கவிழ்ந்துள்ளது.

இதன்போது இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்ததுடன், நால்வர் பிரதேச மக்களால் காப்பாற்றப்பட்டனர்.

மட்டக்களப்பு சீலாமுனைப்பகுதியை சேர்ந்த 19 வயதுடைய தவசீலன் கிருஸாந்த்,மாமாங்கத்தைச் சேர்ந்த 18 வயதுடைய பிரபாகரன் பிருஜனன் ஆகியோரே வாவியில் மூழ்கி உயிரிழந்தனர்.

நீரில் மூழ்கிய இளைஞர்களின் சடலங்களை பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து மீட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நேற்று கல்விசார் ஆய்வுமாநாடு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட கல்விசார் ஆய்வு மாநாடு நேற்று (09) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் வரை இடம்பெற்றது. கோப்பாயில் கலாசாலை நிறுவப்படுவதற்கு பின்புலமாக இருந்த சேர் பொன் இராமநாதன் பெயரிலும் காரைநகர் ச.அருணாசலம் உபாத்தியாயர் பெயரிலும் இரு அரங்குகள் அமைக்கப்பட்டு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கிய 150 பக்கங்கள் கொண்ட ஆய்வு மாநாட்டு மலரும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூற்றாண்டையொட்டி சிறப்பு நிகழ்வு




# கலாசார மண்டபத்துக்கு அடிக்கல்

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை அக்/அறபா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள கலாசார மண்டபத்திற்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று (09) பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஏ.அன்சார் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்சேய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தனர்.



இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபிர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எஸ்.அஹமட் கியாஸ், எம்.எம். சித்தி பாத்திமா, அட்டாளச்சேனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். எச்.எம். றஸ்மி உள்ளிட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பலரும் பங்கேற்றனர்.

**POSTGRADUATE INSTITUTE OF PALI AND BUDDHIST STUDIES**
**University of Kelaniya**

**Invitation for Bids**

1. The Chairman, Departmental Procurement Committee on behalf of the Postgraduate Institute of Pali & Buddhist Studies, University of Kelaniya invites sealed bids from eligible and qualified bidders as described below.

| Item No. | Contract Number | Contract Name | Estimated Cost (LKR.) | Minimum CIDA registration | Tender Document Fees (LKR.) |
|---|---|---|---|---|---|
| 01. | PGIPBS/ADMIN/ A5/2023/14 | Proposed Modification of Postgraduate Institute of Pali and Buddhist Studies | 8.9 Million | C8,C7,C6 | 3,000.00 |
| 02. | PGIPBS/ADMIN/ A5/2023/13 | Construction of Boundary Fence in Postgraduate Institute of Pali and Buddhist Studies | 4 Million | C9,C8,C7 | 2,500.00 |
| 03. | PGIPBS/ADMIN/ A5/2023/12 | Turfing Work in Postgraduate Institute of Pali and Buddhist Studies | 7.3 Million | C8,C7,C6 | 3,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and the CIDA registration shall be as indicated in the above table.
4. Interested bidders may obtain further information & inspect the bidding documents from the office of the **Senior Assistant Registrar (Tel: 0112809322)**, Postgraduate Institute of Pali & Buddhist Studies, University of Kelaniya, 977/5, University Drive, Bulugaha Junction, Kandy Road, Kelaniya, and from **9.00 a.m. - 4.00 p.m.** on working days from **October 10, 2023 to October 24, 2023.**
5. A complete set of Bidding Documents in English language may be purchased by the interested bidders on the submission of a written request to the **Senior Assistant Registrar,** Postgraduate Institute of Pali & Buddhist Studies, University of Kelaniya from **10th October 2023 to October 24, 2023** on working days from 9.00 a.m 4.00 p.m. upon payment of a non-refundable fees as mentioned in the above table to the Shroff of the Institute.
6. Bids shall be deposited in the tender box of the General Administration Division placed near the office of the Senior Assistant Registrar before **01.30 p.m.** on **October 25, 2023.**
7. The bids will be opened at **02.00 p.m.** on **October 25, 2023,** in the presence of the bidders or their authorized representatives who choose to attend the bid opening. Late bids will be rejected.
8. All bids shall be accompanied by a Bid Security (A bid security deposit of 1% of the estimated amount) issued by a Bank operating in Sri Lanka (registered in Central Bank of Sri Lanka) using the form of bid security included in tender document or a cash deposit to the shroff of

The Chairman,
Departmental Procurement Committee,
**Postgraduate Institute of Pali & Buddhist Studies**
University of Kelaniya,

October 10, 2023

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 24ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 24

## குறள் தரும் சிந்தனை



அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று

வறியவர்க்கு எதுவும் வழங்கி உதவாதவனுடைய செல்வம், மிகுந்த அழகியொருத்தி தன்னந்தனியாகவே இருந்து முதுமையடைவதைப் போன்றது.

# இளம் பராயத்தினரின் செயற்பாடுகளை நெறிப்படுத்த வேண்டியதன் அவசியம்

இளம்பராயத்தினர் மத்தியில் துடிப்பும் வேகமும் காணப்படுவது இயல்பானதாகும். எதிலும் முன்னணியில் நிற்க விரும்பும் இளவயதினர் தங்களது செயற்பாடுகளிலும் சுறுசுறுப்பாகவே இருப்பர். இது அவர்களது பருவத்திற்குரிய பண்பு. அதாவது 'இளம் கன்று பயமறியாது' என்ற முதுமொழிக்கேற்ப அவர்கள் செயற்படுவது இயல்பானது.

எந்தவொரு விடயத்திலும் முன்னணியில் திகழ்வதில் ஆர்வத்தை வெளிப்படுத்தும் இளம் பராயத்தினர், அதற்கான முயற்சிகளிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவர். அவற்றில் பொழுதுபோக்கு அம்சங்கள் பிரதான இடத்தைப் பெற்றுள்ளன. குறிப்பாக இன்றைய நவீன பொழுதுபோக்கு அம்சமாக விளங்கும் 'செல்பி' மோகம் இளம்பருவத்தினர் மத்தியில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அத்தோடு 'இயர் போன்' கருவிகளை இரு காதுகளுக்கும் பாவித்தபடி பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதும் உண்டு.

ஆனால் இந்த இரண்டு விடயங்களும் இளம்பராயத்தினர் உயிராபத்து அச்சுறுத்தலுக்கு முகம்கொடுக்கத் துணைபுரியக் கூடினவாக உள்ளன. இது வேதனைக்குரிய நிலைமையாகும்.

குறிப்பாக செல்பி எடுப்பதிலும் டிக்டொக் போன்ற செயலிகளில் காணொலிகளைப் பதிவேற்றுவதிலும் இன்றைய இளம் பராயத்தினர் அதிக ஆர்வம், அக்கறை எடுத்துக் கொள்கின்றனர். அதன் காரணமாக உயிரிழப்புக்களையும் காயங்களையும் பலர் சந்தித்துள்ளனர்.

அதனால் செல்பி படங்களை எடுப்பதிலும் சமூக ஊடக செயலிகளைப் பாவிப்பதிலும் இளம் பருவத்தினர் காட்டும் ஆர்வமும் அக்கறையும் நெறிப்படுத்தப்பட வேண்டும். அதனைப் பக்குவப்படுத்த வேண்டிய தேவை பரவலாகக் காணப்படுகிறது.

மட்டக்களப்பு, நாவலடி வாவிப் பகுதியில் டிக்டொக் செய்வதற்காக நேற்றுமுன்தினம் 06 மாணவர்கள் படகில் சென்றுள்ளனர். அவர்கள் டிக்டொக் காணொளிகளை எடுத்துக்கொண்டு திரும்பிக் கொண்டிருந்த சமயம், அவர்கள் பயணித்த படகு திடீரென கவிழ்ந்தது. அதனால் இரு மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதோடு, நான்கு மாணவர்களை பிரதேச இளைஞர்களும் மீனவர்களும் இணைந்து விரைந்து செயற்பட்டு மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் பிரதேசத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. டிக்டொக் என்ற செயலி மீதான மோகத்தின் விளைவாகவே இவ்வனர்த்தத்திற்கு அவர்கள் முகம்கொடுத்தனர். இம்மாணவர்கள் முன்னவதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட்டிருந்தால் இந்த உயிராபத்து அனர்த்தத்தைப் பெரும்பாலும் தவிர்த்திருக்கலாம்.

இது போன்ற உயிராபத்து சம்பவங்கள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அண்மைக் காலமாக அவ்வப்போது பதிவாகவே செய்கின்றன. ஓடிக் கொண்டிருக்கும் ரயிலில் தொங்கிய நிலையில் செல்பி எடுத்தவர்கள் கூட இவ்வாறான துரதிஷ்ட முடிவுக்கு முகம்கொடுத்துள்ளனர். சில வருடங்களுக்கு முன்னர் பேருவளை கடற்கரைக்கு சுற்றுலா சென்றிருந்த குடும்பமொன்றைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள் அங்கு காணப்படும் சிறு மலைக்குன்று ஒன்றின் மீதேறி செல்பி எடுக்க முயன்ற போது தவறி விழுந்து கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு மலையகத்திலுள்ள நீர்வீழ்ச்சிகளுக்கு அருகில் செல்பி எடுக்க முயன்றவர்கள் கூட இவ்வாறான அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர். அதேநேரம் இரண்டு காதுகளுக்கும் கையடக்க தொலைபேசியின் இயர்போன் கருவிகளைப் பாவித்த நிலையில் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு அருகில் நடந்து சென்ற இளம் யுவதியொருவர் ரயிலில் மோதுண்டு அண்மையில் உயிரிழந்தார். இவ்வாறான சம்பவங்கள் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி பிரதேசங்களில் அவ்வப்போது இடம்பெறுகின்றன. இவ்விதமான அனர்த்தங்களுக்கு பெரும்பாலும் இளம் பராயத்தினரே முகம்கொடுக்கின்றனர்.

இச்சம்பங்களை பொதுவாக எடுத்துநோக்கும் போது செல்பி மோகமும், ஆர்வமும் உயிராபத்துக்களைத் தேடித்தரக் கூடியவை என்பது தெளிவாகிறது. அதனால் சமூக ஊடகங்களின் செயலிகள் அறிமுகப்படுத்தும் புதுப்புது பயன்பாடுகளை பாவிப்பதில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

அதனால் தம் பிள்ளைகளின் செயற்பாடுகள், சமூக ஊடகங்கள் மீதான அவர்களது ஆர்வம் என்பன குறித்து பெற்றோரும் உறவினர்களும் விழிப்புடன் செயற்பட வேண்டும். பெற்றோரும் உறவினர்களும் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக இளம் பராயத்தினரின் செயற்பாடுகள், அவர்கள் போய்வரும் இடங்கள் குறித்தும் கவனம் செலுத்துவது அவசியம். இளம் பிள்ளைகள் வீட்டுக்கு வெளியே செல்லும் போது பெற்றோரினதும் உறவினரதும் அனுமதி பெற்றுச்செல்லும் பழக்கம் அவர்களிடம் சிறுபராயம் முதல் வளர்க்கப்பட வேண்டும்.

அத்தோடு செல்பி மோகம், இரு காதுகளுக்கும் இயர்போன் கருவிகளை பாவித்தபடி வீதி, ரயில் பாதைகளில் பயணிப்பதால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் என்பன குறித்து அவர்களுக்கு அறிவூட்ட வேண்டும். அப்போது அவர்களது வேகம், துடிப்பை நெறிப்படுத்திக் கொள்ளலாம். அதன் மூலம் செல்பி மோகம் மற்றும் இயர்போன் கருவிகள் பாவனை மூலம் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# எதிர்வரும் ஞாயிறன்று சீரடி சாயி பாபா திருவுருவத்துடன் பக்தர்கள் நடைபயணம்

இலகுவாக அணுகக்கூடிய குருவாக எழுந்தருளியுள்ள சீரடி சாய் பாபாவின் திருவருள் இலங்கை நாடெங்கும் பரவி வரும் இந்த இந்நன்னாட்களில், கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் ஐங்கரன் மண்டபத்தில் அமைந்துள்ள சீரடி சாயி பாபாவின் ஐம்பொன்னால் ஆன அழகிய அருள்மிகு திருவுருவம், கொழும்பு மாநகரெங்கும், பக்தர் நடைபயணமாக புடை சூழ வீதிவலம் வரவிருக்கின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு புறப்படும் இந்த நடைபயணம், பம்பலபிட்டி வஜிரா வீதி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பித்து காலி வீதி வழியாக, காலிமுகத்திடல் தாண்டி கோட்டை, புறக்கோட்டை, பிரதான வீதி, செட்டித்தெரு,, ஜிந்துப்பிட்டி, விவேகாநந்த வீதி வழியாக புதுச்செட்டித் தெரு, ஜம்பட்டா தெரு, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை, கொட்டாஞ்சேனை வீதி வழியாக சுமார் 11.30 மணியளவில் ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம், சாயி நாதனின் சரணாலயம் வந்து சேரும். பக்தர்கள் இந்த நடைபயணத்தை மேற்கொள்வது ஆன்மீக, உடல், உள நலனுக்காக மட்டுமன்றி, அவிசாவளையில் நம் நாட்டிலேயே மிகப் பிரமாண்டமான சீரடி சாயி பாபாவின் ஆலயம் மற்றும் ஆன்மீக சமூக சேவை மயமாக உருவாகி வரும் திருப்பணியைப் பற்றி மக்களிடையே அறியச் செய்வதும் இந்த நடைபயணத்தின் நோக்கமாகும்.

பக்தர்கள் அனவரையும் இந்த அருமையான ஆன்மீக அருட்பயணத்தில் பங்கு கொள்ளுமாறு அறங்காவலர்கள் வேண்டிக் கொள்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு 077 3139954 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளலாம்.





# அரசபணி புரிவோரில் மூளைசாலிகள் வெளியேற்றம் என்பது கட்டுக்கதை!

சமீப காலமாக இளைஞர் சமுதாயம் வேலைவாய்ப்பு மற்றும் கல்விவாய்ப்புக்களைத் தேடி வெளிநாடு செல்லும் போக்கு அதிகரித்து வருகிறது. உலகளாவிய கல்வி வாய்ப்புகள், உலகளாவிய தொழிற்சந்தையின் விரிவாக்கம் ஆகியன உலகப் பொருளாதாரத்துடன் தொடர்புடைய நிலையானதன்மை ஆகும். உலகப் பொருளாதார முறைக்கு ஏற்ற தொழில்சார் அறிவுமற்றும் கல்விச் சான்றிதழ்கள் உள்ளவர்கள் வெளிநாடு செல்கிறார்கள். பலர் இதனை 'நூற்றாண்டின் பாரிய மூளைசாளிகள் வெளியேற்றம்' என வரையறுக்க முயற்சிக்கின்றனர். இது பாரியதொரு கட்டுக்கதைஆகும்.

அரச ஊழியர்கள் என்பவர்கள் பயிற்சி மற்றும் நிபுணத்துவம் கொண்ட தொழில்வாண்மையாளர்கள் ஆவார்கள். நாட்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்திலிருந்து சம்பளம் பெறும் ஊழியர்கள் பொதுநிர்வாக சுற்றறிக்கை 14/2022 பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு உள்நாட்டு/வெளிநாட்டு விடுமுறை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு நாட்டில் மூளைசாலிகள் வெளியேற்றம் நிகழுமாயின் மருத்துவர்கள் உட்பட ஒட்டுமொத்த அரச சேவை மூலம் அது அளவு ரீதியாக வெளிக்காட்டப்படல் வேண்டும்.

மேற்குறித்த சுற்றறிக்கையின்படி, 2023.09.15 இல் ஒட்டுமொத்த அரச சேவையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் விசேட செலவினப் பிரிவுகளில் 483,238 அலுவலர்களில் 2,709 (0.56%) பேர் சம்பளமற்ற ஐந்தாண்டு விடுமுறை பெற்றுள்ளனர். அதேபோன்று, மாகாண அரச சேவையில் உள்ள 398,528 மொத்த அலுவலர்களில் 1,170 (0.3%) பேர் வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ளனர். அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைஆகியவற்றில் 3,879 ஊழியர்கள் (0.32%) வெளிநாடு சென்றுள்ளனர். இது சுமார் 12 இலட்சம் பேரைக் கொண்ட அரச சேவை மீது பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஒரு விடயம் அல்ல.

ஒட்டுமொத்த அரச சேவையில் 0.32% சதவீதம் சம்பளம் இன்றி விடுமுறையில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள ஒரு பின்னணியில் இலங்கை பாரியளவு மூளைசாலிகள் வெளியேற்றம், பேரழிவு, பாரியதொரு அனர்த்தத்தின் அடிநாதமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆச்சரியம் என்னவெனில், இந்த நாட்டில் 1,506 அரச ஊழியர்கள் சம்பளமற்ற 5 ஆண்டுகால உள்நாட்டு விடுமுறையில் வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதாகும். அவர்களில் 79 பேர் பதவிநிலை அலுவலர்கள் ஆவார்கள். மீதி 1,427 பேர் பதவிநிலை சாராத அலுவலர்கள். இதன் மூலம் கருதப்படுவது யாதெனில் வெளிநாடு செல்பவர்களில் சுமார் அரைவாசிப் பேர் சம்பளமற்ற விடுமுறை பெற்று உள்நாட்டில் தங்கியுள்ளார்கள் என்பதாகும். அதாவது,அரச அலுவலர்களின் மூளைசாலிகள் வெளியேற்றம் என்பதுஒரு கட்டுக்கதைஆகும்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 5 ஆண்டுகால விடுமுறை பெறும் முறையானது தொழில்முறைத் திறன் மற்றும் துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்கள் அரசாங்கம் வழங்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி வெளிநாட்டில் வேலை செய்து தங்கள் பொருளாதாரத்தை வலுப்படுத்துகிறார்கள் என்பதை தெளிவாகக் காட்டுகிறது.





**'நூற்றாண்டின் மாபெரும் வைத்தியர்கள் பற்றாக்குறை' என்பது தரவுகளின் அடிப்படையில் அமையாத புனையப்பட்ட கதை!**

ஒரேவகையான பொய்யை ஆயிரம் முறை சொன்னால் அது உண்மையாகிவிடும் என்பது 'கொபெல்ஸ்' கோட்பாடுஆகும். நடைமுறையில் அரச சேவையில் உள்ள வைத்தியர்கள், விரிவுரையாளர்கள், அரச ஊழியர்கள் இடம்பெயர்தல், மூளைசாலிகள் வெளியேற்றம் என்பது ஏழு காகங்கள் சொல்லும்காகத்தின் சிறகுகள்பற்றிய கதைஆகும். தரவு மற்றும் புள்ளிவிபரம் மூலம் வெளிப்படுத்தப்படும் ஒரு கட்டுக்கதைஆகும்.

**பல்கலைக்கழகங்கள் – தரவுகள் கூறும் உண்மை:**

இலங்கையிலுள்ள 17 பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் உட்பட பல்கலைக்கழக ஆணைக்குழுவின் கீழ் உள்ள 22 நிறுவனங்களில் 143 பேர் 2023 இல் இரண்டு வருடங்களுக்கு மேல் விடுமுறை பெற்று வெளிநாடு சென்றுள்ளனர். 2022 இல் வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை 228 ஆகும். 1971 இல் இலங்கையில் பொறியியல் பட்டம் பெற்றவர்களுள் 45% சதவீதம் இங்கிலாந்துக்கு இடம்பெயர்ந்துள்ளனர். 1974 இல் மருத்துவப் பட்டம் பெற்றவர்களுள் 45 சதவீதம் இங்கிலாந்துக்கு மட்டும் குடிபெயர்ந்துள்ளனர். தற்போது 0.32% சதவீதம்அரச சேவையில் 5 ஆண்டுகால விடுமுறை பெற்று வெளிநாடு சென்றுள்ளனர். இவர்கள் அனைவரும் மீண்டும் நாட்டுக்கு திரும்பி வராவிட்டால் நாடு வீழ்ந்துவிடுமா? இல்லை!

2020 முதல் 2023 ஒகஸ்ட் 31வரை பல்கலைக்கழகங்களில் ஏழு ஆண்டுகால விடுமுறை பெற்ற எண்ணிக்கை பற்றிப் பார்ப்போம். கொழும்பு (80), பேராதனை (41), ஜயவர்தனபுர (35), களனி (54), திறந்த பல்கலைக்கழகம் (17), ருஹுணு (81), ரஜரட்ட (10), தென்கிழக்கு (8), கட்புல மற்றும் கலை (13) என்றவாறு விடுமுறை பெற்று இலங்கையில் தங்கியிருக்கும் போது, வெளிநாடுகளில் அதனை விடவும் குறைவான எண்ணிக்கையினர் உள்ளனர். ஏழுஆண்டுகால விடுமுறையில் வெளிநாடு செல்லாமல் இலங்கையில் தங்கியிருக்கும் விரிவுரையாளர்கள் மத்தியில் எவ்வாறு பாரியதொரு மூளைசாளிகள் வெளியேற்றம் ஏற்பட முடியும்?



**ஒரேவகையான பொய்யை ஆயிரம் முறை சொன்னால் அது உண்மையாகிவிடும் என்பது 'கொபெல்ஸ்' கோட்பாடு**

ஏழு ஆண்டுகால விடுமுறை என்பது, சம்பளத்துடனான விடுமுறை ஆகும். உரிய காலஎல்லைக்குள் எந்தவொரு திகதியிலும் சேவைக்கு சமூகமளிக்க முடியுமான, தொழில் பாதுகாப்பு பற்றிய எதுவித அபாயமும் அற்ற (0% Job Risk) ஒரு சிறப்புரிமை ஆகும். 2020 முதல் 2023 வரை ஏழு ஆண்டு கால விடுமுறை பெற்று வெளிநாடு செல்வதற்குப் பதிலாக இலங்கையில் தங்கும் ஒரு போக்கு கொழும்பு பல்கலைக்கழக கலை, கல்வி (100), சுதேச மருத்துவம் (100), சட்டம் (100), விஞ்ஞான மற்றும் மருத்துவ பீடங்களிலும் (வெளிநாடு செல்வதற்குப் பதிலாக இலங்கையில் தங்குதல்)மாற்றமின்றி அதேவிதமாக காணப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழக கலை, பல் மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம் மற்றும் விஞ்ஞான பீடங்களின் விரிவுரையாளர்கள் இலங்கையில் தனியார் துறையில் இணைவதைத் தவிர வெளிநாடு செல்வது குறைந்தளவாகவே காணப்படுகிறது. களனிப் பல்கலைக்கழக கணனி, சமூக விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் விஞ்ஞான பீடங்களின் விரிவுரையாளர்கள் ஏழுஆண்டுகால விடுமுறைபெற்று இலங்கையில் தங்குவதுடன்அவர்கள் வெளிநாடு செல்லவில்லை. விடுமுறை பெற்று வெளிநாடு செல்லாமல் பெரும்பாலானோர் இலங்கையில் தனியார் துறையில் இணைகிறார்கள் அல்லது தொழில்முயற்சியில்/தொழில்களில்ஈடுபடுகிறார்கள்.

2020_23 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல்கற்கை விடுமுறை பெற்றுக்கொள்ளும் ஒரு போக்கு பற்றிக் கருத்திற் கொள்கையில்,விரிவுரையாளர்கள் இந்த நாட்டில் தங்காமல் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இது புதியதொரு நிலைமை அல்ல.

மருத்துவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதாக பரபரப்பாக பேசப்பட்ட கதையானது சுகாதாரத் துறையின் அனைத்துவித முகாமைத்துவக் குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். எதிர்வரும் நான்கு மாதங்களில் குறைந்தபட்சம் 2,100 வைத்தியர்கள் அரச சேவையில் இணையவுள்ளார்கள். 2023 ஒக்டோபரில் 567 வெளிநாட்டுப் பட்டதாரிகளும், 1,056 இந்த நாட்டு மருத்துவ பீட பட்டதாரிகளும், 450 கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக பட்டதாரிகளும் இதில் உள்ளடங்குவர். 'நூற்றாண்டின்மாபெரும் வைத்தியர்கள் பற்றாக்குறை' என்பது தரவுகளின் அடிப்படையில் அமையாத ஒரு கட்டுக்கதைஆகும்.

சமீபத்தில் உள்நாட்டு மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் ஒரு போக்கு (மூளைசாளிகள் வெளியேற்றம்) உள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இன்றைய நிலைவரப்படி, 1,300 சுதேச மருத்துவர்கள் (ஆயுர்வேத, யுனானி) அரசாங்க வேலைவாய்ப்பு இல்லாமல் உள்ளனர். 2024 பெப்ரவரி 28 ஆம் திகதியளவில் மேலும் 300 சுதேச மருத்துவர்கள் தமது பயிற்சிகளை நிறைவுசெய்து அரசாங்க வேலைவாய்ப்பு பெறாத ஆயுர்வேத மருத்துவர்களின் வரிசையில் இணையவுள்ளார்கள். ஐரோப்பா, மத்தியகிழக்கு மற்றும் அவுஸ்திரேலியாஆகிய நாடுகளின் தொழிற்சந்தையில் அவர்களுக்கான தேவை உள்ளது. முதியோர் பராமரிப்பு, பாரம்பரிய மருத்துவமுறைகள், நோய்த் தடுப்பு போன்ற துறைகளில் 'உலகளாவிய தொழில் தேவையினைப் பூர்த்தி செய்தல்' தொடர்பில் இவர்களில் ஒரு பகுதியினர் கவனம் செலுத்தி வருகின்றனர். நாட்டில் அதிகளவு தேவை காணப்படாத பயிற்சி பெற்ற நிபுணர்கள் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகளைப் பெறுவது இலங்கையின் பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கும் ஒருவிடயம்ஆகும். இந்தியா, கொரியா, சீனாஆகிய நாடுகளின் வைத்தியர்கள் இலங்கைக்கு வந்து அவர்களின் பாரம்பரிய மருத்துவமுறைகள் மூலம் இலங்கையர்களுக்கு சிகிச்சை அளிக்கின்றனர். இந்த நாட்டு 'ஹெல' மருத்துவமுறையைத் (பாரம்பரிய மரபுரீதியான மருத்துவம்) தேடி வருடாந்தம் ஆறாயிரத்துக்கும்மேற்பட்ட வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வருகிறார்கள். பன்மைத்துவத்தன்மை உலகப் பொருளாதாரத் திற்குஅழகுசேர்க்கிறது.

சுகாதாரத் துறையின் அதிகூடிய ஊழியர் பற்றாக்குறை (அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் சதவீதமாக)கதிரியக்கவியலாளர்கள், ஒலியியல் நிபுணர்கள், மருந்தாளர்கள் மற்றும் தாதியர் சேவை ஆகியவற்றில் காணப்படுகிறது. தற்போது நாட்டில் பயிற்சியை முடித்த 3,000 தாதியர்களும் 1,000 மருந்தாளர்களும் உள்ளனர். அவர்களுக்கு நியமனம் வழங்கி இந்த ஊழியர் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்தல் வேண்டும். அப்போதுதான் நோயாளிகளின் துன்பங்களை முடிவுக்கு கொண்டுவர முடியும். இல்லையெனில், இந்தப் பயிற்சி பெற்ற ஊழியர்கள் மொத்தமாக வெளிநாடுகளில் தங்கள் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவார்கள்.

விரிவுரையாளர் பற்றாக்குறை தொடர்பில் அண்மையில் கோப் குழுவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட மாணவர் ஆசிரியர் விகிதாசாரத்தின் பிரகாரம் இலங்கையில் 12,992 விரிவுரையாளர்கள் இருக்க வேண்டும் எனவும் தற்போது 6,548 பேர் உள்ளதாகவும் தெரிவித்திருந்தார். இது பல்கலைக் கழகங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை அல்ல, மாறாக 'இருக்கவேண்டியதென கருதக்கூடிய' அண்ணளவான எண்ணிக்கையாகும்.2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதியில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 8,393 ஆகும். பல்கலைக்கழகங்களுக்கு அதற்கு மேலாக ஒரு ஊழியரையேனும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு சட்டத்தின்படிஇடமில்லை.

இலங்கையின் மருத்துவபீடங்களில் 1600_ 1700 நிரந்தர ஊழியர்கள் இருக்க வேண்டிய போதும் 800 பேர் இருப்பதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளது. இது உண்மைக்குப் புறம்பானதாகும். எந்தவொன்றையும் உள்வீட்டிற்குள் தீர்த்துக் கொள்ளாதுஅவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் மனித வளபற்றாக்குறையிருப்பதாகப் பொய்ப்பிரசாரத்தைப் பரப்ப முயல்கின்றனர்.

ஏழு ஆண்டுகால விடுமுறை பெறும் மருத்துவ பீடங்களில் பெரும்பாலானோர் வெளிநாடு செல்லாமல், இந்நாட்டில் தனியார் துறையில் பணிபுரிகின்றனர் என்பதே உண்மை நிலைமை ஆகும். கொழும்பு மருத்துவ பீடத்தில் இருவர் வெளிநாடு செல்லும்போது25 பேர் தனியார் துறையில் பணிபுரிகின்றனர். பேராதனையிலிருந்து 6பேர் வெளிநாடு சென்றுள்ளனர். 9 பேர் இந்நாட்டின் மருத்துவ சேவையில் உள்ளனர். களனியில் 2 பேர் வெளிநாடு செல்லும்போது, 7 பேர் இலங்கையில் நோயாளிகளைப் பார்க்கின்றனர். ருஹுணவில் தலா 4 பேர்வீதம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டில் பணியாற்றுகின்றனர். யாழ்ப்பாணத்தில் 12 பேர் வெளிநாடு செல்லும்போது, 22 பேர் இலங்கையில் தனியார் துறையில் சிகிச்சையளிக்கின்றனர்.

**உண்மையில் வெளிநாடு செல்வது யார்?**

இடைநிலைக் கல்விபெற்ற கணிசமான இளைஞர்கள் வெளிநாடு செல்கின்றனர் என்பது வெளிப்படையான உண்மை ஆகும். அவர்கள் அரச பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகளா, அல்லது வெளிநாட்டுத் தொடர்புகளுடன் தனியார் நிறுவனங்களில் உயர்கல்வி கற்றவர்களா என்பதை ஆழமாக ஆய்வு செய்ய வேண்டும்.

இடைநிலைப் பாடசாலைக் கல்விக்கும் பல்கலைக்கழக நுழைவுக்கும் இடையே உள்ள காலஇடைவெளி காரணமாக வளங்கள் மற்றும் இயலுமான மாணவர்கள் மாற்று உயர்கல்வித் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்கின்றார்கள். அவர்களில் பெரும்பாலானோர் உலகப் பொருளாதாரத்தில் அதிகளவு தேவையுள்ள பாடங்களைத் தெரிவு செய்கிறார்கள். தொழில் புரியும் இடம் இலங்கையா, அல்லது உலகில் வேறு இடமா என்பதை இனிமேல்அரச பல்கலைக்கழகங்கள் மாத்திரம் தீர்மானிப்பதில்லை.

மருத்துவர்கள் வெளிநாடு செல்வது பற்றிய மிகைப்படுத்தப்பட்ட கட்டுக்கதைகளால் உண்மை நிலைமை மறைக்கப்பட்டுள்ளது. தெற்கு (220), மத்திய (218), சபரகமுவ (144), வடமேற்கு (149) ஆகியவற்றைப் பொறுத்தவரையில், மேல் (9) மாகாண சபையின் அலுவலர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது அரிதாகவே காணப்படுகிறது. அரச ஊழியர்கள் வெளிநாடு செல்வதற்குரிய முக்கியகாரணம் வளப்பங்கீட்டில் உள்ள ஏற்றத்தாழ்வு என்பதனை மனவேதனையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

கொழும்பு புத்தகக் கண்காட்சியில் சிங்களப் புத்தகக் கூடங்களின் அளவு சுருங்கி வருவதையும், ஆங்கிலப் புத்தகக் கூடங்களின் அளவு மற்றும் புத்தகங்களின் எண்ணிக்கைவேகமாக வளர்ந்து வருவதனையும் நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இந்த புத்தகங்களை தற்போது உயர்கல்வி படித்து எதிர்காலத்தில்தொழிற் சந்தையில் இணையும் இளைஞர் சமுதாயம் கொள்வனவு செய்துள்ளது. இலங்கை போன்ற ஒரு சுதந்திர நாடு அவர்கள் வசதியான வேலைவாய்ப்புகள் நிலவும் ஒரு நாட்டிற்கு குடிபெயர்வதை எவ்வகையிலும் தடுக்க முடியாது.

உலகளாவிய பொருளாதாரம் தேவை நிலவும் மற்றும் தேவை நிலவாத தொழில்துறைகளை வரைவிளக்கணப்படுத்தி வருகிறது. பூகோள மனிதன் தொழில் புரியும் இடம் அதற்கேற்ப தீர்மானிக்கப்படுகிறது. அதைத் தடுப்பதற்கு இலங்கையானது கியூபா அல்லது வட கொரியா போன்ற ஒரு சோஷலிச நாடு அல்ல!



ரஜித் கீர்த்தி தென்னகோன்...
தென்மாகாண முன்னாள் ஆளுநர்

# மனிதநேய மாளிகையின் மூலைக் கல்லாவோம்



"கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டிடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று!" என்ற வாசகம் பரிசுத்த வேதாகமத்தில் திருப்பாடல்18:22, மத்தேயு 21:42., மாற்கு 12:10, லூக்கா 30:17 என நான்கு நற்செய்திகளில் எடுத்துக் கூறப்படுகின்றது.

ஆண்டவர் இயேசு மண்ணைப் பற்றியோ மணலைப் பற்றியோ கூறாமல் இவைகளின் மூலமான கல்லைப் பற்றி இவ்வளவு அழுத்தமாகத் தெளிவாகக் கூறுகின்றார். ஏன், தனது நற்செய்தியை பரப்பும் பணியை வழிநடத்த தான் தேர்ந்தெடுத்த சீமோனுக்கும் பேதுரு அதாவது "பாறை கல்" எனப் பொருள் படும்படி பெயரிடுகின்றார்.

காலத்தின் பயன்பாட்டில் ஒரு நேரத்தில் புறக்கணிக்கப்பட்டாலும் தன்மை மாறாமல் தரம் குறையாமல் நிலைத்து நிற்கும்போது, அது முறையான பயன்பாட்டிற்குரிய மூலைக் கல்லாக வாழ்வு பெறுகின்றது.

காலங்களும் காட்சிகளும் மாறினாலும் எப்படிச் சீமோன் கிறிஸ்துவின் மதிப்பீடுகளுக்குள் கடந்து பயணித்தபோது, பாறையாக கல்லாக அழுத்தமாக, உறுதியாக நின்றாரோ அவ்வாறே இன்று கிறிஸ்துவின் மதிப்பீடுகளை மதித்து தன் வாழ்வை அதன் வழிகளில் செயற்படுத்த விரும்புவோரின் மன உறுதி இந்தக் கல்லைப் போன்று இருக்க வேண்டும் என்பதே இதன் வெளிப்பாடு.

அப்போது அந்தக் கல் மனித நேயம் எனும் மாளிகைக்கு மூலைக் கல்லாக நிலைக்கும் என்பதும் உறுதியாகும். யார் விலக்கினார்கள்?.. யார் நமக்காக இருக்கிறார்கள்!.. என்பது முக்கியமல்ல.

நாம் நாமாக இருப்பது படைப்பின் தொடக்கத்தில் எப்படி இறை சாயலும் இறை ஆவியும் கொண்ட மனிதனாக வாழ்வு பெற்றோமோ அப்படியே இன்றும் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் நம்மை அதே மனிதனாகப் பிரதிபலிக்கச் செய்யும்போது கிறிஸ்துவை தன் மரணத்திலும் பிரதிபலித்த பேதுரு பெற்ற மாண்பை நாமும் நிச்சயம் பெறுவோம்.

தமிழ் மரபின் வழக்கச் சொற்களில் " எப்படி கல்லு மாதிரி நிற்கிறான்" என்ற ஒரு வாக்கியம் தனி மனிதனின் மன உறுதியை வெளிப்படுத்த இன்றும் பயன்படுத்தப் படுகிறது.

கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று. என்ற இந்த வார்த்தை ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது; எனத் தொடர்கின்றது. ஆண்டவர் இயேசுவால் என்ன நிகழும்? நிச்சயம் அழிவு நிகழாது. நிகழ்ந்தால் கல்வாரி அத்தமற்றதாகிவிடும்.

நாம் ஏன் கயவர்களாகக் கள்வர்களாகக் கல்வாரி வரை செல்ல வேண்டும்?.. கானாவூர் திருமணம் வரை இயேசுவின் நண்பர்களாகச் சென்று மரியாளின் கூற்றுக்கு இணங்க இயேசுவின் சொற்படி செயலாற்றலாம்! தாகம் தணிக்கும் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்" தண்ணீரை நிரப்பச் செய்து. (யோவான் 4:14) மனித உள்ளங்களுக்கு மகிழ்ச்சியை (திராட்சை இரசத்தைப்) பகிர்ந்திடுவோம்.




நற்செய்தியில் குறிப்பிடப்படும் தீய தோட்டத் தொழிலாளர்களாகவோ அல்லது கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் வரும் நற்கனிகள் தராத கெட்ட திராட்சைக் கொடி போலவோ நமது வாழ்வு இருக்கலாகாது. புனித பவுல் அடிகளார் கூறுவது போல்:

முடிவாக ஆனால் முழுமையாக உண்மையானவை எவையோ கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்தி; எதைப்பற்றியும் கவலைப்படாமல் ஆனால் நன்றியோடு கூடிய இறை வேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளோடு இணைந்து வாழ முனைப்புடன் இருக்க வேண்டும்.

(பிலிப்பியர் 4: 6,8)

அப்பொழுது அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நமது உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும். (பிலிப்பியர் 4:7)

வாருங்கள் மாறுவோம் பாறையாக, மனித நேய மாளிகையின் மூலைக் கல்லாக பயணத்தில் இளைப்பாறுதல் தரும் சிலுவை எனும் சுமை தாங்கியாக... அப்போது அமைதியை அருளும் கடவுள் நம்மோடு இருப்பார்.

(பிலிப்பியர் 4:9)

சின்னப்பன் டி சில்வா

## இராகலை புனித ஜெபமாலை மாதா திருவிழா



இராகலை புனித ஜெபமாலை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது. அருட்தந்தையர்கள் டொமினிக் சந்தனம், லெனார்ட் விஜயவர்தன ஆகியோர் இணைந்து திருவிழா கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். செபமாலை மாதாவின் திருச்சுரூப பவனி இராகலை நகர் ஊடாக ஆலயத்தை வந்தடைந்ததுடன் பெருந்திரளான விசுவாசிகள் திருவிழா நிகழ்வுகளில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: ஆ ரமேஷ்)

# இயேசுவின் திருக்காயங்களைக்கொண்ட புனித பிரான்சிஸ் அசீசியார்

பிரான்சிஸ் அசீசியாரின் திருவிழாவை கத்தோலிக்கத் திருச்சபை கடந்த 4ஆம் திகதி சிறப்பித்தது. அவருடைய இயற் பெயர் ஜோவானி டி பியத்ரோ டி பெர்னார்தோனே.

1181 ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் பெரூசியா மாகாணத்தில் அசிசி என்ற பட்டணத்தில் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் பெரிய செல்வந்தர்கள். இவருடைய தந்தை பெர்னார்தோனே பட்டு ஆடைகள் விற்பனை செய்து வந்த ஒரு பெரிய வணிகர், சீமான். சிறு வயதில் இருந்தே ஜோவானி செல்வச் செழிப்பில் வாழ்ந்தார்.

தந்தை பெர்னார்தோனே தன் மகன் ஜோவானியுடைய நடையுடை பாவனைகளைக் கண்டு தன் மகனை "பிரான்சிஸ்கோ" என்று அழைத்தார். அதன் பொருள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். பிரஞ்சுக்காரர் என்பதாகும்.

பிரான்சிஸ்கோ இளம் வயதில் அங்கிருந்து ஒருமுறை பெரும் நகராம் ரோமாபுரிக்குச் சென்றார். செல்வமும் சிறப்பும் வாய்ந்த ரோம் நகரில் கூட பட்டினியால் வாடும் ஏழைகள் பிச்சை எடுப்பதைக் கண்டார். அவர்களுடைய நிலையும் துன்பமும் இவருடைய உள்ளத்தைத் தொட்டது.

இயேசுவின் வார்த்தைகளான

"அவர் தம்முடைய சீஷர்களை நோக்கிப்பார்த்து: தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்; தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது." (லூக்கா 6:20)

என்ற வார்த்தை அவரது உள்ளத்தை உறுத்தியது. அவருடைய கற்பனைகளைக் கிளறியது.

இயேசு அவர் உள்ளத்தில் பேசுவதை உணர்ந்தார். அணிந்திருந்த பட்டாடைகளைக் களைந்துவிட்டு ஏழைகளில் ஒருவராக பிச்சை எடுக்க ஆரம்பித்தார். வீடு திரும்பிய பின்பு விலை உயர்ந்த ஆடைகளை எடுத்து ஏழைகளுக்குக் கொடுத்து மகிழ்ந்தார்.

இதைப் பார்த்த அவருடைய தந்தைக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. தன் மகன் தனக்கு விரோதமாக செயற்பட்டதைக் கண்டித்தார். ஆனால் இளம் ஜோவானியின் மனம் தன்னையே வெறுமையாக்கிக் கொண்ட இயேசுவின் மீதும் ஏழைகள் மீதும் சென்றது.

ஒருநாள் ஜோவானி வீட்டில் இருந்த உடைகளை எடுத்து ஏழைகளுக்குக் கொடுப்பதைக் கண்ட அவருடைய தந்தை பெர்னாந்தோனே மிகுந்த கோபத்துடன் தன் மகனை இழுத்துக் கொண்டு அசிசி நகரில் வாழ்ந்த ஆயரின் முன்கொண்டு நிறுத்தினார்.

"இவன் என் வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் எடுத்து மற்றவர்களுக்குக் கொடுத்து குடும்பத்தை பாழாக்குகிறான்" என்று தன் மகனைப் பற்றி குறை கூறினார், குறையைக் கேட்ட ஆயர் இளைஞனுக்கு ஒழுக்கமாய் இருக்க ஆலோசனை சொல்ல ஆரம்பித்தார்.

உடனே ஜோவானி தான் அணிந்திருந்த உடையை முற்றும் கழற்றி தன் தந்தையின் பாதத்தில் போட்டுவிட்டு நிர்வாணமாய் நின்றார். இனிமேல் உங்கள் உடைகள் எனக்கு அவசியம் இல்லை என்று முழு நிர்வாணமாய் அங்கிருந்து புறப்பட ஆரம்பித்தார். இதைக் கண்ட ஆயர், தான் மேலே போட்டிருந்த போர்வையைக் கழற்றிக் கொடுத்து ஜோவானி தன் மானத்தை மறைத்துக் கொள்ள உதவினார்.




கடவுள் பணிக்குத் தம்மை அர்ப்பணித்து, இயேசுவை முழுமையாகப் பின்பற்றத் துணிந்துவிட்ட பிரான்சிசு தம் நகராகிய அசிசியின் மலைப்பகுதிகளில் நடந்து, இறைவனின் புகழைப் பாடிச் சென்றார். ஒருநாள் வழிப்பறித் திருடர்கள் சிலர் அவரை நிறுத்தி, "நீ யார்?" என்று கேட்டதற்கு பிரான்சிசு பதில்மொழியாக, "நான் மாபெரும் அரசரின் தூதுவன்" என்றுரைத்தார். அவர்கள் அவரை இகழ்ச்சியோடு நோக்கி, அவரிடமிருந்ததைப் பிடுங்கிக்கொண்டு, அவரை அருகிலிருந்த குழியில் தள்ளிவிட்டுச் சென்றனர். அரைநிர்வாணமாகக் குளிரில் வாடிய பிரான்சிசு அண்மையிலிருந்த ஒரு துறவியர் இல்லத்தை அடைந்து, அங்கு கொஞ்சநாள் அடுக்களைவேலை செய்தார். அங்கிருந்து கூபியோ (Gubbio) என்னும் ஊருக்குச் சென்றார். அவருடைய நண்பர்கள் சிலர் அவர்மீது இரங்கி, அவருக்கு ஒரு மேலாடை, கச்சை, ஊன்றுகோல் ஆகியவற்றைக் கொடுத்தனர்.

பின்னர் பிரான்சிசு அசிசி நகருக்குத் திரும்பினார். தெருவெல்லாம் நடந்துசென்று, மக்களிடம் புனித தமியானோ கோவிலைச் செப்பனிடுவதற்குக் கற்கள் தருமாறு வேண்டினார். கிடைத்த கற்களைச் சுமந்து, கோவிலுக்குக் கொண்டுபோய், தம் கைகளாலேயே அதைச் செப்பனிட்டார். அதுபோலவே, கைவிடப்பட்ட நிலையில் கிடந்த வேறு இரண்டு கோவில்களையும் அவர் செப்பனிட்டார்.

சிலுவையில் தொங்கிய இயேசுவைப் போல் ஜோவானி இயேசுவையே அணிந்து கொண்டு தமது தந்தையையும் தாயையும் செல்வம் நிறைந்த வீட்டையும் துறந்துவிட்டு வெளியே நடந்தார். அன்று முதல் இயேசுவிக்காகவே வாழ்ந்த அவர் திருச்சபையில் ஒரு புரட்சிகரமான தத்துவத்தைக் கற்றுக்கொடுத்தார்.

பிரான்சிஸ்கு சபை என்னும் கிறிஸ்தவ துறவற அமைப்பை நிறுவினார்.

1224ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத் தொடக்கத்தில் பிரான்சிஸ் மூன்று சகோதரர்களோடு டைபர் ஆற்றுக்கும் ஆர்ணோ ஆற்றுக்கும் இடையிலான ஒரு மலைப்பகுதியில் லா வேர்னா

(La Verna அல்லது Alverna) என்னும் இடத்துக்குச் சென்றார். அங்கு புனித மிக்கேல் விழாவுக்கு (செப்டம்பர் 29) முன்னால் நாற்பது நாட்கள் உபவாசம் இருக்கும்படி அப்பயணத்தை மேற்க்கொண்டார்.

லா வேர்னாவில் தியானத்தில் ஈடுபட்டிருந்தபோது, செப்டம்பர் 14ஆம் நாள் அளவில் (திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள்) ஒரு காட்சியை கண்டார். துன்பங்கள் அனுபவித்து, சிலுவையில் உயிர் துறந்த இயேசுவின் கைகளும் கால்களும் ஆணிகளால் துளைக்கப்பட்டு, விலா ஈட்டியால் குத்திக் கிழிக்கப்பட்டதால்




இயேசுவுக்கு ஐந்து காயங்கள் ஏற்பட்டிருந்தன. பிரான்சிஸ் சிலுவையில் உயிர்துறந்த இயேசுவை முழுமையாகப் பின்பற்றிச் செல்ல விரும்பினார். எனவே இயேசுவின் துன்பங்களில் தாமும் பங்கேற்க வேண்டும் என்று உளமார விரும்பி இறை வேண்டுதல் செய்தார்.

அவரது வேண்டுதல் கேட்கப்பட்டது. அவரது உள்ளங்கைகளிலும்உள்ளங்கால்களிலும், விலாவிலும் இயேசுவின் காயங்கள் போன்ற காயங்கள் தோன்றின என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவற்றில் ரத்தம் வழியும்போது மற்றவர் அறியாதபடி அவர் துணியால் மறைத்துக்கொள்வாராம்.

அப்போது பிரான்சிசின் கூடவே இருந்த சகோதரர் லியோ அந்நிகழ்ச்சி குறித்துத் தெளிவான, சுருக்கமான குறிப்பை விட்டுச் சென்றுள்ளார். அக்குறிப்பு எழுதப்பட்டுள்ள தோல் ஏட்டின் (parchment) பின்புறத்தில் பிரான்சிஸ் தம் கையால் எழுதியது உள்ளது. சகோதரர் லியோ எழுதிய குறிப்பு:

"ஆண்டவரின் கரம் பிரான்ஸிசின் மேல் வைக்கப்பட்டது. ஒரு தேவ தூதர் காட்சியில் தோன்றி பிரான்ஸிசிடம் பேசினார். அப்போது பிரான்சிசின் உடல்மீது இயேசுவின் திருக்காயங்களை தேவ தூதர் பதித்தார். அதன் பின் பிரான்சிஸ் இத்தோல் ஏட்டின் மறுபுறத்தில் இறைபுகழைத் தம் சொந்தக் கையால் எழுதினார். தம்மீது கடவுள் பொழிந்த எல்லா நன்மைகளுக்கும் அவர் ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார்."

தாம் இறப்பதற்கு முந்தின நாள் மாலை நேரம் பிரான்சிஸ் தம் சகோதரர்களிடம் அப்பம் கொண்டுவரச் சொன்னார். அவரோடு கூட இருந்த சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் அப்பத்திலிருந்து ஒரு சிறு துண்டைப் பிட்டுக் கொடுத்தார். இயேசு, தாம் துன்பங்கள் அனுபவித்து, சிலுவையில் அறையுண்டு உயிர்துறந்தற்கு முந்தின நாள் தம் சீடர்களோடு பந்தியமர்ந்து, அவர்களோடு அப்பத்தைப் பகிர்ந்துகொண்டது போலவே பிரான்சிசும் செய்ய விரும்பினார். அப்பத்தைப் பகிர்ந்துகொண்டதும் பிரான்சிஸ் தம் சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் இறுதி ஆசி வழங்கினார். "உலகில் நான் செய்ய வேண்டிய பணி முடிந்தது. நீங்கள் ஆற்ற வேண்டிய பணி யாதென்று உங்களுக்கு இயேசு கிறிஸ்து கற்பிப்பாராக" என்று கூறினார்.

எல்லா நேரத்திலும் சுவிஷேசத்தை பிரசங்கம் செய்யுங்கள், தேவைப்படும்போது வார்த்தைகளை பயன்படுத்துங்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எல். எஸ்





இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள இலங்கையைச் சேர்ந்த சிவநெறிச்செல்வர் டாக்டர் சாம்பசிவ மணிக்குருக்களின் ஏற்பாட்டில் கொழும்பு 13, விவேகானந்த சபை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற ஆன்மீக, இசை, நாடக முப்பெரும் விழாவில் பிரமுகர்கள் சிலர் கௌரவிக்கப்பட்டபோது...

## பத்து நாட்களுக்குள்...

பிரவேச வீதியொன்றை அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தற்போதுள்ள மேம்பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் கட்டும் பணியை ஐந்து மாதங்களுக்குள் பூர்த்தி செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவசர தேவையாக கருதி அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு இது தொடர்பான பணியைக் கையளிக்குமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். இதற்காக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

## இலங்கை இந்திய...

சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது. குளிரூட்டப்பட்ட நவீன வசதியுடன் கூடிய 'செரியாபாணி' பயணிகள் கப்பல் நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறை வரை பயணிப்பதற்கு.6000 லீற்றர் எரிபொருள் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கப்பல் பயணத்திற்காக ஒரு வழி கட்டணமாக 27,000 ரூபாவும் இருவழி கட்டணமாக 53,500 ரூபாவும் அறவிடப்படவுள்ளது. இதுபற்றிய விபரங்களை இந்திய கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது. கப்பலில் பயணம் செய்யும் பயணிகள் தம்முடன் 40 கிலோ எடையுள்ள பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்படும். குறித்த இக் கப்பல் இந்தியாவின் நாகப்பட்டினத்திலிருந்து மூன்று மணி நேரத்தில் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## க.பொ.சாதாரண...

குறிப்பிட்டார். 2023ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பிற்போடப்பட்டதை கருத்திற்கொண்டு, சாதாரண தரப் பரீட்சைகள் மே மாதம் வரை ஒத்திவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2025ஆம் ஆண்டு முதல் பரீட்சைகள் வழமை போன்று திட்டமிடப்பட்ட திகதிகளில் நடைபெறும் என்றும் அமைச்சர் கூறினார்.

## ஏழுமலையான்...

பக்தர்கள் வருகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதனால், உண்டியல் வருமானமும் அதிகரிக்கிறது. கடந்த 70 ஆண்டுகளுக்கு முன்புவரை ஒரு நாளைக்கு 600

பக்தர்கள் மட்டுமே தரிசனம் செய்துள்ளனர். 1990 முதல் நாளொன்றுக்கு 32 ஆயிரத்து 333 பக்தர்கள் வரத்தொடங்கினர். இதனால், ஒரு வருடத்தில் 1.18 கோடி பக்தர்கள் ஆலயத்தை

தரிசித்து வந்தனர். கடந்த 2000ம் ஆண்டில் இதன் எண்ணிக்கை இருமடங்காக உயர்ந்து, 2 கோடி 37 லட்சத்து 25 ஆயிரமானது.

## தங்கத்தின்...

புதன்கிழமை ரூபா 152,200 வாகக் காணப்பட்டது.

இதேவேளை, கடந்த வாரம் புதன் கிழமை வரையில் 164,500, ரூபாவாக காணப்பட்ட 24 கரட் தங்கத்தின் விலை தற்போது, 168,000 ரூபாவாக உயர்ந்துள்ளதாக கொழும்பு செட்டியார் தெரு சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கொழும்பில் அதிகரிக்கும்...

அந்த எண்ணிக்கை ஐந்து அல்லது ஆறாக உயர்ந்துள்ளதாக வைத்தியர் ருவான் விஜயமுனி குறிப்பிட்டார்.

## ஊழியர்...

குறிப்பிடப்பட்டுள்ள (NVQ 34) மட்டத்திலான பாடநெறியை தெரிவுசெய்வது அவசியம். இப் பாடத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றை தெரிவு செய்வதும் அவசியமாகும்.

## இலங்கை, இஸ்ரேலியர்களின்...

பல இலங்கையர்கள் பணிபுரிகின்றனர். வெளிவிவகார அமைச்சு அவர்களை சரியான இடங்களுக்கு அனுப்பி அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

இலங்கையில் கணிசமான எண்ணிக்கையிலான இஸ்ரேலியர்கள் சுற்றுலாப் பயணிகளாகவும் பல்வேறு பணியாளர்களாகவும் உள்ளனர். அவர்கள் இஸ்ரேலுக்குத் திரும்புவதற்கு நாம் உதவ வேண்டும்.

அதற்கிணங்க இலங்கையிலுள்ள இஸ்ரேலியர்கள் தொடர்பில் தேடிப் பார்க்குமாறு பொலிஸ் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளேன்.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் எனும் இரு நாட்டுக் கொள்கையை இலங்கை எப்போதும் ஆதரித்து வருகிறது. அதற்கு நாம் நிச்சயம் ஆதரவு வழங்குவோம். சில சமயங்களில் இஸ்ரேலின் நடவடிக்கைகளை நாம் கண்டித்திருக்கின்றோம்.

எனினும், இவை அனைத்தும் இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலில் பெருமளவிலான பொதுமக்கள் கொல்லப்பட்டதை நியாயப்படுத்தாது.

முன்னெப்போதும் இல்லாத இந்த தாக்குதலை இலங்கை அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

மோதல்கள் மற்றும் வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அந்த வகையில் ஆபிரிக்க ஒன்றியம் கொண்டு வந்த பிரேரணைக்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவிக்கின்றது.

இந்த நெருக்கடியினால் மற்றுமொரு பாதிப்பும் ஏற்படும். அந்த வகையில் ஒரு பீப்பாய் பெற்றோலின் விலை 100 டொலர் வரை உயரும் என எதிர்பார்க்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேலிலுள்ள இலங்கையர்களை...

நிலைமை தொடர்பில் அவதானிக்கப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளது. ஹமாஸ்இஸ்ரேல் மோதல்களால் இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ள 2 தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இம்மோதல்களால், இலங்கையர் ஒருவர் லேசான காயத்திற்கு உள்ளானார். இவர் தொடர்பிலான தகவல்களை தொடர்ந்து திரட்டிவருகிறோம். சுமார் 8,000 இலங்கையர்கள் இஸ்ரேலில் பணிபுரிகின்றனர்.90 வீதமானோர் பராமரிப்பு சேவை தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளனர். அங்குள்ள இலங்கையர்கள் குறித்த தகவல்களை அறிந்துகொள்வதற்காக இரண்டு தொலை பேசி இலக்கங்கள் அறிமுக்கப்பட்டுள்ளன.

0094716640560 என்ற வட்ஸ்அப் இலக்கத்தினூடாக அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 1989 என்ற உடனடி(Hot Line) தொலைபேசி இலக்கத்தினூடாகாவோ தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அலங்கார மீன்...

கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் – நன்னீர் வேளாண்மைக்காக நெக்டா நிறுவனத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நூறு மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளார். இந்நிதியிலிருந்தும் அலங்கார மீன் வளர்ப்புத் துறைக்கு தேவையான நிதியை ஒதுக்கப்படும். அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் ஏற்மதித் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களை பாராட்ட வேண்டும். இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுக்க அமைச்சுடன் இணைந்து செயலாற்றுவதன் அவசியத்தையும் இதன்போது அமைச்சர் வலியுறுத்தினார். இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர், நெக்டா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தொழில் முயற்சியாளர்களும் கலந்து கொண்டனர்.

## வனத்துறையின் 3,32000...

தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்துள்ளார். அதேவேளை,2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை யானை மனித மோதல்களால், 1967 யானைகளும் 667 பேரும் உயிரிழந்துள்ளதாகவும் அக்குழு தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கமானது இக்காலகட்டங்களில்,யானை மனித மோதல்களை தடுக்கும் நடவடிக்கைகளுக்காக 12 கோடிக்கும் அதிகமான நிதியை செலவிட்டுள்ளது.அத்துடன் இவ்வருடத்தில் மாத்திரம் இதுவரை 273 யானைகள் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைக் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெருமவின் தலைமையில், நேற்றுமுன்தினம் பாராளுமன்ற கட்டடத்தில் இடம் பெற்றுள்ளது.

## சிங்கள திரைத்துறையின்...

பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையிலே நடிகர் ஜக்சன் அன்டனிநேற்று (09) அதிகாலை காலமானதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.1958ஆம் ஆண்டு ராகமையில் பிறந்த ஜக்சன் அன்டனி, பல சிங்கள மொழித் திரைப்படங்களில் நடித்துள்ளார்.

திரைப்படமொன்றின் படப்பிடிப்புக்காக அநுராதபுரத்திற்கு சென்றுவிட்டு மீண்டும் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, தலாவ – மொரகொட பிரதேசத்தில் அவர் பயணித்த கெப் வாகனம் யானையொன்றுடன் மோதி விபத்திற்குள்ளானது. இதில் படுகாயமடைந்த ஜக்சன் அன்டனி அநுராதபுரத்திலிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையின்அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார்.இந் நிலையிலேயே நேற்று அவர் உயிரிழந்துள்ளார். நாட்டின் கலாசாரத்தை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சென்ற இவர், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார். இவரின் இறுதிச் சடங்கு எதிர்வரும் வியாழக்கிழமை(12) நடைபெறவுள்ளது.

## மூவர் மரணம் 25 பேர்...

அந்த வகையில் வீட்டின் மேல் பாரிய கல் ஒன்று புரண்டு விழுந்ததில், காலி பிரதேசத்தில் அமரசேன விஜேசிங்க என்ற 78 வயது நபர் மரணமடைந்துள்ளார்.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை பகுதியில் மின்னல் தாக்கி நபர் ஒருவரும் கடும் மழையின் போது முச்சக்கர வண்டி குடைசாய்ந்ததில் ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, மாத்தறை மாவட்டத்திலேயே அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும்,இம்மாவட்டத்தில்

10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வாழும் மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர் கொண்டுள்ளதாகவும் அந்நிலையம் தெரிவித்துள்ளது. அப்பகுதிகளில் 22 ஆயிரத்து பன்னிரண்டு குடும்பங்களை சேர்ந்த 55,775 பேர் தனது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ளதாக மாத்தறை மாவட்டச் செயலாளர் வை. விக்ரமசிறி அறிவித்துள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது. இதற்கு மேலதிகமாக 11 ஆயிரத்து 692 குடும்பங்களைச் சேர்ந்த 41,726 பேர் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

## பணிப் பெண்களை...

சடலமாக கிடந்துள்ளனர்.இதையடுத்து, இச்சம்பவம் பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. வீட்டின் அலுமாரி உடைக்கப்பட்டு தங்கம் அல்லாத 12 வளையல்கள்,2 மாலைகள், தங்க கரண்டி மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் என்பன களவாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.இந்நிலையில், சம்பவம் தொடர்பாக விசாரணையை ஆரம்பித்த மாத்தறை பொலிஸார் 25 வயதான சந்தேக நபர் ஒருவரை கைது செய்து திருடப்பட்ட பொருட்களையும் அவரிடமிருந்து மீட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## தெஹிவளையில்...

இதனையடுத்து சந்தேக நபர் வசிக்கும் வீட்டை படையினர் சோதனையிட்டனர்.அங்கிருந்த மூவரைக் கைது செய்த விஷேட அதிரடிப்படையினர், வீட்டிலிருந்த ஆறு வாள்களை கைப்பற்றினர்.

## வர்த்தகரின் கண்களில்...

முச்சக்கரவண்டியில் மற்றொரு ஊழியருடன் மேற்படி வர்த்தகர் பயணித்தபோதே, மீகொடை தகம் மாவத்தைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. மேற்படி, தகம் மாவத்தைப் பிரதேசத்திலுள்ள அவ்வூழியரின் வீட்டுக்குச் சென்று, அவரை அங்கு இறக்கிவிட்டு மீண்டும் பயணத்தைத் தொடரும் நோக்கிலேயே குறித்த வர்த்தகர் சென்றுள்ளார். அந்த ஊழியரின் வீட்டிற்கருவில் முச்சக்கரவண்டி நிறுத்தப்பட்டு ஊழியர் அங்கிருந்து சென்றபின்னர், முச்சக்கர வண்டிக்குள்ளிருந்த வர்த்தகரின் கண்களில் திடீரென மிளகாய்த் தூளை தூவிய நபரொருவர் ,பார்சலாக கட்டப்பட்டிருந்த மேற்படி 45 இலட்சம் ரூபா பணத்தை களவாடிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கடந்த 06. 10. 2023 அன்று வெளியான தரம் – 5 புலமைப்பரிசில் பகுதி – 1 மற்றும் பகுதி – 2 வினாக்களுக்கான விடைகள்

**பகுதி – I விடைகள் (0**

| | |
|---|---|
| 1. 3 | 20. 2 |
| 2. 2 | 21. 1 |
| 3. 3 | 22. 3 |
| 4. 1 | 23. 2 |
| 5. 2 | 24. 3 |
| 6. 1 | 25. 3 |
| 7. 2 | 26. 2 |
| 8. 3 | 27. 1 |
| 9. 1 | 28. 2 |
| 10. 2 | 29. 3 |
| 11. 2 | 30. 2 |
| 12. 3 | 31. 1 |
| 13. 1 | 32. 2 |
| 14. 3 | 33. 1 |
| 15. 2 | 34. 3 |
| 16. 3 | 35. 2 |
| 17. 1 | 36. 1 |
| 18. 3 | 37. 3 |
| 19. 2 | 38. 2 |
| 20. 2 | 39. 1 |
| | 40. 2 |

**பகுதி – II விடைகள் (06.10.2023)**

**I.**
1. துள்ளித்துள்ளி
2. வெள்ளை
3. பஞ்சு போன்றது
4. அவற்றை
5. i. தாய் ii. ஆவல் iii. மேனி
6. அம்மா

**II.**
7. i. வெட்கம் ii. தீபாவளி iii. இங்கணம்
8. i. மணவாட்டி ii. காவற்காரி
9. i. வன்சொல் ii. மறுமை iii. பிளவு iv. பழைமை
10. i. நீ நேற்று கோயிலுக்குப் போனாய்
    ii. நீங்கள் சுற்றுலா செல்வீர்களா?
11. i. அரசன் நாட்டை நீதி தவறாது ஆட்சி செய்தான்.
    ii. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

**III.**
12. i. குன்றும் குழியும் ii. எலும்பும் தோலும்
13. i. வேகமாகப் பரவுதல் ii. வழிகாட்டுதல்
14. i. குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது
    ii. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
15. i. குறுகுறுக்கும் ii. பிளிறும் iii. அகவும் iv. எக்க
16. i. வித்து ii. மணி iii. விதை iv. கொ
17. i. பிரகாசமான ii. பெரிய
18. சிறகு

**IV.**
19 i. Spoon ii. Candle
20. A – ஒழுவ, B – எஸ, C – நாய, D – கட, E – அத, F -- ககுல

**V.**
21. நான்காயிரத்து ஐந்நூற்று நாற்பத்தெட்டு
22. 7000 + 000 + 80 + 3
23. 6 தடவை
24. i. 0.4 ii. 12/20

25. 83
26. 0
27. 14
28. ரூபாய் 760.00
29. 19724

**VI.**

| | |
|---|---|
| 30. 3 | 41. 3 |
| 31. 1 | 42. 2 |
| 32. 3 | 43. 3 |
| 33. 2 | 44. 3 |
| 34. 3 | 45. 1 |
| 35. 1 | 46. 2 |
| 36. 3 | 47. 1 |
| 37. 1 | 48. 1 |
| 38. 3 | 49. 2 |
| 39. 1 | 50. 1 |
| 40. 1 | 51. 3 |
| | 52. 2 |
| | 53. 1 |
| | 54. 3 |
| | 55. 3 |
| | 56. 2 |
| | 57. 1 |
| | 58. 2 |
| | 59. 1 |

## இன்றைய பலன்கள்



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

### மேஷம்:

ராகு 12ம் ,கேது 6ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. பாக்கிய அதிபதி குரு இராசியில் இருக்கிறது. சகோதர ஒற்றுமை ஓங்கும். கலைத் துறையில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

### ரிஷபம்:

ராகு 11ம் ,கேது 5ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. புண்ணிய ஸ்தானம் பலமாக இருப்பதால் குலதெய்வ தரிசனம் பூஜை சிறப்பாக நடக்கும். கோயில் தரிசனம் கிடைக்கும்.

### மிதுனம்:

ராகு 10ம் ,கேது 4ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. உடல் ஆரோக்கியம் மேம்படும். வணிகம் தொழில் சிக்கலின்றி நடக்கும். ஏழுக்குரிய குரு 11 ஆம் இடத்தில் இருக்கிறார். மனைவி வழியில் சிறப்பு உண்டு.

### கடகம்:

ராகு 9ம் ,கேது 3ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. குடும்பத்தில் ஒற்றுமை ஓங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. புதன் 3 இல் ஆட்சி, உச்சம் பெற்று இருப்பதால் தடைபட்ட காரியங்கள் நடந்து விடும்.

### சிம்மம்:

ராகு 8ம் ,கேது 2ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. சுக்கிரன் 12 இல் இருப்பது உங்கள் சந்தோசத்தை அதிகரிக்கவே செய்யும். புதிய ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். சுபச் செலவுகள் கூடும்.

### கன்னி:

ராகு 7ம் ,கேது 1ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. வியாபாரம் சிறு தடைகளை மீறி வெற்றிகரமான பாதைக்கு திரும்பும்.யாரிடமும் உங்கள் திட்டங்களை மனம் விட்டுப் பகிர வேண்டாம்.

### துலாம்:

ராகு 6ம் ,கேது 12ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. சற்று புத்திசாலித்தனமும் முக்கிய பிரமுகர்கள் உதவியும் இருந்தால் காரியம் எளிதில் பலிதமாகும். வணிகத்தின் புதுத் திருப்பம் நேரும்.

### விருச்சிகம்:

ராகு 5ம் ,கேது 11ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. அரசு காரியங்கள் தடையின்றி சாதகமாக இருக்கும். சூரியன் பலத்தால் உடல் ஆரோக்கியம் மேற்படும். பகை நட்பாகும். பணவரவு அதிகரிக்கும்.

### தனுசு:

ராகு 4ம் ,கேது 10ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. வழக்குகள் சம்பந்தமாகவும் குடும்பத்தில் அமைதி நிலவும். மரியாதை கூடும். பதவி உயர்வு ஏற்படும். புது வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

### மகரம்:

ராகு 3ம் ,கேது 9ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. 9 இல் சூரியன் இருப்பதால் அரசு காரியங்கள் சாதகமாக நடக்கும். வழக்குகள் சாதகமாகும். சுபகாரியங்கள் நடைபெறும்.

### கும்பம்:

ராகு 2ம், கேது 8ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. ஆசைப்பட்ட சில விஷயங்கள் உங்கள் முயற்சியால் நடக்கும். ராகுவின் சுப பலன்கள் கூடும்.

### மீனம்:

ராகு 1ம் , கேது 7ம் இடத்திலும் உள்ளது. ஏகாதசி விரதம் விஷ்னு வழிபாடு செய்க. கணவன் மனைவி உறவுகள் சுமுகமாக இருக்கும். முக்கியஸ்தர்களின் அறிமுகத்தால், புதிய உதவிகள் கிடைக்கும். சமூகத்தில் உங்கள் கௌரவம் அதிகரிக்கும்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

## ரூ. 25,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

11.50% - 2026 "A" தொடர்களின் கீழ் ரூ. 12,500 மில்லியனையும், 11.00% - 2030 "A" தொடர்களின் கீழ் ரூ. 12,500 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2023 ஒக்டோபர் 12ஆந் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 11.00% - 2022 "A" | 11.00% - 2026 "A" |
|---|---|---|
| ISNI* | LKB0126H014 | LKB01530E152 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 12,500 மில்லியன் | ரூ. 12,500 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 11.50% ஆண்டொன்றிற்கு | 11.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2016 ஆகஸ்ட் 01 | 2015 மே 15 |
| **முதிர்வுத் திகதி** | **2026 ஆகஸ்ட் 01** | **2030 மே 15** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 பெப்ரவரி & 01 ஆகஸ்ட் | 15 மே & 15 நவம்பர் |
| ஒன்றுசேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 2.3750 | ரூ. 100.00 இற்கு ரூ. 4.6033 |
| ஏல விற்பனைத் திகதி | 2023 ஒக்டோபர் 12, வியாழக்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2023 ஒக்டோபர் 12, வியாழக்கிழமை மு.ப. 11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2023 ஒக்டோபர் 16** | |
| விலைக் குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர் / பதிவாளர்

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.07.11 நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி H.M.N.S. உபுல்தெனிய அத்தாட்சிப்படுத்திய 2017.05.09 திகதியிட்ட ஈட்டு முறி இல்.371 மற்றும் 2017.06.15 திகதியிட்ட ஈட்டுமுறி இல.398 ஆகியவற்றின் பேரில் தொலபிஹில்ல, இல.159/2 எனும் முகவரியைச் சேர்ந்த திரு காலிங்க விஜேசுந்தர என்பவரிடமிருந்து ஒன்பது மில்லியன் எண்ணூறு ஆயிரம் ரூபாய்கள் கடன் மீது 2023.05.16 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் **ரூ. 9,546,568.38** (ஒன்பது மில்லியன் ஐநூற்று நாற்பத்தாறு ஆயிரத்து ஐநூற்று அறுபத்து எட்டு ரூபாய்களும் முப்பத்தெட்டு சதங்களும்) அத்துடன் **ரூ.7,725,651.04** (ஏழு மில்லியன் எழுநூற்று இருபத்தைந்து ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்தொரு ரூபாய்களும் நான்கு சதங்கள்) மீது 2023.05.17 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு **ஆறு (6%)** வீதத்தில் மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. பிரசித்த நொத்தாரிசு திருமதி H.M.N.S. உபுல்தெனிய அத்தாட்சிப்படுத்திய 2017.05.09 திகதியிட்ட ஈட்டு முறி இல.371 மற்றும் 2017.06.15 திகதியிட்ட ஈட்டுமுறி இல.398 ஆகியவற்றின் பேரில் ஒன்பது மில்லியன் எண்ணூறு ஆயிரம் ரூபாய்கள் கடன் மீது மேற்கூறிய ரூ.9,546,568.38 (ஒன்பது மில்லியன் ஐநூற்று நாற்பத்தாறு ஆயிரத்து ஐநூற்று அறுபத்து எட்டு ரூபாய்களும் முப்பத்தெட்டு சதங்களும்) அத்துடன் 2023.05.17 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு அறவிட வேண்டிய வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரருக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பூஜாபிட்டிய கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பூஜாபிட்டிய பிரதேச சபை எல்லைகளுள் பூஜாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் தொலபிஹில்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில், தொலபிஹில்லயில் அமைந்த குருகுதேவத்த என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் பிரியந்த புஞ்சிஹேவா தயாரித்த 2004.10.15 திகதியிட்ட வரைபடம் இல.2534இல் காணித்துண்டு 01 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடகிழக்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் W.B. திசாநாயக்க தயாரித்த வரைபடம் இல.2234இல் காணித்துண்டு இல.2 மற்றும் 3உம் தென்கிழக்கில் பிரதான வீதியிலிருந்து கிராமம் வரை மாகாண சபை பாதையும் தென்மேற்கில் போதிபாலயும் ஏனையோரும் உரிமை கோரும் ரண்கொத் கெதர வத்தயும் மிகவும் சரியானது வரைபடம் இல.2534 இல் காணித்துண்டு 2உம், வடமேற்கில் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.2534இல் காணித்துண்டு 2 மிகவும் சரியானது D.R. ஹேவாதிய உரிமை கோரும் ரண்கொத் கெதர வத்தயும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் இருபது பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1, பே.20) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் பக்கம் U51/129இல் பதிவு செய்யப்பட்டது.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பூஜாபிட்டிய பிரதேச சபை எல்லைகளுள் பூஜாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் தொலபிஹில்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில், தொலபிஹில்லயில் அமைந்த குருகுதேவத்த என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் பிரியந்த புஞ்சிஹேவா தயாரித்த 2004.10.15 திகதியிட்ட வரைபடம் இல.2534இல் காணித்துண்டு 02 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடகிழக்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் P. புஞ்சிஹேவா தயாரித்த வரைபடம் இல. 2534இல் காணித்துண்டு இல.1உம் தென்கிழக்கில் பிரதான வீதியிலிருந்து கிராமம் வரை மாகாண சபை பாதையும் தென்மேற்கில் D.R. போதிபாலயும் ஏனையோரும் உரிமை கோரும் ரண்கொத் கெதர வத்தயும், வடமேற்கில் D.R. ஹேவாதிய உரிமை கோரும் ரண்கொத் கெதர வத்தயும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் பதின்மூன்று தசம் ஆறு ஏழு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1, பே.13.67) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் U/69/121இல் பதிவு செய்யப்பட்டது.

*இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.*

**திருமதி U. அலுத்கே**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**பூஜாபிட்டிய.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# அறிவித்தல்

## 2023 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்தில் தற்காலிக கடையறைகளுக்கான இடங்களின் ஏல விற்பனை மற்றும் கார்னிவேல் களியாட்டத்திற்காக மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதியினை ஏலத்தில் விடுதல்

2023 ஆம் ஆண்டின் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 2023.11.01 தொடக்கம் 2023.11.17 ஆம் திகதி வரையில் தற்காலிக வியாபாரத்திற்காக மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்தில் தற்காலிக கடையறைகளுக்கான இடங்களின் ஏல விற்பனை மற்றும் கார்ணிவேல் களியாட்டத்திற்காக மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதியினை ஏலத்தில் விடுவதற்கு மஸ்கெலியா பிரதேச சபையில் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

அதன் படி ஏலமானது 2023.10.17 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு மஸ்கெலியா P.M.D விழா மண்டபத்தில் இடம்பெற இருப்பதால் அன்றைய தினம் தாங்கள் சமுகமளித்து தங்களுக்கு உரிய இடத்தினை பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

தற்காலிக கடைக்கான இடத்தினை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் வியாபாரிகள் தங்களது பதிவினை மேற்கொள்வது கட்டாயமாகும். பதிவுக்கட்டணமாக ரூ. 500.00 செலுத்தி டோக்கன் (Token) ஒன்றினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். 2023.10.17 ஆம் திகதி காலை 10.00 மணி வரை மட்டுமே டோக்கன்கள் (Token) வழங்கப்படும்.

தற்காலிக கடைத் தொகுதிக்கான குறைந்த ஏலத்தொகை ரூ. 5500.00

காணிவேல் களியாட்டத்திற்கான குறைந்த ஏலத்தொகை ரூ. 200,000.00

❖ **நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.**

**செயலாளர்.**
**மஸ்கெலியா பிரதேச சபை**
**மஸ்கெலியா.**
**மேலதிக தகவல்களுக்காக :- 052-2277275/071-8166888/ 077-3800674/075-3280027**



## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

### வழங்கல் பிரிவு - மத்திய சமையலறைக்கு 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்களை வழங்கும் பொருட்டு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையுடன் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் பங்குதாரர் நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01. | அரிசி (முழுமையாக கல் மற்றும் மணல் நீக்கப்பட்டவை) |
| 02. | கருவாடு வகைகள் |
| 03. | மரக்கறிகள் மற்றும் கிழங்கு வகைகள், கஜு விதைகள் மற்றும் கஜு துண்டுகள் |
| 04. | தேங்காய்கள், தேங்காய் பால்/கிறீம் |
| 05. | முட்டைகள் |
| 06. | பலசரக்குப் பொருட்கள் மற்றும் தானியங்கள் |
| 07. | வாழைப்பழம் |
| 08. | வெள்ளைச் சீனி |
| 09. | தேயிலை/கோப்பித் தூள் |
| 10. | சூழலுக்கிசைவான உணவு சுற்றும் பொலித்தீன் தாள்கள் (17"x 17")மற்றும் (குறோசறி பைகள் - 7" x 10" மற்றும் 9" 12") |
| 11. | தேங்காய் எண்ணெய் |
| 12. | கோழியிறைச்சி |
| 13. | பிஸ்கட்கள் |
| 14. | பால்மா |
| 15. | கட்டிப்பால் |
| 16. | ஜேம் |
| 17. | மாஜரின் |
| 18. | எரிவாயு (L.P. Gas) |
| 19. | உணவு பொதி செய்யும் பெட்டிகள் (காட்போட்) |
| 20. | மீன் |
| 21. | குடிநீர் (போத்தலில் அடைக்கப்பட்டவை) |
| 22. | இடியப்பம், பிட்டு போன்றன |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ள விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மேற்படி 01 முதல் 22 வரையான பொருட்களுக்காக பதிவு செய்து கொள்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு பொருளுக்கும் ரூபா 1000.00 மற்றும் வெட் வரி என்பவற்றைச் செலுத்தியதன் பின் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தையில் அமைந்துள்ள வழங்கல் பிரிவில் பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
03. வழங்கல்களுக்காக பொதுவாக பதிவு செய்து கொண்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் பதிவு செய்து கொள்ளாத ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் விலைகளைக் கோரி பொருட்களைக் கொள்வனவு செய்யும் உரிமையை துறைமுக அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
04. முறையாக விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுபவர்கள் மற்றும் துறைமுக அதிகார சபையினால் வழங்கப்படும் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளின் பிரகாரம் சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பெயர் பட்டியலிலிருந்து அகற்றப்படும்.
05. சகல விண்ணப்பப் படிவங்களும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு, பிரதான முகாமையாளர் (வழங்கல்), வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலும் மேற்படி முகவரியில் உள்ள பிரதான பொறியியலாளர் அலுவலகத்திற்கு இந்த விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம். இதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
06. மேலதிக விபரங்களை **2323102, 2432866, 2328342, 2320250, 2482761, 2482499, 2482259** எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல் பிரிவு,**
**இலங்கைத் துறைமுக அதிகாரசபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு 01.**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2023.10.08
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** – சீட்டிழுப்பு இலக்கம் 5261 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,641,632.00
ஆங்கில எழுத்து B – வெற்றி இலக்கங்கள் 5 9 2 0 1 9

**கொவிசெத** – சீட்டிழுப்பு இலக்கம் 3503 – சீட்டிழுப்பு திகதி 08.10.2023 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,290,435.20
ஆங்கில எழுத்து O – வெற்றி இலக்கங்கள் 04 21 32 58 – விசேட எழுத்து O – இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 59986

**Mega POWER** – சீட்டிழுப்பு இலக்கம் 1609 – 2023.10.08 – 69488 – அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 409,855,200.00
ஆங்கில எழுத்து G – சுப்பர் இலக்கம் 11 – வெற்றி இலக்கங்கள் 27 38 60 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**லக்கி 7** – திகதி 08.10.2023 – சீட்டிழுப்பு இலக்கம் 0087
வெற்றி இலக்கினம் மிதுனம் – வெற்றி இலக்கங்கள் 8 5 7 3 2 6 – L7 இலக்கம் 2 5
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,498,532.96

**ராசி சுப பலன்** – திகதி 08.10.2023 – சீட்டிழுப்பு இலக்கம் 570 – அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,200,106.80
வெற்றி இலக்கினம் கடகம் – வெற்றி இலக்கங்கள் 09 27 48 60 – விசேட இலக்கினம் கடகம்

**தன நிதானய** – சீட்டிழுப்பு இலக்கம் 1291 – 08.10.2023 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 114,285,240.80
ஆங்கில எழுத்து G – வெற்றி இலக்கங்கள் 23 27 57 75 – விசேட எழுத்து G – இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 23426

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### ஏலவிற்பனை அறிவித்தல்

**விரைவில் அழிவுறக்கூடிய கப்பற் சரக்கின் விற்பனை**

**விற்பனைத் திகதி: 12.10.2023**

**My No.: LD/S/SAGT/2023/09/PC-01,02, LD/S/SAGT/2023/09/PC-04, LD/S/SAGT/2023/09/PC-06, LD/S/T/453/2023/CICT**

2023.10.12 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பண்டாரநாயக்க வாசல் (BQ) நலன்புரி கட்டிடத்தில் விற்பனை செய்யப்படவுள்ள தடையகற்றப்படாத விரைவில் அழிவுறக்கூடிய கப்பற் சரக்குகளான உறைந்த உருளைக்கிழங்கு உற்பத்திகள், சுத்திகரிக்கப்பட்ட கனோலா எண்ணெய், பருப்பு, சீனி, இனிப்பு பொருட்கள் மற்றும் கோதுமை மா ஆகியவற்றை அடக்கியுள்ளதும் SAGT&JCT திறந்த வெளிகளில் வைக்கப்பட்டுள்ளதுமான கொள்கலன்கள் ஆகியவை ஏல விற்பனை மூலம் விற்கப்படும்.

2023.10.11 ஆம் திகதியன்று மு.ப. 08.30 மணியிலிருந்து 2023.10.11 ஆம் திகதியன்று மதியம் 12.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000 ரூபாவையும் (அத்துடன் பெசேவ) மீளளிக்கப்படும் கட்டணமாக 200,000 ரூபாவையும் செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி, 15ஆம் இலக்கத்திலுள்ள கெனல் யாட், இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் லொஜிஸ்டிக்ஸ் பிரிவு, விற்பனை பிரிவின் அலுவலகத்திலிருந்து (One-Stop ஆவணமாக்கல் நிலையம்) ஏலவிற்பனை ஆவணங்கள் மற்றும் கேட் உட்செல்லல் அனுமதிப்பத்திரங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனைக்காக பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் 2023.10.11ஆம் திகதியன்று பி.ப. 1 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் உரித்தான திறந்த வெளியில் பரீட்சிக்கப்படலாம்.

மேலதிக விபரங்களிற்கு **www.slpa.lk** என்பதனை பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்)**
10.10.2023

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### வலு மற்றும் சக்தி அமைச்சு
### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

**Supply of White Cans**
**B//38/2023**

White Cans ஐ வழங்குவதற்காக புகழ்வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகியிருத்தலும் வேண்டும்.

2023.10.31 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணி வரைக்குமிடையில் இபெகூ இற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 ரூபாவை (2,969.25 + 2.5% SSCL + 15% VAT) செலுத்திய பின்னர், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்து விலைமனுக்களும் 108,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2023.11.01ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.dre.gov.lk/ என்ற இணையதளத்தின் வழியாக தம்மை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து அவர்களின் விலைமனுவுடன் பிசிஏ 3 சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், 0773173920 என்ற தொலைபேசி இலக்கத்தின் வழியாக உதவி முகாமையாளரிடமிருந்து (Agro) பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் முகாமையாளர் மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09. இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-5455335**
**தொலைநகல்: 0094-11-5455424**

# கிழக்கின் குரல்



# செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஜனாதிபதி











மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகாவித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நேற்றுமுன்தினம் (08) காலை கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்ததுடன், சாரண மாணவர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

# பிராந்திய பொருளாதாரத்துக்கு தென்கிழக்கு பல்கலைக்கழகம் பெரும் பங்காற்றுகிறது

## உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்



(ஒலுவில் விசேட நிருபர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகம் பல பரிணாம வளர்ச்சிகளுடன் தேசிய ரீதியில் தனது செயற்பாட்டை முன்னெடுத்து ஒரு முன்மாதிரியான பல்கலைக்கழகமாக திகழ்வதாக தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தினால் நடாத்தப்பட்ட உளவளத்துணை, ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளை பூர்த்தி செய்த டிப்ளோமா தாரர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல்கலைக்கழகங்கள் சமூகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும். அப்போதுதான் அவை பரிபூரணமான பல்கலைக்கழகமாக மாறும். அந்தவகையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இப்பிராந்தியத்தில் சமூகத்துடன் இணைந்து சமூக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வெளியேறுகின்ற மாணவர்கள் வெறுமெனே பட்டதாரியாக மட்டும் வெளியேறாமல் சிறந்த ஒரு கல்விமானாக வெளியேறுவதற்கான வசதிகளை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தியுள்ளது.

உலக மாற்றத்திற்கேற்ப ஒவ்வொருவரும் கணினி மற்றும் ஆங்கிலம் ,தொழில்நுட்ப அறிவுகளையும், வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போது தான் பூரணமானவர்களாக மாற முடியும்.



தற்போதைய கால கட்டத்தில் உளவளத்துனை என்பது முக்கியமான ஒன்றாக மாறியுள்ளது. இக்கற்கை நெறியை கற்று டிப்ளோமா பட்டத்தை பெற்றுள்ளவர்கள் தான் சார்ந்த சமூகத்திற்கு பணியாற்ற வேண்டும். நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் இப்பிராந்தியத்தில் விவசாய, மீன்பிடி துறைகள் பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளது. பிராந்திய பொருளாதார மேம்பாட்டிற்கும் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பெரும் பங்கினை வகித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்



திராய்க்கேணி தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரமவின் ஏற்பாட்டில் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம் அதாஉல்லா (பா.உ), WD வீரசிங்ஹ (பா.உ), கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரின் இணைத் தலைமையில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது மாவட்டத்தின் நகர அபிவிருத்தி, நீர்ப்பாசன அபிவிருத்தி, சுற்றுலாத்துறை மேம்படுத்தல், குடிநீர் சம்பந்தமான பிரச்சினைகள் இன்னும் பல முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.



உஸ்கு கராத்தே சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை உஸ்கு கராத்தே போட்டிகள் குருநாகல் நகர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 800ற்கும் அதிகமான போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். கிழக்கு மாகாணத்திலிருந்து ஓட்டமாவடி, வாழைச்சேனை, நிந்தவூர், பொத்துவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கல்குடா சொட்டகன் கராத்தே மார்ஷல் ஆர்ட் பாடசாலை சார்பாக பங்குபற்றிய மாணவர்கள் தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம்,வெண்கலப்பதக்கங்கள் உள்ளடங்கலாக பதக்கங்களைப் பெற்று கிழக்கு மண்ணுக்கும் தனது கழகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். இப்போட்டிதொடர், பரிசளிப்பு வைபவம் என்பன அகில இலங்கை உஸ்கு கராத்தே சங்கத்தின் தலைமையாசிரியர் சிஹான் ரவூப் தலைமையில் நடைபெற்றதோடு கிழக்கு மாகாண உஸ்கு கராத்தே சங்கத்தின் தலைமையாசிரியர் சிஹான் எம்.எஸ்.வஹாப்தீன் அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்து சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வெற்றியாளர்களுக்கு வழங்கிவைத்தார். மேலும் மாணவர்களுக்கு பயிற்சியளித்த பயிற்றுவிப்பாளர்களான முபாரக், சதாம், ஆதில், காதர் ரியாஸ், நிம்ஸி அஹமெட் மற்றும் பாடசாலை கராத்தே ஒருங்கிணைப்பாளர் பிர்னாஸ் (ஆசிரியர்) ஆகியோரை பாராட்டி அகில இலங்கை உஸ்கு கராத்தே சங்கத்தின் தலைமையாசிரியர் சிஹான் ரவூப் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார்.

# மாளிகைக்காட்டில் கடலரிப்பை கட்டுப்படுத்த அலைத்தடுப்பு சுவர்

(கல்முனை விசேட நிருபர்)

காரைதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாளிகைக்காடு பிரதேசத்தில் உக்கிரமடைந்துவரும் கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான அலைத் தடுப்புச் சுவர் அமைக்கும் ஆரம்ப கட்ட வேலைத்திட்டம் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமினால் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் பிரகாரம் கடலரிப்பைத் தடுப்பதற்கான நிரந்தரத் தீர்வாக கரைக்குக் குறுக்காக கல் வீதி அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாளிகைக்காடு கிழக்கு வட்டார அமைப்பாளர் எம்.எச்.நாஸர் தலைமையில் இவ்வேலைத்திட்டம் ஆரம்பமானது. இதன் போது உரையாற்றிய திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவிய ஜனாதிபதிக்கு நன்றி. அத்துடன் இப்பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் இவ்வேலைத்திட்டத்தை குறுகிய காலத்துக்குள் துரிதமாக நிறைவு செய்யுமாறு பொறியியலாளர் உள்ளிட்ட அதிகாரிகளை அவர் வேண்டிக் கொண்டார்.

# மேய்ச்சல் நிலங்கள் ஆக்கிரமிப்பு; பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் தரைப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்ட காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்தவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேற்றுமாறு கோரி பண்ணையாளர்கள் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு கொம்மாதுறையில் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்க ளப்பு கொம்மாதுறைப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக ஒன் றுகூடிய பண்ணையாளர்கள் வீ தியோரத்தில் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்தி மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பாளர்களை உடனடியாக வெளியேற்றுமாறு கோரி பண்ணையாளர்கள் கடந்த 24 நாட்களாக சித்தாண்டியில் சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டத்திலும் ஈடுபட்டு வந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை மேய்ச்சல் தரைப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டிருந்த மயிலத்தமடு பெரியமாதவனை பகுதியில் 50ற்கும் மேற்பட்டோர் பயிர்செய்கை மற்றும் விவசாய செய்கைக்கென நிலங்களை ஆக்கிரமித்துள்ளனர். மேய்ச்சல் தரையை ஆக்கிரமித்தவர்கள் கால்நடைகளை அழிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தனர். இதனைத் தடுக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்தவித ஆக்கபூர்வமான தீர்வும் கிடைக்கவில்லையென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# நுகர்வோர் அதிகாரசபையினால் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்



(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் மாணவர்கள், அரச அலுவலர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் போன்ற அனைவர் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது பாவனையாளர் உரிமைகள், சட்டங்கள், பாதுகாப்பு, பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள், தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்பந்தமாக கல்லூரி மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

# மாத்தறை மாவட்டத்தில் வெள்ள அனர்த்த நிலைமையை கட்டுப்படுத்த புதிய தீர்மானம்



மாத்தறை நில்வளா கங்கையில் தடுப்பணையில் உள்ள ஒரு பகுதியை மாற்றுவதற்கும் கிளை ஆற்றில் உள்ள தடைகளை அகற்றுவதற்கும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மாத்தறை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்நிலையில் நில்வளா கங்கையில் அமையப்பெற்றுள்ள தடுப்பணையால் தான் இந்த நிலைமை என மக்கள் தரப்பிலிருந்து குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

வரட்சி காலத்தில் கடல் நீர் ஆற்றுடன் வந்து கலக்காமல் இருப்பதற்காகவும், சுத்தமான குடிநீர் பெறும் நோக்கிலும் தான் இந்த தடுப்பணை அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மாத்தறை மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான குறுகிய கால மற்றும் நீண்டகால தொழில்நுட்ப ரீதியிலான தீர்வை காண்பதற்கான விசேட கூட்டமாக இது அமைந்திருந்தது.

இக்கூட்டத்தில் அமைச்சருடன், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நீர்ப்பாசனத்துறை இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச, பாராளுமன்ற உறுப்பினர்களான நிபுண ரணவக்க, புத்திக பத்திரண, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அதிகாரிகள், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள், நீர்ப்பாசனத்துறை அமைச்சின் அதிகாரிகள், மாத்தறை மாவட்ட செயலாளர் உட்பட அதிகாரிகள், பொறியியலாளர்கள் என முக்கியஸ்தர்கள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தின் போது வெள்ள அனர்த்தங்களை கட்டுப்படுத்துவதற்காக குறுகிய கால மற்றும் நீண்ட கால தொழில்நுட்ப ரீதியில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

இவ்வேளையிலேயே அந்த தடுப்பணையில் ஒரு பகுதியை மாற்றுவதற்கும் அந்த ஆற்றில் உள்ள தடைகளை அகற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொறியியலாளர்களின் மேற்பார்வையின் மூலம், இராணுவம் மற்றும் கடற்படையில் உள்ள அதிகாரிகளின் உதவியுடன் வேலைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதேபோல எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாதிருப்பதற்காக எவ்வாறான திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் நீர்வழங்கல் அமைச்சும், நீர்ப்பாசனத்துறை அமைச்சும் இணைந்து ஒரு கூட்டு அமைச்சரவை பத்திரத்தை முன் வைக்கவும் கொள்கை ரீதியில் இணக்கம் காணப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

112
**மெஸ்டா கார்கள் விற்பனைக்கு**

HK-9469 MAZDA 2000, CAR அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1454295 8 . 064072

117
**வேன்கள் விற்பனைக்கு**

JJ-0692 DAIHATSU 1999, VAN அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1454295 8 . 064061

119
**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

HO-5804 TOYOTA 1999, LORRY அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1454295 8 . 064070

PS -4742 MAHINDRA MA XIMO, 2011 அ தியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 063248

122
**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

AAW-2157 BAJAJ 2015, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 063145

BHW-0973 HONDA DIO 2019, MOTOR CYCLE அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎ ல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 064068

QV-5511 BAJAJ 2009, QU-1501 BAJAJ 2009, THREE WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 070599916 3 . 064065

YO-4779 TVS KING 2011, THREE-WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711 2 1 081 0 . 064062

123
**மோட்டார் சைக்கிள்கள் - திரீ வீலர்கள் பொது சேவைகள்**

ABA-0361 BAJAJ 2015, YN-2568 BAJAJ 2011, THREE WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 064059




குருநாகல் எல். ஓ. சி அல் பலாஹ்வின் ஏற்பாட்டில் ஐந்தாம் தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மல்லவப்பிட்டிய அல்ஹம்ரா ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான இலவச பயிற்சிக் கருத்தரங்கும் பெற்றோருக்கான வழிகாட்டல் நிகழ்வும் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அல் பலாஹ்வின் சிரேஷ்ட முகாமையாளர் தில்பவ்சி, அல் பலாஹ்வின் குருநாகல் பிரதி முகாமையாளர் அஹமட் நுஸ்கி, அன்பாஸ் முஹமட் மற்றும் மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(மாவத்தகம தினகரன் நிருபர்)


## சீத்தாவக்கபுர நகர சபை

### மீள் சுழற்சிப் பொருட்களை விற்பனை செய்வதற்கான பெறுகை அறிவித்தல்

சீத்தாவக்கபுர நகர சபையினால் சேர்க்கப்படும் மீள் சுழற்சிப் பொருட்களை 2024.01.01 முதல் 2024.12.31 வரை விற்பனை செய்வதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் என்னால் கோரப்படுகின்றன.

- **விலைமனு மாதிரிப் பத்திரங்கள் விநியோகித்தல்**
  2023.10.30 பி.ப. 2.00 வரை
- **விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளல்**
  2023.10.31 மு.ப. 10.00 வரை
- **விலைமனுக்கள் திறத்தல்**
  2023.10.31 மு.ப. 10.30 இற்கு சீத்தாவக்கபுர நகர சபை அலுவலகத்தில்

கேள்விப்படிவக் கட்டணம் ரூ. 1000.00 ஆகும். மீளளிக்கப்படும் பெறுகை பிணை வைப்பு ரூ. 2000.00ஐ இவ் அலுவலகத்திற்கு செலுத்திப் பெற்றுக் கொள்ளும் மாதிரிப் பத்திரத்தில் மட்டும் விலைமனுக்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தொடர்பு: 036-2222285**

**கே.ஏ. சந்தன பத்மசிரி**
**சீத்தாவக்கபுர நகர சபையின் செயலாளர் மற்றும்**
**அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி (பதில்)**
**சீத்தாவக்கபுர நகர சபை, அவிசாவளை**


# பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு

இரத்தோட்டை இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் எம். சந்திராதேவி தலைமையில் நடைபெறவுள்ளது. பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இரத்தோட்டை இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் எம். சந்திராதேவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் சர்வதேச சிறுவர் தின விழாவின் போது கல்லூரி அதிபர் என்.எம்.ஷாஃபி, ஆசிரியர்களும் இணைந்து ஒழுக்கம், கல்வி, பணிவு, அர்ப்பணிப்பு, வரவு ஆகிய விடயங்களில் அதிதிறமை காட்டிய 'சிறந்த மாணவனாக' எம்.ஜே.எம்.ஷிஃபாக் தெரிவு செய்யப்பட்டதையடுத்து கலாபூஷணம் பரீட் இக்பால் அம்மாணவனுக்கு விருது வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம். அருகில் ஒஸ்மானியா கல்லூரி அதிபர் என்.எம்.ஷாஃபியை படத்தில் காணலாம்.

# சடலம் மீட்பு

*(யாழ்.விசேட நிருபர்)*

யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள பாழடைந்த கட்டடமொன்றிலிருந்து நபரொருவர் நேற்றைய தினம் திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்,

சடலமாக மீட்கப்பட்ட நபர் அடையாளம் காணப்படாத நிலையில், யாழ்ப்பாண பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.


## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

### பெறுகை அறிவித்தல்

**2023/2024 ஆம் ஆண்டிற்கான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையில் அமைந்துள்ள ஜனஜெய சிட்டி சூப்பர் மார்க்கெட் வளாகத்தை காப்பீடு செய்தல்**

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையில் அமைந்துள்ள ஜனஜெய சிட்டி பல்பொருள் அங்காடி வளாகம் மற்றும் அதில் பொருத்தப்பட்டிருக்கும் கண்ணாடிகளுக்காக **2023.12.01** ஆம் திகதி முதல் **2024.11.30** ஆம் திகதி வரை முழுமையான காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் **(IRCSL)** கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்கள் மூலமாக **2023.10.10** ஆம் திகதி முதல் **2023.10.31** ஆம் திகதி **பி.ப.2.00** வரை கேள்வி மனுக்கள் கோரப்படும்.

உங்கள் நிறுவனத்திடமிருந்து முகவுரைக் கடிதத்தை சமர்ப்பித்து **ரூ.5,750/-** கட்டணத்தை (வட் வரியுடன்) இந்த அலுவலகத்தில் செலுத்திய பின்னர் அதற்கான கேள்விமனு படிவங்களை **2023.10.30** ஆம் திகதி **பி.ப.3.00 மணி** வரை பெற்றுக் கொள்ளலாம்.

**2023.10.31** ஆம் திகதி **பி.ப.2.00** மணி வரை கேள்விமனு படிவங்களை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், அன்றைய தினம் **பி.ப.2.30** மணிக்கு மனுக்கள் திறக்கப்படும்.

**ஆர். ஏ. ஷாலிக்கா எஸ். இரணவீர,**
**நகராட்சி ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை இராஜகிரிய.**



## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

### பெறுகை அறிவித்தல்

**2023/2024 ஆம் ஆண்டிற்கான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையில் அமைந்துள்ள வாகனத் தொகுதியினை காப்பீடு செய்தல்**

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையில் அமைந்துள்ள வாகனத் தொகுதிக்காக **2023.12.01** ஆம் திகதி முதல் **2024.11.30** ஆம் திகதி வரை முழுமையான காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் **(IRCSL)** கீழ் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்கள் மூலமாக **2023.10.10** ஆம் திகதி முதல் **2023.10.31** ஆம் திகதி **பி.ப.2.00** வரை கேள்வி மனுக்கள் கோரப்படும்.

உங்கள் நிறுவனத்திடமிருந்து முகவுரைக் கடிதத்தை சமர்ப்பித்து **ரூ.5,750/-** கட்டணத்தை (வட் வரியுடன்) இந்த அலுவலகத்தில் செலுத்திய பின்னர் அதற்கான கேள்விமனு படிவங்களை **2023.10.30** ஆம் திகதி **பி.ப.3.00 மணி** வரை பெற்றுக் கொள்ளலாம்.

**2023.10.31** ஆம் திகதி **பி.ப.2.00** மணி வரை கேள்விமனு படிவங்களை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், **அன்றைய தினம் பி.ப.2.15** மணிக்கு மனுக்கள் திறக்கப்படும்.

**ஆர். ஏ. ஷாலிக்கா எஸ். இரணவீர,**
**நகராட்சி ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை இராஜகிரிய.**



NLB

## தேசிய லொத்தர் சபை

**நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**ஒரு வருட காலத்திற்கு தேசிய லொத்தர் சபைக்கு ஊடகத்தை கொள்வனவு செய்வதற்குரிய விளம்பர முகவரகம்/ நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்கான பெறுகை**

**NLB/PRC/19/ADV.AG./0108/2022 – II**

1. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் கீழ் ஒரு வருட காலத்திற்கு தேசிய லொத்தர் சபைக்கு ஊடகத்தை கொள்வனவு செய்தல், திட்டமிடுதல் மற்றும் கண்காணித்தல் செயல்முறையைப் பெற்றுக்கொள்வற்காக அங்கீகாரம் பெற்ற மற்றும் கீர்த்தி வாய்ந்த விளம்பர முகவரகங்கள்/ நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய லொத்தர் சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. முகவரகங்கள்/ நிறுவனங்கள் தேசிய லொத்தர் சபையின் நோக்கங்களை அடைவதற்கும் சிறந்த நலன்களைப் பாதுகாப்பதற்கும் உயர்ந்த பங்களிப்பைச் செய்தல் வேண்டும்.
3. மூலப் பிரமாணங்கள்
   i. இலங்கையின் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
   ii. ஊடகத்தை கொள்வனவு செய்தல், திட்டமிடுதல் மற்றும் கண்காணித்தல் செயல்முறை நடவடிக்கைகளில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால தொடர்ச்சியான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள மற்றும் தகுதி வாய்ந்த விளம்பர முகவரகங்கள் பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து, திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை (பொது விடுமுறைகள் நீங்கலாக) 2023.10.10ஆம் திகதியிலிருந்து 2023.10.30ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபை, முதலாம் மாடியில் பெறுகை பிரிவிலிருந்து விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான ஆங்கில மொழியிலான தொகுதியொன்றை பெற்றுக்கொள்ளலாம்.
   அ. கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபை பொது முகாமையாளருக்கு முகவரியிடப்பட்ட வியாபாரக் கடிதத் தலைப்பிலான எழுத்து மூலமான வேண்டுகோள்
   ஆ. மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா (வெட் சகிதம்) கட்டணம் செலுத்திய சான்று, பணம் செலுத்தும் முறை பணமாக இருக்க வேண்டும்.
   இ. விலைமனு ஆவணங்கள் மேற்கண்ட திகதிகளிலும், நேரத்திலும் முகவரிகளிலும் இலவசமாகப் பரிசோதிக்கப்படலாம்.
5. விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   அ. விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
   ஆ. மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட தனித்தனியான உறைகளில் இட்டு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என முறையாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை உள்ளடக்கிய உறைகளை தனியொரு உறையில் உள்ளிடுதல் வேண்டும்.
   இ. உள்ளக மற்றும் வெளியக கடித உறைகள்:
      i. ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய லொத்தர் சபை, இல. 32, தேசமான்ய என். டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு-01 என முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
      ii. உள் மற்றும் வெளிப்புற உறைகளின் மேல் மத்தியில் விலைமனுவின் பெயர் மற்றும் அடையாள எண் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
   ஈ முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-10-31ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய லொத்தர் சபை, இல. 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு-01'' எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது மேற்கூறிய முகவரியில் 5ஆம் மாடியில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
   உ இலத்திரனியல் மூலம் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
6. அனைத்து விலைமனுக்களுடனும் 132,000.00 ரூபா (ஒரு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரம் ரூபா) பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் மட்டும் வழங்கப்பட்ட கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபை தலைவரை பயனாளராக குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2024-01-31ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி, உடனடியாகவே மேலேயுள்ள முகவரியில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
9. **நிபந்தனைகள்:**
   i. இலங்கையில் லொத்தர் சீட்டுகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வேறு எந்தவொரு நிறுவனத்திற்கு தற்போது சேவைகளை வழங்கும் எந்தவொரு விளம்பர பிரசார முகவரகம் / நிறுவனம் அவர்களின் பெயரில் அல்லது அவர்களது இணை நிறுவனங்களின் பெயரில் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கத் தகுதி இல்லை.
   ii. எந்தவொரு காரணத்தையும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
   iii. விண்ணப்பங்களை தயாரித்தல் அல்லது வழங்குவது தொடர்பாக விலைமனுதாரர்களால் ஏற்படும் எந்தவொரு கிரயம் அல்லது செலவுகளுக்கு தேசிய லொத்தர் சபை பொறுப்பேற்காது.
   iv. எவ்விதத்திலும் ஆதரவைப் பெற முயற்சித்தல் தகுதியீனமாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களை கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபையின் உதவிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே இல.: 011-4607020, 011-4607021 / 011-4607084

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய லொத்தர் சபை,**
**இல.: 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு-01.**

# அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை ஏற்பாட்டில்

# கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் ஞாபகார்த்த கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி – 2023

## வை.எம்.எம்.ஏ. ஏறாவூர் அணி சாம்பியன்




திருகோணமலை மாவட்ட வை.எம்.எம்.ஏ. கிளைகள் மற்றும் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை இணைந்து நடத்திய கலாநிதி ஏ.எம். ஏ. அஸீஸ் ஞாபகார்த்த கால்பந்தாட்ட வெற்றிக் கிண்ணப் போட்டி அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தலைமையில் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் கோலாகலமாக நடைபெற்றது.

ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் எம். எம். முக்தாரின் வழிகாட்டலுடன் இடம் பெற்ற இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக சமூக சேவையாளர் எம். டி. எம். பாரிஸ் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் சஹீட் எம். றிஸ்மி. பேரவையின் செயலாளர் ஆசிப் சுக்ரி, பேரவையின் உபதலைவர்களான யூ. எம். பாசீல், எம்.ஐ. உதுமாலெப்பை, பேரவையின் எம். கே. எம். லுக்மான், இஸ்மத் ரிப்தி, ஏ. எல். எம். பாரூக், நாசிர் ஏ. காமில், இஹ்திசான் ஹுஸைன்டீன், எம். எஸ். எம். காதர், எஸ். எம். நாஸிம், திருகோணமலை கால்பந்தாட்டக் குழுவின் தலைவர் செயலாளர் உட்பட பேரவையின் மாவட்டப் பணிப்பாளர்கள் பதவி வழி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.









இதன் போது விளையாட்டுக்காக தங்களை தியாகம் செய்த மூத்த விளையாட்டு வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர். நடுவர் எம். எம். அமீர், ஜே. எம். நியாஸ், முஹம்மது இப்றாஹீம் பாரூக், எம். என்.எம் நாஜீத், பாலமுருகன், எம். எம். ரசூல், எம். எச். எம். பாரிஸ் ஆகியோர் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் எம்.எம். அமீர், வை. பியாழ், முஹமட் முப்ழி ஸ்டீபன், ரிஸ்வான், ரிப்தி ஆகியோர்கள் நடுவர்களாக கலந்து கொண்டனர்



இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுதலுக்காக நாடளாவிய ரீதியில் 21 அணிகள் விண்ணப்பித்திருந்தன. அதில் 15 அணிகள் தெரிவு செய்யப்பட்டு பலப்பரீட்சையில் ஈடுபட்டன. அந்தவகையில் இறுதிக் கட்டப் போட்டிக்காக தொட்டவத்தை அணியை எதிர்த்து விளையாடிய பம்மன்ன அணி தெரிவு செய்யப்பட்டது. புத்தளத்தை எதிர்த்தாடிய ஏறாவூர் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டது.

இந்த இரு அணிகளுக்கிடையிலான போட்டி மாலை 4.00 மணி அளவில் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வகையில் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த பம்மன்ன அணியினர் போட்டி ஆரம்பித்து 5 நிமிடத்தில் தமது முதலாவது கோலினைப் பெற்று அணியின் பலத்தை அதிகரித்திருந்தனர். அதனைத் தொடர்ந்து ஏறாவூர் அணியினர் இடைவேளை ஆரம்பிக்கப்பட்டு 7 நிமிடத்தில் கோலைப் பெற்றனர். அதனைத் தொடர்ந்து ஏறாவூர் அணி மற்றுமொரு கோலைப்பெற்று தம் அணியின் பலத்தை உறுதியாக தக்க வைத்துக் கொண்டது. இரண்டுக்கு ஒன்று என்ற அடிப்படையில் ஏறாவூர் அணி வெற்றிபெற்று கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

திருகோணமலை மாவட்ட வை.எம். எம்.ஏ. கிளைகள் மற்றும் பேரவை இணைந்து தேசிய ரீதியில் வை.எம். எம்.ஏ. கிளைகள் கலந்து கொண்ட கால் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வை.எம். எம்.ஏ. புத்தளம் அணி மூன்றாம் இடம் பெற்று தெரிவு செய்யப்பட்டது.

ஏறாவூர் வை.எம். எம். ஏ அணியானது முதல்போட்டியில் திருகோணமலை ஜமாலியா அணியை 20 என்ற கோல் கணக்கிலும் காலிறுதிப்போட்டியில் திருகோணமலை நகர் அணியினை 30 என்ற கோல் கணக்கிலும் அரையிறுதிப்போட்டியில் புத்தளம் அணியினை 20 என்ற கோல் கணக்கிலும் இறுதிப்போட்டியில் குருநாகல் பம்மன்ன அணியினை 21 என்ற கோல் கணக்கிலும் வீழ்த்தி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

சம்பியன் அணிக்கு கிண்ணமும் ஒரு இலட்சம் பணப்பரிசும், இரண்டாமிடம் கிண்ணத்துடன் 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும் மூன்றாவது இடத்திற்கு கிண்ணத்துடன் 25 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த விளையாட்டு வீரராக எம். முன்சீப் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு ரூபா 5000 பணப்பரிசு வழங்கப்பட்டது. சிறந்த கோல் காப்பாளர் பரிசு எம். என். எம். முர்ஷிதுக்கு வழங்கப்பட்டது.

★ இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் தேசியத் தலைவர் இஹ்திசான் ஏ. ஹமீட் உரையாற்றும் போது; இந்த நிகழ்வின் முக்கிய நோக்கமானது எமது மாவட்டத்திலுள்ள இளைஞர்களின் ஒற்றுமையை வலுப்படுத்தவும் எமது இளைஞர் கழகத்திலுள்ள இளைஞர்களை தேசிய ரீதியில் விளையாட்டுத் துறையில் பிரகாசிக்கச் செய்யவும் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கும் முகமாக இந்த விளையாட்டுப் போட்டி வருடா வருடம் நடத்தப்பட்டு வருகிறது.

இலங்கையில் ஏற்பட்ட கொரோனாவினால் எமது நாடு பொருளாதார ரீதியில் பின்னடைவினை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் தருணத்தில் நாடளாவிய ரீதியில் இளைஞர்கள் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகி தமது எதிர்காலத்தை இழந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அக்காலத்தில் போதைவஸ்துப் பாவனை குறைந்தளவில் இருந்தமைக்கான முக்கிய காரணம் விளையாட்டுப் போட்டிகளில் இளைஞர் அதிகளவு ஈடுபட்டு வந்தார்கள். அந்த ஈடுபாடு தற்பொழுது குறைவடைந்து இருப்பதனால் அவர்கள் போதைவஸ்துப் பாவனைகளிலும் ஏனைய மோசமான காரியங்களிலும் ஈடுபட்டு தங்களுடைய வாழ்வை சீரழித்துக் கொண்டிருப்பதை நாம் எம் கண் முன்னே கண்டு வருகின்றோம்.




எனவேதான், விளையாட்டின் ஊடாக போதையில் இருந்து மீட்போம் என்ற தொனிப் பொருளின் ஊடாக இந்த நிகழ்வை திருகோணமலையில் நடத்துவதற்கு தீர்மானம் எடுத்து இங்கு நடத்த முன்வந்துள்ளோம் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அது மட்டுமன்றி இந்த விளையாட்டின் மூலம் இந்த சமூகத்திற்குப்பறை சாற்றி இருக்கின்றோம். அதன் அடிப்படையில் முதலாவதாக நேர முகாமைத்துவம் பற்றி சொல்லிக் கொடுத்து இருக்கின்றோம். ஒரு நிகழ்வு நடைபெற்றால் அது எந்தளவு, எந்த வகையிலான முறையிலே நேர முகாமைத்துவத்தைக் கையாள முடியும். அதைக் கையாளுவதன் மூலம் எமக்கு கிடைக்கு வெற்றி என்ன அதன் அழகு என்ன என்பதை நாம் கண்டு கொள்ளலாம்.



எப்பொழுதும் விளையாட்டின் மூலம் சண்டைகள் பிரச்சினைகள் வரும் என்றும் எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். அவைகளினால் இந்த விளையாட்டு நடத்த முடியாது எனப் பலர் கருத்து தெரிவிப்போர்களும் உண்டு. ஆனால் அந்த விமர்சனம் எவையும் இல்லாமல் இந்நிகழ்வில் கலந்து கொண்ட விளையாட்டுக் கழகங்கள் ஒழுக்கமான ஒரு தலைமைத்துவத்தின் கீழ் சீரான கட்டுப்பாட்டுடன் செயற்படக் கூடிய நல்ல விளையாட்டுக் கழகங்களையும் அதில் விளையாடக் கூடிய நல்ல வீரர்களையும் நாளை நல்ல பிரஜைகளை உருவாக்கக் கூடிய நல்ல வீரர்களையும் இனங்காணக் கூடிய வாய்ப்பு இந்த விளையாட்டின் மூலம் காணக் கூடியதாக இருந்தது. எங்களுக்கிடையே காணப்பட்ட ஒற்றுமை இந்த நிகழ்வின் ஊடாக வெளிக்காட்டியுள்ளோம்.

இந்த விளையாட்டின் போது ஏனைய சமூகத்தைச் சேர்ந்த சமூகப் பிரமுகர்களும் விளையாட்டு வீரர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இந்த விளையாட்டில் சிங்கள, தமிழ், கிறிஸ்தவ ஆகிய இளைஞர்களும் பங்கு கொண்டு தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தினர். இதனை வரலாற்றில் மிக முக்கித்துவம் வாய்ந்த நிகழ்வாகக் கொள்ள வேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் பல்லின மக்கள் வாழ்கின்றனர். இந்த செயற்பாடு சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயப்பாடுகளும் இல்லை.

இன்றைய நாள் சிறுவர் தின நாளாக இருந்தமையால் சிறுவர்களையும் கௌரவிக்க வேண்டும் என்பதன் காரணமாக இந்த விளையாட்டு நிகழ்ச்சியில் அவர்களுக்கும் ஒரு சிறந்த களத்தையும் அமைத்துக் கொடுத்து அவர்களுடைய செயற் திறனையும் வெளிக்கொணர ஒரு வாய்ப்பாக இந்த விளையாட்டு விழா அமைந்தது என்று குறிப்பிடலாம்.

இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காக பல மாவட்டங்களில் இருந்து பலர் விண்ணப்பங்கள் செய்திருந்தார்கள்.

இதில் தெரிவு செய்யப்பட்ட 15 அணியினர் அவர்களது வீரர்களுடன் வருகை தந்திருந்தார்கள். அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்கள் செய்திருந்தாலும் ஓர் இடத்திற்கு நாங்கள் செல்லும் போது அங்கு ஏற்படும் தடங்கள் சிக்கல்களை இருந்தாலும் அவற்றை எல்லாம் சகித்துக் கொண்டு எந்தவொரு சிக்கலுமின்றி மனச் சந்தோசத்துடன் இங்கு விளையாட்டுக் கழகங்கள் நடந்து கொண்டதை நாம் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது.

திருகோணமலை மாவட்டத்தில் மென் மேலும் பல நிகழ்வுகளை நடத்தி இளைஞர்களின ஆளுமை ஆற்றலை வலுப்படுத்த பேரவை எப்பொழுதும் தயாராக இருக்கிறது. இந்த மைதானத்தின் சுற்றுச் சூழல் இரு நாளும் எமது கிளையின் வாலிபர்களினால் சுத்தம் செய்து அழகு படுத்தப்பட்டிருந்தன. அது மட்டுமல்ல திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவர்களின் முதலுதவிச் சேவை இடம்பெற்றது.

தமிழ் மாணவர்கள் வந்து இந்தச் சேவையை வழங்கியமைக்கு நாங்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்விளையாட்டுப் போட்டிக்கு நிதி உதவிகள், பொருள் உதவிகள், ஆலோசனைகள் என வழங்கிய அனைவருக்கும் நான் விசேடமாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**இக்பால் அலி**






# 2024ம் ஆண்டிற்காக இறைச்சி, மீன் கடைகளை குத்தகைக்கு விடல்

சீத்தாவக்கபுர நகர சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் இடங்களில் 2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

| தொடர் இல. | புதிய வர்த்தக கட்டிட தொகுதி மேற்கு கடை அறை இலக்கம் | கேள்விப் படிவக் கட்டணம் (ரூ.) | கேள்வி வைப்புக்கள் (ரூ.) | 2024ம் ஆண்டிற்கான குறைந்த பட்ச மாதாந்த வாடகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | M52 மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 105,000.00 | 156,090.00 |
| 02 | M46 ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 25,000.00 | 13,200.00 |
| 03 | M49 பன்றியிறைச்சிக் கடை | 1,500.00 | 50,000.00 | 33,110.00 |
| 04 | M45 கோழியிறைச்சிக் கடை | 750.00 | 5,000.00 | 15,400.00 |
| 05 | M50/51 மீன் கடை | 1,500.00 | 50,000.00 | 33,165.00 |
| 06 | புவக்பிட்டிய ஞாயிறு சந்தை 01 மீன் கடை | 500.00 | 2,500.00 | 27,610.00 |

கேள்விப்படிவங்கள் விநியோகித்தல் - 2023.10.30 பி.ப. 2.00 வரை
கேள்விப் படிவங்கல் ஏற்றுக் கொள்ளல் - 2023.10.31 மு.ப. 10.00 வரை
கேள்வி திறத்தல் - 2023.10.31 மு.ப. 10.30 இற்கு சிதாவக்கபுர நகர சபை அலுவலகத்தில்

**கே.ஏ. சந்தன பத்மசிரி**
**செயலாளர் மற்றும் சீத்தாவக்கபுர நகர சபையின்**
**அதிகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**சீத்தாவக்கபுர நகர சபை,**
**அவிசாளை.**

.................................................................

**தொ.பே. இலக்கம்: 036-2222275, 036-2222285**
**மின்னஞ்சல் முகவரி: seethawakapurauc@gmail.com**

# பெறுகை அறிவித்தல்

## சமைக்காத / சமைத்த உணவு வழங்குதல் - 2024

### ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்கு 2024.01.01ஆம் திகதி தொடக்கம் 2024.12.31ஆம் திகதி வரையுள்ள காலத்தில் சமைத்த உணவு வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| பொதி இல. | வைத்தியசாலை | கேள்வி மாதிரிப் படிவக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை ரூபா | சொத்துச் சான்றிதழின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| **A தரமுடைய ஆதார வைத்தியசாலைகள்** | | | | |
| 01 | ஆதார வைத்தியசாலை தியத்தலாவ | 8,000.00 | 230,000.00 | 700,000.00 |
| 02 | ஆதார வைத்தியசாலை மஹியங்கனை | 10,000.00 | 340,000.00 | 700,000.00 |
| **B தரமுடைய ஆதார வைத்தியசாலைகள்** | | | | |
| 03 | ஆதார வைத்தியசாலை பிபிலை | 5,500.00 | 140,000.00 | 600,000.00 |
| 04 | ஆதார வைத்தியசாலை வெலிமட | 6,000.00 | 145,000.00 | 500,000.00 |
| 05 | ஆதார வைத்தியசாலை வெல்லவாய | 4,500.00 | 130,000.00 | 400,000.00 |
| 06 | ஆதார வைத்தியசாலை சியம்பலாண்டுவ | 4,000.00 | 125,000.00 | 300,000.00 |
| **A தரமுடைய பிரதேச வைத்தியசாலைகள்** | | | | |
| 07 | பிரதேச வைத்தியசாலை பசறை | 3,500.00 | 75,000.00 | 300,000.00 |
| 08 | பிரதேச வைத்தியசாலை பண்டாரவளை | 3,000.00 | 57,000.00 | 280,000.00 |
| 09 | பிரதேச வைத்தியசாலை புத்தல | 2,500.00 | 45,000.00 | 275,000.00 |
| **B தரமுடைய பிரதேச வைத்தியசாலைகள்** | | | | |
| 10 | பிரதேச வைத்தியசாலை ஹப்புத்தளை | 2,000.00 | 32,000.00 | 250,000.00 |
| 11 | பிரதேச வைத்தியசாலை ஊவாபரனகம | 2,500.00 | 43,000.00 | 270,000.00 |
| 12 | பிரதேச வைத்தியசாலை கந்தகெட்டிய | 2,500.00 | 38,000.00 | 270,000.00 |
| 13 | பிரதேச வைத்தியசாலை லுணுகல | 2,500.00 | 43,000.00 | 270,000.00 |
| 14 | பிரதேச வைத்தியசாலை கிராந்துருகோட்டே | 2,500.00 | 42,000.00 | 270,000.00 |
| 15 | பிரதேச வைத்தியசாலை ஊரணி | 1,500.00 | 21,000.00 | 200,000.00 |
| 16 | பிரதேச வைத்தியசாலை மீகஹகிவுல | 2,000.00 | 27,000.00 | 250,000.00 |
| 17 | பிரதேச வைத்தியசாலை கொஸ்லந்த | 1,500.00 | 22,000.00 | 200,000.00 |
| 18 | பிரதேச வைத்தியசாலை மெட்டிகஹதென்ன | 2,000.00 | 33,000.00 | 250,000.00 |
| 19 | பிரதேச வைத்தியசாலை மெதகம | 2,000.00 | 30,000.00 | 250,000.00 |
| 20 | பிரதேச வைத்தியசாலை தனமல்வில | 2,000.00 | 30,000.00 | 265,000.00 |
| 21 | பிரதேச வைத்தியசாலை படல்கும்புர | 2,000.00 | 30,000.00 | 260,000.00 |
| 22 | பிரதேச வைத்தியசாலை இங்கினியாகல | 1,500.00 | 20,000.00 | 200,000.00 |
| 23 | பிரதேச வைத்தியசாலை கதிர்காமம் | 1,500.00 | 21,000.00 | 220,000.00 |
| **C தரமுடைய பிரதேச வைத்தியசாலைகள்** | | | | |
| 24 | பிரதேச வைத்தியசாலை ஹல்துமுல்ல | 2,000.00 | 25,000.00 | 250,000.00 |
| 25 | பிரதேச வைத்தியசாலை கந்தேகெதர | 1,500.00 | 22,000.00 | 200,000.00 |
| 26 | பிரதேச வைத்தியசாலை ஹொப்டன் | 1,500.00 | 22,000.00 | 225,000.00 |
| 27 | பிரதேச வைத்தியசாலை செவனகல | 2,000.00 | 25,000.00 | 225,000.00 |
| 28 | பிரதேச வைத்தியசாலை ஸ்பிரிங்வெளி | 2,000.00 | 30,000.00 | 250,000.00 |
| 29 | பிரதேச வைத்தியசாலை பொரலந்த | 2,000.00 | 25,000.00 | 225,000.00 |
| 30 | பிரதேச வைத்தியசாலை அட்டாம்பிட்டிய | 2,000.00 | 25,000.00 | 240,000.00 |
| 31 | பிரதேச வைத்தியசாலை தெமோதர | 2,000.00 | 31,000.00 | 250,000.00 |
| 32 | பிரதேச வைத்தியசாலை போகஹகும்புர | 2,000.00 | 22,000.00 | 225,000.00 |
| 33 | பிரதேச வைத்தியசாலை கெந்தகொல்ல | 2,500.00 | 38,000.00 | 250,000.00 |
| 34 | பிரதேச வைத்தியசாலை மீரஹவத்த | 1,500.00 | 22,000.00 | 220,000.00 |
| 35 | பிரதேச வைத்தியசாலை மீதும்பிட்டிய | 2,500.00 | 41,000.00 | 265,000.00 |
| 36 | பிரதேச வைத்தியசாலை வெவேகம | 1,500.00 | 20,000.00 | 210,000.00 |
| 37 | பிரதேச வைத்தியசாலை ஹம்பேகமுவ | 1,500.00 | 20,000.00 | 200,000.00 |
| 38 | பிரதேச வைத்தியசாலை ஒக்கம்பிட்டிய | 1,500.00 | 20,000.00 | 200,000.00 |
| 39 | பிரதேச வைத்தியசாலை ரோபெரி | 1,500.00 | 22,000.00 | 210,000.00 |
| 40 | பிரதேச வைத்தியசாலை கிளனோர் | 1,500.00 | 20,000.00 | 200,000.00 |
| 41 | பிரதேச வைத்தியசாலை நெதுன்கம | 2,000.00 | 24,000.00 | 220,000.00 |
| 42 | பிரதேச வைத்தியசாலை கலஉட | 1,500.00 | 20,000.00 | 200,000.00 |
| 43 | பிரதேச வைத்தியசாலை அக்கிரியங்கும்புர | 1,500.00 | 21,000.00 | 200,000.00 |
| 44 | பிரதேச வைத்தியசாலை தம்பான | 1,500.00 | 20,000.00 | 210,000.00 |
| 45 | பிரதேச வைத்தியசாலை கஹட்டருப்ப | 1,500.00 | 22,000.00 | 210,000.00 |
| 46 | பிரதேச வைத்தியசாலை தம்பகல்ல | 1,500.00 | 20,000.00 | 200,000.00 |
| 47 | பிரதேச வைத்தியசாலை ஹிங்குரக்கொட | 1,500.00 | 15,000.00 | 210.000.00 |
| 48 | பிரதேச வைத்தியசாலை அத்திமலே | 1,500.00 | 20,000.00 | 225,000.00 |
| 49 | பிரதேச வைத்தியசாலை பிட்டகும்புர | 1,500.00 | 12,000.00 | 200,000.00 |
| 50 | பிரதேச வைத்தியசாலை ஹதபானகல | 1,500.00 | 12,000.00 | 210,000.00 |

(i) ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக அல்லது அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட சங்கமாக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும். மேலும் அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட சங்கம் அல்லது நிறுவனமாயின் அது இலங்கையில் செயற்படுவதற்கான அதிகாரம் உடைய நிறுவனமாக இருத்தல் வேண்டும். கடந்த வருடத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட இறுதிக் கணக்கு அறிக்கை மற்றும் வங்கிக் கணக்கின் கடந்த இரு மாதத்திற்கான வங்கிக் கூற்றையும் சமர்ப்பிக்க இயலுமாயிருத்தல் வேண்டும்.

(ii) இதற்கு முன்னர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றவர்களாகவும் சாத்தியமற்ற ஒப்பந்ததாரர்களாகவும் இருத்தலாகாது.

(iii) 2023.09.01ஆம் திகதிக்கு பின்னர் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட ''பொது படிவம் 170'' மாதிரியில் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கான சொத்துச் சான்றிதழ் மற்றும் நிரந்தர வதிவு தொடர்பான சான்றிதழ், குறித்த பிரதேச செயலாளரிடமிருந்து பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணைக் கட்டணத்தை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் பதுளை மக்கள் வங்கியில் பேணப்படும் 269-100188440649 எனும் நடைமுறை கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அந்த வைப்புப் பற்றுச்சீட்டை மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தின் நிதி உதவியாளருக்குச் சமர்ப்பித்து அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்று அதன் மூலப் பிரதியை கேள்விப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவக் கட்டணத்தை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் நிதி உதவியாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து கேள்வி மாதிரிப் படிவங்களை அந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(v) C தரம் அல்லது B தரமுடைய பிரதேச வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவுகளை ஒரு வருடம் வெற்றிகரமாக வழங்கிய அனுபவம் இருக்குமாயின் A தரமுடைய பிரதேச வைத்தியசாலைகளுக்கும், A மற்றும் B பிரதேச வைத்தியசாலைகளுக்கு இரண்டு வருடங்கள் சமைத்த உணவுகளை வெற்றிகரமாக வழங்கிய அனுபவம் இருக்குமாயின் B தரமுடைய ஆதார வைத்தியசாலைகளுக்காகவும், B தரமுடைய ஆதார வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவுகளை வெற்றிகரமாக வழங்கிய அனுபவம் இருக்குமாயின் A தரமுடைய ஆதார வைத்தியசாலைகளுக்கும் விண்ணப்பிக்கலாம். C மற்றும் B தரமுடைய பிரதேச வைத்தியசாலைகளுக்கு அனுபவம் அவசியமில்லை.

(vi) ஒவ்வொரு வைத்தியசாலைக்காகவும் கேள்விப் பத்திர சோடிகளை அதாவது மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியினை வெவ்வேறாக உறையில் இட்டு பொறியிடப்பட்டதன் பின்னர் இரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு உறையின் இடப்பக்க மேல் மூலையில் ''(வைத்தியசாலையின் பெயர்) வைத்தியசாலைக்காக உணவு வழங்கலுக்கான கேள்வி-2024'' என குறிப்பிட்டு அதற்குக் கீழ் விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி என்பவை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(vii) ஊவா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் கேள்வி மாதிரிப் படிவங்கள் வழங்கப்படும் என்பதுடன் அந்தப் படிவங்களை 2023.11.08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கமைய இயைபுடைய கேள்விப் படிவங்களை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னர் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிரதான கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் இல்லையேல் நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், இல. 301, ஆர். எச். குணவர்தன மாவத்தை, பதுளை எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

(viii) கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததுடன் உடனடியாக கேள்விப் படிவங்கள் ஊவா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விப்பத்திரம் சமர்ப்பித்த கேள்விதாரர் கலந்து கொள்ளலாம். கேள்விதாரருக்கு தனிப்பட்ட ரீதியில் சமுகமளிக்க முடியாவிடின் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கிய பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம். அத்துடன் அவர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ix) 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய கேள்விகளுக்கு கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்ட பொது ஒப்பந்தங்கள் உடன்படிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பிரகாரம் தியத்தலாவ, மகியங்கனை, வெலிமட, பிபில, சியம்பலாண்டுவ, வெள்ளவாய ஆதார வைத்தியசாலைகள் மற்றும் பசறை, பண்டாரவளை, புத்தள, லுணுகல பிரதேச வைத்தியசாலைகளுக்காக பொது ஒப்பந்த உடன்படிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(x) நோயாளர்களுக்கு உணவு வழங்குதல் மிகவும் பொறுப்பான காரியமாதலால் கேள்வி நிபந்தனைகளை மீறுகின்ற விண்ணப்பதாரர்களின் கேள்விகள் நிராகரிக்கப்படும். எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் உரிமையை கேள்விச் சபை கொண்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு அது பற்றி, அறிவித்து ஒரு வாரத்திற்குள் விதிக்கப்பட்டுள்ள ஒப்பந்த பிணைக் கட்டணத்தை ரொக்கப் பணமாக வைப்புச் செய்து / வங்கிப் பிணைமுறியொன்றைச் சமர்ப்பித்து ஒப்பந்தத்துக்கு உடன்படல் வேண்டும். வழங்கல்களை 2024.01.01ஆம் திகதி முதல் ஆரம்பித்தல் வேண்டும்.

(xi) கேள்விகள் திறக்கப்படுவதற்கு முன் சமைத்த உணவுகளை வழங்குவதற்கு இயைபான முன்னோடிக் கூட்டம் 2023.11.01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இடம்பெறும் என்பதுடன் அன்றைய தினத்தில் நீங்கள் இதில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**இல. 301, ஆர்.எச். குணவர்தன மாவத்தை, பதுளை**
**தொலைபேசி இலக்கம் : 055-2231081 தொலைநகல் இலக்கம் : 055-2223098**

# நாரம்மல பிரதேச சபை

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல

2024ஆம் வருடத்தில் இந்த சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ள விரும்பும் தகுதி வாய்ந்த வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அவ்விண்ணப்பங்களை 2023-11-30ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் செயலாளர், நாரம்மல பிரதேச சபை, நாரம்மல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு, காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல மூலையில், 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களைப் பதிவுசெய்தல் என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சகல விண்ணப்பங்கள் பொருட்டும் மீளளிக்கப்படாத 500.00 ரூபா பதிவுக் கட்டணம் அறவிடப்படும் என்பதோடு காசோலை மூலம் செலுத்துவதாயின், செயலாளர், நாரம்மல பிரதேச சபை என்ற பெயருக்கு எழுதப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தினுள் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கும்போது ஒவ்வொரு வகைக்காகவும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இதன் பொருட்டு வெவ்வேறான வகையில் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

**அட்டவணை 01**

**பொருட்கள் மற்றும் சேவை வழங்கல்கள்**

i. அலுவலக உபகரணங்கள்/ மரத் தளபாடங்கள் / உருக்கு தளபாடங்கள் மற்றும் பிளாஸ்டிக் வீட்டுத் தளபாடங்கள் வழங்குதல்
ii. காகிதாதிகள்/ அச்சடிக்கப்பட்ட படிவங்கள் மற்றும் ஆவணங்கள்/ காகிதம் / அப்பியாசக் கொப்பிகள் / பாடாசாலை பை/ தண்ணீர் போத்தல் / கணித்தல் பொறி (கல்குலேட்டர்) உட்பட ஏனைய காகிதாதிகள்
iii. நூலக புத்தகங்கள் / சஞ்சிகைகள் / பத்திரிகை வழங்குதல்
iv. விளையாட்டு பொருட்கள் / முன்பள்ளி உபகரணங்கள் வழங்குதல்
v. சீருடைகள்/ சப்பாத்துகள் / திரைச்சீலை/ விளையாட்டு ஆடைகள் / கெனபி கூடாரங்கள் வழங்குதல்
vi. கணனி துணைப்பாகங்கள்/ இலத்திரனியல் தட்டச்சுப் பொறி/ புகைப்படப் பிரதி இயந்திரம்/ தொலைநகல் இயந்திரம் / ரோனியோ இயந்திரம் / டுப்ளோ இயந்திரம்/ கணனி/ டோனர் மற்றும் ஏனைய துணைப்பாகங்கள் வழங்குதல்.
vii. வீதி விளக்குகளுக்கான மின் உபகரணங்கள் மற்றும் ஏனைய அனைத்து மின் உபகரணங்கள் வழங்குதல்
viii. கட்டடங்கள் மற்றும் வீதி நிர்மாண பொருட்கள் வழங்குதல் (கொங்றீற் கம்பி தூண்கள், ஹியூம் குழாய்/ ஏனைய கொங்கிறீற் பொருட்கள் / கொங்கிறீற் கற்கள்/ சீமெந்து கற்கள் / பொறியியல் செங்கல் / ABC/ பிரீமிக்ஸ் / பொருட்கள் வழங்கல் (மணல், செங்கல், ஓடுகள் உட்பட)
ix. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல் (டயர், டியூப் மற்றும் மின்கலன்கள் வழங்கல்)
x. விளம்பரப் பலகை/ பதாகைகள்/ கட்அவுட்கள் / ஸ்டிக்கர்/ டின்டட் செய்தல்/ ஞாபகச் சின்னங்கள் தயாரித்தல்
xi. சுகாதாரப் பிரிவிற்கான உபகரணங்கள் (விளக்குமாறு, தும்புத்தடி, தூரிகை, சிறிய கால்துடைப்பம், கிருமிநாசினிப் பொருட்கள், கம்பூட்ஸ், குப்பைத் தொட்டி, கையுறை, முகக்கவசம், பிரம்புக் கூடை மற்றும் மழை அங்கிகள், ஹாபிக், புல் வெட்டும் இயந்திரம், மரம் வெட்டும் இயந்திரம், தோட்ட அலங்காரத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் பசளை வகைகள்)
xii. மலர்க் கன்று வகைகள் மற்றும் கன்றுகள் வழங்குதல்
xiii. தார் மற்றும் கோலாஸ் வழங்குதல்
xiv. அனைத்து வண்ணப் பூச்சு வகைகள் வழங்குதல்
xv. நாய் கழுத்துப் பட்டிகள் வழங்குதல்
xvi. பழைய பத்திரிகைகள், வெற்று போத்தல்கள், பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்தல்
xvii. ஆற்று மணல், கிரவல் உட்பட வீதிப் பராமரிப்புடன் தொடர்புடைய பொருட்கள் வழங்குதல்
xviii. எரிபொருள் வழங்குதல்
xix. குழாய் வேலைகளுக்கு தேவையான சகல உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல்
xx. சீமெந்து, இரும்பு, பிணைச்சல், கம்பி, கூரைத்தகடு, ஆணி வகைகள், கொமட், தரை விரிப்பு வகைகள் உட்பட ஏனைய கனரகப் பொருட்களை வழங்குதல்
xxi. அரிந்த மரங்கள் வழங்குதல்
xxii. குடிநீர் வழங்குதல்

**1. சேவை வழங்கல்**

i. அச்சு சேவைகள் வழங்கல், இறப்பர் முத்திரை வெட்டுதல், விளம்பரங்கள் மற்றும் பதாகைகள் அச்சிடல்.
ii. மொழிபெயர்ப்பு சேவை வழங்கல் / சட்ட நடவடிக்கைகளுக்கான சட்ட ஆலோசனைகள்
iii. வாகன இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரித்தல் சேவை (மோட்டார் கிரேடர் இயந்திரம், ஜே.சீ.பி. இயந்திரங்கள் உட்பட அனைத்து கனரக வாகனங்கள் மற்றும் இலகு வாகனங்கள் அதிகார பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிக்குள் அல்லது அதற்கு அருகாமையில் அமைந்திருத்தல் வேண்டும்)
iv. டயர்களை மீள் நிரப்புதல்
v. அனைத்துவிதமான உருக்கியொட்டுநர்கள், தச்சர்கள், மேசன்மார், குழாய் வேலைகள், தொலைபேசி திருத்தவேலைகள்
vi. புகைப்படப் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், ரோனியோ இயந்திரம், டுப்ளோ இயந்திரம், கணனி இயந்திரம், அச்சுப்பொறிகள் உட்பட சகலவிதமான திருத்தவேலைகள்
vii. வீச்சுக்கத்தி, அரிவாள், மண்வெட்டி, கத்தி, மண்வாரி, ஒற்றைச் சக்கர வண்டி உட்பட விவசாய மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்களின் திருத்தவேலைகள்
viii. ஆபத்தான மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்காக மரம் வெட்டுபவர்களைப் பதிவு செய்தல்
ix. கிரவல் போக்குவரத்து (சபையின் அதிகார எல்லையின் கிளை பாதைகள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக)
x. வீதிகளைச் செப்பனிடும் பெக்கோ இயந்திரம், மோட்டார் கிரேடர் மற்றும் ஏனைய இயந்திர சாதனங்களை வழங்கல் மற்றும் டெலிவரி வேன், டேலருடன் இழுவை இயந்திரம், கை உழவு இயந்திரம், லொறி, டிப்பர் வாகனம் வாடகைக்கு வழங்குதல்.
xi. உற்சவங்களுக்கான மேடை, ஒலிபெருக்கி இயந்திரங்கள், மின் ஒளியூட்டல், பிளாஸ்டிக் கதிரை, கூடாரம் உட்பட ஏனைய உற்சவப் பொருட்கள் வழங்குதல்.
xii. உற்சவங்களுக்கான உணவு வழங்குதல்.
xiii. காணி அளத்தல் வேலைகளுக்காக நில அளவையாளர்களைப் பதிவு செய்தல்
xiv. வாடகை அடிப்படையில் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்
xv. பொலிசெக் பசளை உறைகளை வழங்குதல்
xvi. வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்குதல்
xvii. பணம் எண்ணும் இயந்திரங்களை வழங்குதல்

**அட்டவணை - 02**
**நிர்மாண ஒப்பந்ததாரர்கள்**

1. வடமேல் மாகாணத்திற்குள் சீடா நிறுவனத்தில் ICTAD (CIDA) பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்ததாரர்கள் (கைத்தொழில் மதிப்பீடு மற்றும் பெறுமதிக்கு அமைய) | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | 500000.00 ரூபா வரை C9 ICTAD பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். | 1000.00 |
| 02 | 2000000.00 ரூபா வரை C9 ICTAD பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். | 2000.00 |
| 03 | 2000000.00 ரூபாவுக்கு மேற்றட்டது C8 ICTAD பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். | 3000.00 |

i. CIDA நிறுவனத்தின் செல்லுபடியான பதிவுச் சான்றிதழின் பிரதி
ii. வெட் (VAT) வரிக்காக பதிவுச் சான்றிதழின் பிரதி ஒன்று மற்றும் அண்மையில் பெற்றுக்கொண்ட வெட் தீர்வு வரி சான்றிதழின் பிரதி ஒன்று (பதிவு செய்யப்படவில்லையென்றால் பதிவு செய்யப்படவில்லை என்ற பிரகடனம்)

- பதிவு செய்து கொண்டவர்களிடம் விலைகளைக் கோரி இயைபுடைய வழங்கல் சேவைகள் மற்றும் வேலைகளை நிறைவேற்றிக்கொள்ளப்படும் என்பதுடன் தேவையேற்படும் போது இதற்குப் புறம்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை நாரம்மல பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
- அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் வரித் திருத்தங்களுக்கு உட்படும்.

**விசாரணைகள்- 037 – 2249275**
**தொலைநகல் - 037 – 2249681**
**மின்னஞ்சல் - narammalaps@gmail.com**

**ஜே.எம். நிமல் ஜயசிங்க,**
**செயலாளர்,**
**நாரம்மல பிரதேச சபை,**
**நாரம்மல.**

Trusted Marketplace of Classified Advertisers




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## கேள்வி மனுக்கோரல்

| **NQ/DPC/2023/NCB/S/08**<br>நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி நிலயத்தின் (AQDC) தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு தொழிலாளர் சேவைகளை வழங்குதல் 2023/2024 | 750,000.00<br>121 நாட்கள்<br>(2024.02.26) | 13,000.00 | 2023.10.27<br>பி.ப.3.00 | 2023.10.30<br>பி.ப.2.00 |

02. மேலதிக தகவல்களை **(011 278 6544/6495** தொலைநகல் **: 011 278 6493/6575 மின்னஞ்சல்:po@naqda.gov.lk** மற்றும் **www.naqda.gov.lk)** மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

**திணைக்களத்தின் கொள்முதல் குழு (மேஜர்),**
**இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2023.10.10**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## 2024ஆம் வருடத்தின் பொருட்டு உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தின் பொருட்டு பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கைத் துறைமுக அதிகார சபையில் பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனம், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனியார் மற்றும் கூட்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01 | பெட்டறி, ஈயம், அமிலம் மற்றும் அவ்வாறான பொருட்கள் |
| 02. | இயந்திராதிகளுக்குத் தேவையான சகல பெயாரிங் வகைகள் |
| 03. | கட்டிடப் பொருட்கள் (செங்கல், கல், மணல், இரும்பு, PVC குழாய்கள் மற்றும் உருப்படிகள், கூரைத்தகடுகள் மற்றும் சீலிங் சீட்டுகள்) |
| 04. | இரசாயனப் பொருட்கள், கைத்தொழில், விவசாய இரசாயனங்கள், களைக் கொல்லிகள், அனைத்து வகையான சவர்க்காரங்கள், சுத்திகரிப்புப் பொருட்கள், கிருமிநாசினி வகைகள் |
| 05 | சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| 06 | கணனி, தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கணனி அச்சுப் பொறிகள், மென்பொருள்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், டோனர் வகைகள் |
| 07 | வீட்டு மின் உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள், VHF மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரண உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப் பாகங்கள், கட்புல செவிப்புல உபகரணங்கள், வளிச்சீராக்கி இயந்திரங்கள், உறைநிலை குளிர்சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 08 | மின்சார கேபள்கள் மற்றும் தொலைத்தொடர்பு கேபள்கள் |
| 09 | மின்சார கட்டுப்பாட்டு முறைமை மற்றும் துணைப்பொருட்கள் மற்றும் மின்சார பொருத்தும் பொருட்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 10 | தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 11 | பொறியியலாளர் கருவிகள் மற்றும் உபகரணங்கள், நீர்க்குழாய் திருகு மூடிகள், பம்பிகள், எரிவாயு மற்றும் சமையலறை உபகரணங்கள், உருக்கியொட்டும் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 12 | காலணிகள் - கன்வஸ் மற்றும் தோற் சப்பாத்துகள், பூட்ஸ், பாதுகாப்பு காலணிகள் போன்றன |
| 13 | உலோகப் பொருட்கள் ஆணிகள் மற்றும் சுரைகள், பித்தளை உபகரணங்கள், உலோகக் குழாய்கள் மற்றும் குழாய் பொருத்தும் பகுதிகள், உலோகத் தகடு, உலோக பொதுவான பல்வேறு வடிவங்கள் மற்றும் கவசப் பொருட்கள், வலை வகைகள், தும்புத்தடி, ஈர்க்கிள், தும்புக் கயிறு மற்றும் ஏனைய தும்பு உற்பத்திகள், கம்பித் தூரிகை மற்றும் அனைத்து வகையான நிறப்பூச்சுகள் பூசும் தூரிகை வகைகள், கண்ணாடி, மெல்லிய பலகைகள் MDF மற்றும் போர்மிகா வகைகள் |
| 14 | தகரங்களைச் சுத்தம் செய்யும் கிறிட் பிளாஸ்டிங் செயற்பாடுகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் வார்ப்பு மண் |
| 15 | ஹோஸ் குழாய்கள் (ஹைட்ரோலிக், அதியமுத்த வாயு, தீயணைப்பு போன்றவைகளுக்கானது) |
| 16 | உராய்வுநீக்கி எண்ணெய்கள் |
| 17 | மெனிலா, புரோலிபொப்லின் மற்றும் நைலோன் கயிறுகள் |
| 18 | கையடக்கத் தொலைபேசிகள் |
| 19 | அலுவலக காகிதாதிகள் மற்றும் அச்சடிக்கப்பட்ட காகிதாதிகள் |
| 20 | நிறப்பூச்சுகள் (இனாமல் மற்றும் இமல்ஷன்) பொலிஷ் மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்திகள், விசிறியடிக்கும் நிறப்பூச்சு வகைகள் மற்றும் அதனைச் சார்ந்த நிறப்பூச்சு வகைகள் (உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் மட்டும்) |
| 21 | போர்சலின் பொருட்கள், துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் |
| 22 | வீதிகளுக்கான தார் வகைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட தார் கலவை, சீமெந்து மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்திகள் |
| 23 | இறப்பர் மற்றும் வேல்கனைசிங் உற்பத்திகள் |
| 24 | பாதுகாப்புப் பொருட்கள் மற்றும் தீயணைப்பு உபகரணங்கள், சுழியோடும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 25 | வாகன உதிரிப்பாகங்கள், ரேடியேட்டர் மற்றும் ரேடியேட்டர் கோர்கள் |
| 26 | கிரேன், போக் லிப்ட், டொப் லிப்ட் போன்றவற்றுக்கான உதிரிப்பாகங்கள், கடல்சார் சாதனங்களுக்கான உதிரிப்பாகங்கள், பிரைம் மூவர்கள் மற்றும் யாட் டிராக்டர்களுக்கான உதிரிப்பாகங்கள் |
| 27 | உருக்குத் தளபாடங்கள், மரத்தளபாடங்கள் மற்றும் ஏனைய அலுவலகத் தளபாடங்கள் |
| 28 | அரியப்பட்ட பலகைகள் |
| 29 | டயர்கள் மற்றும் டியூப்கள் |
| 30 | வயர் ரோப் வகைகள் |
| 31 | மேற்கத்திய மற்றும் உள்நாட்டு மருத்துவ உபகரணங்கள் |
| 32 | புகைப்படங்கள் தயாரித்தல், அச்சிடல் மற்றும் அது சார்ந்த சகல சேவைகளும் உள்ளடங்கலாக |
| 33 | நாய் உணவு |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநராக பதிவு செய்து கொள்ள விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 01 தொடக்கம் 33 வரையான பொருட்களுக்காக பதிவு செய்து கொள்வதற்கு அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 03.30 மணி வரை 2023-11-30ஆம் திகதி வரையில் தேவையான விண்ணப்பப் படிவங்களை 1000.00 ரூபா மற்றும் வெட் வரியைச் செலுத்தியதன் பின் இல. 45, லேடன் பஸ்டியன் வீதி, கொழும்பு-01இல் அமைந்துள்ள வழங்கல் பிரிவின் பிரதான வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. வழங்கலின் பொருட்டு பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் பதிவு செய்து கொள்ளாத ஏனைய வழங்குநர்களிடம் இருந்து விலைகளைக் கோரவும் கொள்வனவு செய்வதற்கான உரிமையை துறைமுக அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

04. முறையாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுபவர்கள், துறைமுக அதிகார சபையினால் வழங்கப்படும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளுக்கு ஒவ்வாத தன்மையிலுள்ள பொருட்கள் மற்றும சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.

05. அனைத்து விண்ணப்பங்களும் "2024ஆம் வருடத்திற்கான உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்), வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு 2023-11-30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள பிரதான வழங்கல் முகாமையாளர் அலுவலகத்தில் இந்த விண்ணப்பங்களை நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். இதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

06 மேலதிக விபரங்களை 2323102, 2432866, 2328342, 2482499, 2320250, 2482761 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01**

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

**கடன் தொடர்பு இலக்கம்: 79217270**

**இல.71/B, டி மெல் வீதி, லக்ஷபதிய, மொறட்டுவ எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி. முதுதந்திரிகே நிலுக்ஷிகா டில்ஷானி பெரேரா என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2341 ஆம் திகதிய முதல் 14.07.2023 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.07.14ஆம் திகதி வெள்ளிக்கிழமை தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்த வேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 02.11.2023 ஆம் திகதி பி.ப.1.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

**1. காணி பற்றிய விவரம்**

| | | |
|---|---|---|
| ✶ மாவட்டம் | : | கொழும்பு |
| ✶ பிரதேச செயலகம் | : | மொறட்டுவ |
| ✶ கிராம சேவையாளர் பிரிவு | : | 550A லக்ஷபதிய வடக்கு |
| ✶ கிராமம் அல்லது நகரம் | : | லக்ஷபதிய |
| ✶ வீதி | : | -- |
| ✶ வரி மதிப்பீட்டு இலக்கம் | : | -- |
| ✶ நில அளவைபட இலக்கம் | : | 520210 |
| ✶ தொகுதி இலக்கம் | : | 10 |
| ✶ காணித்துண்டு இலக்கம் | : | 146 |
| ✶ பரப்பு | : | 0.0220 ஹெக்டயர் |
| ✶ உரிமை மாற்றப்பட்ட பரப்பு | : | 0.0220 ஹெக்டயர் |
| ✶ கூட்டாட்சி (Condominium) ஆதனமெனில் கூறுகளின் எண்ணிக்கை | | |

**2. முன் பதிவுத் தொடர்பு:**

| | | |
|---|---|---|
| ✶ பதிவுசெய்த இடம் | : | தெல்கந்த - நுகேகொட |
| ✶ உரித்துச் சான்றிதழ் இல. | : | 2518835 கொழும்பு |
| ✶ உரித்தின் வகுப்பு | : | முதலாவது வகுப்பு |

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.**

ஏலவிலை கூறுவோர் மேற்குறித்த ஆதனத்தின் உரிமைத்துவ உறுதியையும் அதனோடு இணைந்த ஆவணங்களையும் மொறட்டுவை இலங்கை வங்கிக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளருடன் தொடர்புகொளவதன் மூலம் பார்வையிடலாம். தொடர்புகளுக்கு 0112644161 / 0112645427

**பெயர் : திருமதி ஐ.பி.கே.என் பெரேரா**
**பதவி : சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மொறட்டுவை அதிமேற்தரக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**இல. 69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரியில் உள்ள செலிங்கோ ஹவுஸ், கிழக்குப்புறக் கட்டடத்தின் 10ஆம் தளத்திலுள்ள என்ரஸ்ட் செக்கியூரிட்டீஸ் பீ.எல்.சீ இன் கடன் பொறுப்புக்களுக்காக வரிமதிப்பு இல.06, அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு 03 இல் அமைந்துள்ள ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.11.08ஆம் திகதிய 2149ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.10.25ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச் துசித்த கருணாரத்ன அவர்கள் **2023.11.07ஆம் திகதி பி.ப 1.00 மணிக்கு** அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மேல்மாகாணம் கொழும்பு மாவட்டம் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு 8ல் (கொள்ளுப்பிட்டி) மற்றும் கொழும்பு மாநகரசபை எல்லைகளுள் கொள்ளுப்பிட்டியில் பென்டனிஸ் அவெனியுவில் (தற்சமயம் அப்துல் கபூர் மாவத்தை என யாவரும் அறிந்த) **"மிலிசென்ற் கொட்டேஜ்"** என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதும் முன்னர் வரிமதிப்பு இல.$60^{K2}$ (அதன் பின்பு வரிமதிப்பு இல.08)ஐக் கொண்ட பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு **வடக்கில்** ஒழுங்கையும், **கிழக்கில்** எச்.டொன் கரோலிஸ் அன்ட் சன்ஸுக்குச் சொந்தமான "பென்டெனிஸ்" என யாவரும் அறிந்த நிலமனையும், **தெற்கில்** சீ.டப்ளியூ. லீவிஸ் பெரேராவுக்கு சொந்தமான "கிளர்னி" என யாவரும் அறிந்த நிலமனையும்., **மேற்கில்** "பிலன்ஹிம்" என யாவரும் அறிந்ததும் வரிமதிப்பு இல. $60^{KI}$ ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச்.சீ.டயஸ் தயாரித்த 01.05.1915 திகதியிட்ட இல.1705ன் அளவை மற்றும் விபரத்தின் பிரகாரம் **பதினேழு மற்றும் ஆயிரத்தில் முந்நூற்று எழுபத்தைந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.17 375/1000)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் A1003/238ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் வீ.கார்த்திகேசு தயாரித்த 08.02.1946 திகதியிட்ட பதில் அளவை வரைபடம் இல.518ன் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.**

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் கொழும்பு மாநகரசபை எல்லைகளுள் கொள்ளுபிட்டியில் பென்டனிஸ் அவெனியுவில் (அப்துல் கபூர் மாவத்தை என யாவரும் அறிந்த) அமைந்த **"மிலிசென்ற் கொட்டேஜ்"** என யாவரும் அறிந்ததும் முன்னர் வரிமதிப்பு இல.$60^{K2}$ (பின்பு வரிமதமிப்பு இல.08ஐக் கொண்ட) பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு **வடக்கில்** பென்டனிஸ் அவெனியுவும் (தற்சமயம் அப்துல் கபூர் மாவத்தை என யாவரும் அறிந்த)தும், **கிழக்கில்** பென்டனிஸ் அவெனியு தற்சமயம் வரிமதிப்பு இல.10ஐக் கொண்ட நிலமனையும் (தற்சமயம் அப்துல் கபூர் மாவத்தை என யாவரும் அறிந்ததும், **தெற்கில்** காலி வீதி தற்சமயம் வரிமதிப்பு இல.295ஐக் கொண்ட நிலமனையும்., **மேற்கில்** காலி வீதி வரிமதிப்பு இல.293ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு **பதினேழு தசம் மூன்று ஏழு ஐந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.17.375)** விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் A1003/238ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது

**மேற்குறிப்பிட்ட காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.டீ.ஜீ. வீரசிங்ஹ தயாரித்த 28.05.2008 திகதியிட்ட மிகவும் அண்மைய வரைபடம் இல.3802ன் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.**

மேற்குறிப்பிட்ட கொள்ளுபிட்டியில் அமைந்ததும் அப்துல் கபூர் மாவத்தை வரிமதிப்பு இல.6ஐக் கொண்ட மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.3802ல் துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடக்கில் அப்துல் கபூர் மாவத்தையும், கிழக்கில் அப்துல் கபூர் மாவத்தை வரிமதிப்பு இல.10Aஐக் கொண்ட நிலமனையும், தெற்கில் காலி வீதி வரிமதிப்பு இல.295ஐக் கொண்ட நிலமனையும்., மேற்கில் காலி வீதி வரிமதிப்பு இல.293ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு பதினேழு தசம் இரண்டு ஒன்பது பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.17.29) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும்.

"ஏலவிலைகூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் அறவிடல் தொகுதிப் பிரிவில் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் 0112386079"

*இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.*

| | |
|---|---|
| **இலங்கை வங்கி** | **ஏ.சீ.எச். அத்துக்கோரல** |
| **பெருநிறுவன அறவிடற் பிரிவு** | **சிரேஷ்ட முகாமையாளர்** |
| **இல.1, இலங்கை வங்கி மாவத்தை** | **(பெருநிறுவன அறவிடற் பிரிவு)** |
| **கொழும்பு 01.** | |

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

**புத்தசாசன மத மற்றும் கலாசார விவகார அமைச்சு**

# டவர் மண்டப அரங்க மன்றம்

## உணவகத்தை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

டவர் மண்டப அரங்க மண்டபத்திற்கு சொந்தமான மருதானையில் அமைந்துள்ள டவர் மண்டப அரங்க மண்டபத்தில் மற்றும் எல்பின்ஸ்டன் அரங்க மண்டபத்தில் உணவகத்தை 2023 - 2024 சார்பாக ஒரு வருட காலத்திற்கு வாடகை அடிப்படையில் நடத்திச் செல்லல் சார்பாக கேள்விகள் கோரப்படுகின்றன.

2023.10.10 முதல் 2023.10.27 வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரையான காலத்திற்குள் ரூ.500.00 மீளளிக்கப்படாத கட்டணம் மற்றும் ரூ. 5000.00 மீளளிக்கப்படும் கட்டணத்தை டவர் மண்டப அரங்க மன்றத்தின் தலைமையகத்திற்குச் செலுத்தி பெறுகை ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி சமர்ப்பிக்க வேண்டியது டவர் மண்டப அரங்க மன்றத்தினால் சமர்ப்பிக்கப்படும் மாதிரிகளில் மட்டுமே பெறுகை ஆவணங்களுடன் விநியோகிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் விபரங்களுக்கு அமைவாக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2023.10.31 பி.ப 2.00 இற்கு முன்பு தலைவர், பெறுகைக்குழு, டவர் மண்டப அரங்க மன்றம், "சங்சிரிபாய", இல - 123, விஜேராம மாவத்தை, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து மேற்படி முகவரியில் அமைந்துள்ள டவர் மண்டப அரங்க மன்றத்தின் தலைமையகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில், "டவர்/எஸ்பின்ஸ்டன் உணவகத்திற்கான விலைமனுக்கள்" என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**டவர் மண்டப அரங்க மன்றம்,**
**தொ.பே.இலக்கம் - 0112682334**

# ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் — 2024

பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை 2024ஆம் வருடத்தில் வழங்குவதற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்ளும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ **பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கல்**

01. சகல வகையான அலுவலக காகிதாதிகள், அச்சடிக்கப்பட்ட காகிதாதிகள், படிவங்கள் மற்றும் ஆவணங்களை வழங்குதல்
02. சகல வகையான அச்சுவேலைகள்
03. அலுவலக மரத்தளபாடங்கள், உருக்கு வீட்டுபயோகப் பொருட்கள்
04. கணனிகள் /கணனிமென்பொருள் மற்றும் டோனர் வகைகளை வழங்குதல்
05. டிஜிட்டல் அறிவித்தல்களை அச்சடிப்பவர்கள்
06. சகல சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள்
07. மின் உபகரணங்கள் மற்றும் வீதிவிளக்கு உபகரணங்கள்
08. கிருமிநாசினிகள், பீடைநாசினிகள் மற்றும் உர வகைகள்
09. சகல வகையான ஹியூம் குழாய்கள், கம்பி தூண்கள் வழங்குதல்
10. சகல வகையான நிறப்பூச்சுகள்
11. சீருடைக்கான துணிகளை வழங்குதல்
12. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
13. முன்பள்ளி உபகரணங்கள்
14. தார் (வீதி அபிவிருத்திக்காக)
15. வாகனங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களை வழங்குதல்
16. சகல வகையான டயர் மற்றும் டியூப் மற்றும் பெட்டறி/டயர் மீள் நிரப்புதல்
17. வாகன உதிரிப்பாகங்களை வழங்குதல்
18. சகல வகையான கட்டிடப் பொருட்களை வழங்குதல்

❖ **ஏனைய சேவைகள்**

19. வாகன திருத்தவேலைகளைச் செய்தல்
20. வாகனங்களைச் சேர்விஸ் செய்தல்
21. கணனி/தட்டச்சுப் பொறி/தொலைநகல் இயந்திரம் /நகல் பிரதி இயந்திர திருத்தவேலைகள்
22. உருக்கியொட்டுனர்கள்
23. நில அளவை வேலைகள்
24. பெயர்ப் பலகைகள் /பெனர்களை வரைதல் /ஞாபகச் சின்னங்களைத் தயாரித்தல்
25. பாவித்த புதினப் பத்திரிகைகள், வெற்று போத்தல்கள், பழைய இரும்பு, பிளாஸ்டிக் மற்றும் பொலித்தின்களை கொள்வனவு செய்தல்
26. அபாயகரமான மரங்களை வெட்டி வீழ்த்தும் வேலைகள்
27. அலுவலக உபகரணங்களுக்கான திருத்தவேலைகளைச் செய்தல்
28. வாடகை அடிப்படையில் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்
29. சட்ட நடவடிக்கைகளுக்காக சட்ட ஆலோசனைகள் /மொழிபெயர்ப்புகள்
30. அரிவாள், மண்வெட்டி போன்ற ஆயுதங்களின் திருத்தவேலைகள் மற்றும் கொள்வனவு செய்தல்

**அட்டவணை 01**

❖ **நிர்மாண ஒப்பந்தக்காரர்கள்**

| | **ஒப்பந்தக்காரர்கள்** | **பதிவுக் கட்டணம்** |
|---|---|---|
| 1. | 100,000.00 ரூபாவுக்குக் குறைந்த வேலைகள் | 1000.00 |
| 2. | 100,000.00 முதல் 250,000.00 ரூபா வரை | 2000.00 |
| 3. | 250,000.00 முதல் 500,000.00 ரூபா வரை | 2500.00 |
| 4. | 500,000.00 முதல் 1,000,000.00 ரூபா வரை | 3000.00 |
| 5. | 1,000,000.00 ரூபாவுக்கு மேல் | 3500.00 |

வழங்கல்கள் மற்றும் சேவைகளின் பொருட்டு வெவ்வேறான விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் பதிவு செய்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை w.w.w.facebook.com/ Arachchikattuwa Pradeshiya Sabha எனும் ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் facebook கணக்கிலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். இல. 1 முதல் 30 வரையான விடயங்களின் பொருட்டு ஒரு விடயத்திற்கான பதிவுக் கட்டணமாக 1000.00 ரூபா செலுத்துதல் வேண்டும்.

பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் விண்ணப்பப் படிவங்களை, தம்மிடமுள்ள தகைமை மற்றும் அனுபவங்களை நிரூபிப்பதற்காக ஆவணங்கள் மற்றும் பதிவுக் கட்டணத்தை செயலாளர், ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் பெயருக்கான காசோலை அல்லது காசுக் கட்டளையை 2023.12.15ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு முன் ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை, ஆரச்சிக்கட்டுவ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்குநர்கள் /ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024 எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் /ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைகளைக் கோரி தகைமை வாய்ந்தவர்களைத் தெரிவு செய்து வழங்கல் சேவை மற்றும் வேலைகளை நிறைவேற்றுவதற்கு செயற்படும் அதேவேளை தேவையானபோது அதற்குப் புறம்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமையை ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பின்வரும் தொலைபேசி இலக்கம் ஊடாக வழங்கல் அதிகாரியிடமிருந்து விசாரித்தறிந்து கொள்ளலாம்.

**பீ.ஏ.எம்.ஷிரானி அபேசிங்ஹ,**
**பிரதேச சபை, ஆரச்சிக்கட்டுவ.**

**தொலைபேசி இலக்கம்**
**அலுவலகம் - 032-2259783**
**வழங்கல் அதிகாரி – 0773564110 / 0717464110**
**2023.10.10**

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின். 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்**

**கடன் தொடர்பு இலக்கம்: 76893459/84017575/9046331**

நவத்திமுல்ல, ஹினிதும என்ற இடத்திலுள்ள வரையறுக்கப்பட்ட **"லக்கி ரீ"** தனியார் நிறுவனத்தின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.06.16ஆம் திகதி 2337ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.06.14ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்த வேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 2023.11.08ஆம் திகதி மு.ப 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற் குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை**

"உஸ்வெல்கொடவத்த மற்றும் உஸ்வெல்கொடபண்டாரே புவக்வத்த இஹல கெபெல்லஸ" என அழைக்கப்படும் காணியின் காணித்துண்டு இல. 7 மற்றும் காணித்துண்டு இல. 8 என்பவற்றை இணைத்து உருவாக்கப்பட்ட காணித்துண்டு A என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி தென் மாகாணம், காலி மாவட்டம், ஹினிதும் பற்று, தவலம பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 226 A. ஹினிதும வடக்கு என்ற கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள ஹினிதும கிராமத்தில் அமைந்துள்ளதுதோடு கிழக்கில் தவலம - உடுகம பிரதான வீதியையும் தெற்கில் அதே காணியின் காணித்துண்டு இல. 6ஐயும் மேற்கில் அதே காணியின் காணித்துண்டு இல. 9ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு.ஜி.டி.யு. கருணாரத்ன தயாரித்த 2003.06.30ஆம் திகதிய 1100/2003 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் (ஏ1-ரூ0-பே0) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள். பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இம் முக்கோணக் காணி காலி மாவட்டக் காணிப் பதிவகத்தில் W 21/79இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற் குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை**

**Machinery**

a) **Trough and Withering Section (Second Floor/Level-3)**
- ➢ 20 Nos. of Trough Withering Units (four of 60'x 6') Constructed with Hardwood and plywood, cladding over angle iron and wooden structures, Gl mesh, with 7.5H.P motors in good working condition
- ➢ 4 Nos. of specially designed exhausted fans

b) **Roller Section**
- ➢ 07 Nos. of 47", (350kg /20m) Gamini" Tea Roller, completed with 20 H.PMotor batons and brass cones and starter switches in good working condition about 6 year old
- ➢ 07 Nos. of Tea Roll breakers (12.5' x 3.5') in good working condition.
- ➢ 01 No. of Humidifier with complete accessories (with sensor) in good working condition about two years old.
- ➢ Rolling room automated system and conveyor system installed by Gamini Engineering

c) **Drier Section**
- ➢ 01 No. of 5ft, Browns three stage pressure drier completed with ID fan, Main fan gear motor, starter and other accessories in good working condition.
- ➢ 01 No. of 6ft. Browns DCD completed with ID fan, Main fan gear motor, starter and other accessories in good working condition.
- ➢ 01 No. of 6ft. Rodrigo four stage pressure drier completed with ID fan, Main fan gear motor, starter and other accessories in good working condition.
- ➢ 02 Nos. of Fiber mat, six cylinders completed with 2 H.P motor and switch in good working condition
- ➢ 1 No. of specially designed exhausted fans

d) **Sifters and packing**
- ➢ 02 Nos. of Middleton sifter (6'x 3.5') completed with 3.5 H.P motor and starter switch, good working condition about 4 years old.
- ➢ 01 No. of Chota Sifter (RPM 180) completed with 3.5 H.P motor and starter switch, good working condition about 4 years old
- ➢ 16 Nos. of Michie Sifters (10' x 5' steel tray) completed with 3.5 H.P motor and starter switch. good working condition.
- ➢ 03 Nos. of Suction Winnowers (600kg/hr) with conveyor, 3 H.P motor and starter switch (CCC) , good working condition about seven years old.
- ➢ 01. No. of MEYER 9000W colour separator machine installed about 4 months ago in good working condition
- ➢ 02 Nos. of NANTA 8300W colour separator machine with all accessories in good working condition about 10 years old
- ➢ 01 No. of NS 600 Super shizioka colour separator machine with all accessories in good working condition about 6 years old
- ➢ 01 No. of NS 40 Super shizioka colour separator machine with all accessories in good working condition about 6 years old

e) **Other Machines**
- ➢ 01 No. of OLYMPUS generator, 275 KVA, made in UK in good condition.
- ➢ 01 No. of fire wood splitter with 5H.P motor and starter (HARDYMEX ), in good working condition about 6 years old.
- ➢ Panel board and wiring system.
- ➢ 02 Nos." Walker" Brand new 40 .0" single action tea rollers complete with 20 HP motors, starters, in good working condition about 11 years old.
- ➢ 01 No. Walker Brand new 46.0" single action tea roller complete with 20 HP motors. starters in good working condition 2009 - about 02 years old.
- ➢ 02 Nos." Walker" Brand new 47 .0" single action tea rollers complete with 20 HP motors starters in good working condition 2007 about 04 years old.
- ➢ 02 Nos. "CCC" Brand new 47.0" single action tea roller complete with 20 H P motors, starters in good working condition 2007 about 04 years old
- ➢ 01 No. Walker 36.0 "single action tea roller complete with 10 H P motors, starters not working condition 11 years old
- ➢ 04 Nos." Fab Engineers" Brand new Roll breakers (12 x 3'. 5") with 2.5 HP motors starters in working condition about 3.5 years old
- ➢ 01 No. Brand new Tea drier - 4 feet 03 stages, Sirico" 20.0 HP Capacity 125 KG ph about 06 years old
- ➢ 01 No." Browns" brand new Tea drier - 5 feet 03 stages, Capacity 240 K g.ph 2006 about 5 years old.
- ➢ 01 No. 3 T stalk extractor completes with motor and starter 2006 about 5 years old P P Jinadasa & Company.
- ➢ 02 Nos. Middleton Shifters with motor and starter - Brand new 2006 about 5 years
- ➢ 08 Nos. Michie Shifters complete with 2 H P motors and starters, new machines
- ➢ 01 No. Chota Shifter complete with 2 HP motors and starters, new machine
- ➢ 02 Nos. Dust fans 3 feet diameter, about 3 years old working condition
- ➢ 03 Nos. suction Wind overs with 5 HP motor (CCC) about 2. - 4 years old
- ➢ 01 No. "Sunvec " Color sorting machine 7500 BTR 800W 250 kg per hour, Brand new 2008
- ➢ 01 No. Sunvec" Electronic color sorting machine GT S 1200B with air compressor, motors, about 3 years Brand new, working condition
- ➢ 01 No. Nanta" colour separator model 7000T with CD camera & motors
- ➢ 01 No. Super shizuoka" brand new color separator with electric motors about 3 years old in good working condition.
- ➢ 20 Nos. withering Through 60'x 6' timber structure complete with 2'x 2 GI mesh and Nylon netting to spreading bed 48" diameter air input fan unit complete with square and triangular mixing chamber c/w 5 1/2 HP motors, about 16 years old.
- ➢ 01. Tea cutter - 06 months, Brand new, Jinasena & Co.
- ➢ 01 No. Fibro mat machine 2005, about 6 years old
- ➢ 01 No. Tea packer about 6 years old
- ➢ I No. set of Humidifiers - 01 years old
- ➢ 01 No. Fire wood splitter with 3.5 HP motor - 2009,about 2 years
- ➢ 01 No. Generator - Denyo" Re condition K V A 150, about 6 years old.
- ➢ 01 No. Generator - Olimpus" made in UKK VA 250, Brand new, about 2 years old.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்துடன் / ஆதனங்களுடன் தொடர்புடைய உரிமைத்துவ உறுதியையும் அதனுடன் தொடர்புடைய ஏனைய ஆவணங்களையும் விலைகூறுவோர் பார்வையிடலாம். தொடர்புகளுக்கு 0912285102

*இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி*

**திருமதி.ஜி.ஏ.ரி. நிமேஷிக்கா**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**தவலம**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Daily News Classifieds, the Housewives' companion

# பந்துவீச்சில் மாற்றங்களுடன் இலங்கை இன்று பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ள வாய்ப்பு

உலகக் கிண்ண போட்டியில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் இன்று ஹைதராபாத் ராஜிவ் காந்தி அரங்கில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

பாகிஸ்தான் அணி தனது முதல் போட்டியில் நெதர்லாந்திடம் வெற்றியீட்டியதோடு இலங்கை தனது முதல் ஆட்டத்தில் தென்னாபிரிக்காவிடம் தோல்வியை சந்தித்தது. எனினும் இந்த இரு அணிகளும் அண்மையில் ஆசிய கிண்ண போட்டியில் சந்தித்தபோது இலங்கை அணி 2 விக்கெட்டுகளால் வெற்றியீட்டி இருந்தது.

நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி 81 ஓட்டங்களால் வெற்றியீட்டியபோதும் அதன் துடுப்பாட்ட வரிசை சற்று தடுமாற்றம் கண்டதோடு பந்துவீச்சிலும் குறிப்பிடத்தக்க அளவில் ஆதிக்கம் செலுத்தவில்லை.




மறுபுறம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் இலங்கையின் பந்துவீச்சு பலவீனமான நிலையில் இருந்தது. எனினும் தென்னாபிரிக்கா நிர்ணயித்த 429 ஓட்ட இமாலய வெற்றி இலக்கை துரத்திய இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் சாதகமான போக்கை பார்க்க முடிந்தது.

குசல் மெண்டிஸின் அதிரடி ஆட்டம் மற்றும் அணித் தலைவர் தசுன் ஷானக்க நீண்ட இடைவெளிக்குப் பின் அரைச் சதம் ஒன்றை பெற்று ஓட்டத்துக்கு திரும்பியுள்ளமை மற்றும் சரித் அசலங்கவின் அரைச்சதம் இலங்கை அணிக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் இன்றைய போட்டியில் இலங்கை பந்துவீச்சில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கொண்டுவரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக முன்னணி சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன மற்றும் வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமார் பதினொரு வீரர்களில் இடம்பெற வாய்ப்பு உள்ளது.

இலங்கை அணி புள்ளிகள் இன்றி புள்ளிப் பட்டியலில் 9 ஆவது இடத்தில் இருப்பதோடு அதன் நிகர ஓட்ட விகிதமும் –2.040 என பின்னடைவை சந்தித்துள்ளது. எனவே இன்றைய போட்டியில் வெற்றிபெறுவது மாத்திரமன்றி நிகர ஓட்ட விகிதத்தில் முன்னேற்றம் காண்பதும் அவசியமாக உள்ளது.

ஹைதராபாத் ராஜிவ் காந்தி அரங்கு துடுப்பாட்டத்திற்கு சாதகமானது என்பதோடு அங்கு இன்னிங்ஸ் ஒன்றின் சராசரி ஓட்டங்கள் 287 ஆக உள்ளது. எனினும் இந்த ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு உதவக் கூடியதாக உள்ளது. துடுப்பாட்டத்திற்கு சாதகமாக இருந்தபோதும் இந்த ஆடுகளத்தில் இரண்டாவது துடுப்பெடுத்தாடுவது சற்று கடினமானது என்று கூறப்படுகிறது.

## களமிறங்குகிறார் மஹீஷ் தீக்ஷன



**பாகிஸ்தானுக்கு எதிரான இன்றைய போட்டியில் சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன ஆடுவார் என்று இலங்கை துடுப்பாட்ட பயிற்சியாளர் நவீட் நவாஸ் நேற்று (09) போட்டிக்கு முன்னரான செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.**

**“கடைசிப் போட்டியில் நாம் அச்சுறுத்தலான முடிவை எடுக்காத நிலையில் நாளைய (இன்று) போட்டியில் அவர் விளையாடுவார். மஹீஷ் தீக்ஷனவின் வருகையோடு எமது பந்துவீச்சு பலமடையும்” என்று அவர் குறிப்பிட்டார்.**

## இலங்கை அணியை வீழ்த்த திட்டம் வகுக்கிறார் ஆத்தர்

பாகிஸ்தான் பயிற்சியாளர் மிக்கி ஆத்தர், இலங்கைக்கு இரண்டு ஆண்டுகள் பயிற்சி அளித்த நிலையில் இலங்கை அணியின் பலம் மற்றும் பலவீனங்களை தெரிந்து வைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.



இலங்கை இன்று (10) பாகிஸ்தனை எதிர்கொள்ளவுள்ள நிலையில் அதற்கான திட்டங்களை வகுத்திருப்பதாக ஆத்தர் தெரிவித்துள்ளார். “அவர்களின் பலம் மற்றும் பலவீனங்கள் பற்றி எனக்குத் தெரியும். எனவே அவைகளை வைத்து நாம் திட்டங்களை வகுத்துள்ளோம்” என்று அவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

மிக்கி ஆத்தர் 2019 டிசம்பர் தொடக்கம் 2021 நவம்பர் வரை இலங்கை அணியின் பயிற்சியாளராகச் செயற்பட்டுள்ளார்.

“அவர்கள் (இலங்கை) மிக ஆபத்தான அணி. எனவே அவர்களை வீழ்த்த நாம் சிறந்த நிலையில் இருக்க வேண்டும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் இஸ்ரேல் இடைவிடாது குண்டு மழை: உயிரிழப்பு 1,100 ஆக அதிகரிப்பு

காசா மீது இஸ்ரேல் நேற்றைய (09) தினத்திலும் இடைவிடாது வான் தாக்குதல்களை நடத்தியதோடு இஸ்ரேலுக்குள் பல பகுதிகளிலும் ஹமாஸ் போராளிகளுக்கும் இஸ்ரேலிய துருப்புகளுக்கும் இடையே தொடர்ந்து மோதல் இடம்பெற்று வந்தது. தீவிரமடைந்திருக்கும் இந்த மோதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,100 ஐ தாண்டி வேகமாக அதிகரித்து வருகிறது.



### காசாவில் முழு முற்றுகைக்கு உத்தரவு

முற்றுகையில் உள்ள காசா பகுதி மீது செவ்வாய் இரவு மற்றும் திங்கள் அதிகாலையில் 500க்கும் அதிகமான இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இஸ்ரேலுக்குள் ஊடுருவி எதிர்பாராத தாக்குதலை நடத்திய ஹமாஸ் போராளிகள், இஸ்ரேல் மீது சரமாரியாக ரொக்கெட் குண்டுகளை வீசி, இஸ்ரேலியர்களை சுட்டுக்கொன்று குறைந்தது 100 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்த நிலையிலேயே போர் உக்கிரம் அடைந்துள்ளது.

காசா எல்லையை ஒட்டிய இஸ்ரேலிய பகுதிகளுக்கு தொடர்ந்து போராளிகளை அனுப்பி ஹமாஸ் சண்டையிட்டு வரும் நிலையில் ஏழு தொடக்கம் எட்டு இடங்களில் நேற்றைய தினத்திலும் மோதல் இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் காசா எல்லையை ஒட்டி இஸ்ரேல் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான துருப்புகளை குவித்து வைத்துள்ளது. இது காசா மீது தரைவழி தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது.

இதேவேளை காசாவில் “மின்சாரம், உணவு, எரிபொருள் இன்றி” முழுமையான முற்றுகை ஒன்றுக்கு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன் உத்தரவிட்டுள்ளார்.

காசாவின் வான் பகுதி மற்றும் அதன் கடற்கரைகள் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருப்பதோடு அந்தப் பகுதிக்கு எந்த பொருட்களை அனுமதிப்பது மற்றும் எவைகளை வெளியே கொண்டுவருவது என்பது இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

அதேபோன்று காசாவின் எகிப்து எல்லையை எகிப்து கட்டுப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காசா பகுதியில் ஆட்சி புரியும் ஹமாஸ் அமைப்பு மீது இஸ்ரேல் கடந்த ஞாயிற்றுக்கிழமை போர் பிரகடனத்தை வெளியிட்டதோடு “நீண்ட மற்றும் கடினமான” போர் ஒன்றுக்கு இஸ்ரேல் தயாராவதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த பாரிய தாக்குதல் நடவடிக்கை தொடக்கம் 700க்கும் அதிகமான இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. தவிர, 1,200 பேர் காயமடைந்திருப்பதோடு பலரும் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர்.

இதில் தெற்கு இஸ்ரேலின் பாலைவனப் பகுதியில் இடம்பெற்று வந்த இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற 260 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் எண்ணிக்கை நேற்று (09) மாலை வரை 493 ஐ தொட்டுள்ளது என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் 2,751 பேர் காயமடைந்துள்ளனர். எனினும் இஸ்ரேல் உக்கிரமாகத் தாக்கி வரும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது.

காசாவில் 123,538 பேர் இடம்பெயர்ந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் தெரிவித்துள்ளது. அச்சம், பாதுகாப்பு பற்றிய கவலை மற்றும் தமது வீடுகள் அழிக்கப்பட்டதாலேயே பெரும்பாலானவர்கள் இடம்பெயர்ந்திருப்பதாக அது தெரிவித்துள்ளது.

2.3 மில்லியன் மக்கள் செறிந்து வாழும் காசா மீது இஸ்ரேல் பதில் தாக்குதலை ஆரம்பிக்கும் முன்னர் குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி அது எச்சரித்திருந்தது.

“காசாவில் இஸ்ரேல் பாதுகாப்பு படையின் போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் மற்றும் பீரங்கிகள் கொண்டு 500க்கும் அதிகமான ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் பயங்கரவாத இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது” என்று இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டது.

“நாம் தொடர்ந்து சண்டையிட்டு வருகிறோம். காசாவை சூழவுள்ள ஏழு தொடக்கம் எட்டு திறந்த பகுதிகளில் எமது வீரர்கள் தொடர்ந்து பயங்கரவாதிகளுடன் சண்டையிட்டு வருகின்றனர்” என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் வான் தாக்குதல்களால் காசாவில் குடியிருப்பு கோபுரங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் மத்திய வங்கிக் கட்டடம் ஆகியன தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பதோடு எல்லைகள் மூடப்பட்டிருப்பதால் அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனினும் காசாவில் உள்ள மக்கள் உறுதியான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி வருகின்றனர். “நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம், இங்கேயே இருப்போம்” என்று 23 வயது முஹமது சாக் அல்லா ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். “இது எமது நிலம். எமது நிலத்தை நாம் கைவிடமாட்டோம்” என்றும் அவர் கூறினார்.

மறுபுறம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இருக்கும் பலஸ்தீனர்கள் காசாவில் உள்ள மக்களுக்கு ஆதரவாக பேரணிகளை நடத்தி வருவதோடு இஸ்ரேலிய பாதுகாப்பு படையினருடன் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கடந்த சனிக்கிழமை மோதல் வெடித்தது தொடக்கம் இங்கு 15 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பலஸ்தீன ஆதரவாளர்கள் ஈராக், பாகிஸ்தான், அமெரிக்க மற்றும் பல நாடுகளிலும் ஆதரவு பேரணிகளை நடத்தி வருவதோடு ஜெர்மனி மற்றும் பிரான்ஸில் யூதக் கோவில்கள் மற்றும் பாடசாலைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மீதான தாக்குதல்களில் பிரேசில், பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, அயர்லாந்து, மெக்சிகோ, நேபாளம், தாய்லாந்து, உக்ரைன் மற்றும் அமெரிக்க நாட்டு பிரஜைகளும் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் பல நாடுகளும் தமது பிரஜைகளை இஸ்ரேலில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளன.

## இஸ்ரேலுக்கு நெருக்கமாக அமெ. போர் கப்பல்கள் நிலைநிறுத்தம்

இஸ்ரேலுக்கு ஆதரவை வழங்கும் வகையில் தமது இராணுவ கப்பல்கள் மற்றும் விமானங்களை இஸ்ரேலுக்கு நெருக்கமாக நிலைநிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.



இஸ்ரேலுக்கான இராணுவ உதவிகள் மற்றும் வெடிபொருள் விநியோகத்தை அதிகரிப்பதாகவும் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லொயிட் அஸ்டன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பு பலஸ்தீனர்களுக்கு எதிரான ‘ஆக்கிரமிப்பு’ என்று ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது. “ஆக்கிரமிப்பை ஆதரித்து விமானதாங்கி கப்பலை வழங்கும் அமெரிக்காவின் இந்த அறிவிப்பு உண்மையில் எமது மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பில் பங்கேற்பதாகும்” என்று ஹமாஸ் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாகுவை நேற்று முன்தினம் (08) தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இஸ்ரேலிய இராணுவத்திற்கான மேலதிக உதவிகள் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

## பாதுகாப்புச் சபை தோல்வி

இஸ்ரேல் மற்றும் காசா இடையிலான போருக்கு மத்தியில் மூடிய அறையில் நேற்று முன்தினம் (08) நடைபெற்ற ஐ.நா பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டத்தில் கூட்டு அறிக்கை ஒன்றுக்காக ஒருமித்த நிலைப்பாட்டை பெறுவதில் தோல்வி அடைந்துள்ளது.



ஹமாஸ் மீது கடுமையான கண்டனத்தை வெளியிடுவதற்கு 15 அங்கத்துவ நாடுகளுக்கும் அமெரிக்கா பாதுகாப்புச் சபையில் அழைப்பு விடுத்தது.

“ஹமாஸ் தாக்குதலை குறிப்பிடத்தக்க நாடுகள் கண்டித்தன. ஆனால் வெளிப்படையாக அனைத்து தரப்பும் முன்வரவில்லை” என்று அமெரிக்க மூத்த இராஜதந்திரி ரொபர்ட் வூட் பாதுகாப்புச் சபை கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

90 நிமிடங்கள் நீடித்த இந்தக் கூட்டத்தில் ரஷ்யா தலைமையிலான தரப்பினர், ஹமாஸை கண்டிப்பதை விட இது தொடர்பில் பரந்த அளவில் அவதானம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இதில் “பொதுமக்கள் மீதான அனைத்து தாக்குதலுக்கும் கண்டனம் தெரிவிக்கிறோம்” என்று சீனா தெரிவித்துள்ளது.

பிரச்சினை தொடர்பில் மேலும் கூட்டங்களை நடத்த எதிர்பார்ப்பதாக இஸ்ரேலுடன் 2020 ஆம் ஆண்டு இராஜதந்திர உறவை ஏற்படுத்திய ஐக்கிய அரபு இராச்சியம் தெரிவித்துள்ளது.

## எண்ணெய் விலை உயர்வு

**இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான மோதல் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் மசகு எண்ணெய் விலை 4 டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளது.**



**பிரண்ட் மசகு எண்ணெய் 3 டொலர்களுக்கு மேல் உயர்ந்து பீப்பாய் ஒன்று 87.68 டொலர்களாக அதிகரித்திருப்பதோடு, அமெரிக்க விலைகளிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.**

**இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்தில் எண்ணெய் உற்பத்தி செய்யப்படாதபோதும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் சர்வதேச விநியோகத்திற்கான மூன்றில் ஒரு பங்கு எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிலையில் கடந்த பல தசாப்தங்களில் இல்லாத அளவு பாரிய போர் வெடித்துள்ள சூழல் எண்ணெய் உற்பத்தியில் இடையூறை ஏற்படுத்தும் அச்சம் அதிகரித்துள்ளது. மசகு எண்ணெய் விலை உயர்ந்துள்ளதால் பெட்ரோல், டீசல் விலை உயர வாய்ப்பு உள்ளதாக தெரிகிறது.**

**இதேவேளை ஒரு பரந்த போர் குறித்த அச்சத்திற்கு மத்தியில் பொன் போன்ற பாதுகாப்பு முதலீடுகள் மீதான ஆர்வம் அதிகரித்ததை அடுத்து தங்கத்தின் விலையும் 1 வீதத்தால் நேற்று (09) உயர்ந்துள்ளது.**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 10ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.